தமிழ் ஆவணக் காப்பகம்

# எரிமலை

ஜூலை 2003






தாயகக்கலைஞர்களும் புலம்பெயர்வாழ் தமிழர்களும்

www.tamileelamarchive.com

www.erimalai.com

தமிழீழ ஆவணக் காப்பகம்






மழலையை நீராட்டும் கலமாக எறிகணைப்பெட்டி

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

எரிமலை

## உள்ளே...


### கட்டுரைகள்

ஆபிரிக்கக் கவிதைகளை புரிந்து கொள்வதற்கான ஒரு அறிமுகம் — பக்கம் - 44

### அணையாத தீபங்கள்

லெப்ரினன் அபிநயா — பக்கம் - 10

லெப்ரினன் நந்தினி — பக்கம் - 11

### உண்மைப் பதிவு

மலைக்குகை - மணலாறு விஜயன் — பக்கம் -20

### உணர்வுப் பகிர்வு

உயிர் ஒன்று மெய் இரண்டு - ச.பொட்டு — பக்கம் -26

### கவிதை

பயணம் - ப்ரியா ஜெயக்குமார் — பக்கம் - 23

தேடுங்கள் ஓவியங்களை - ஆத்மரிஷி — பக்கம் - 33

கருணைக்காய் ஒரு மனு - கானா நாட்டுக் கவிதை — பக்கம் - 36

நடந்து கொண்டேயிருந்தது - கொங்கோ நாட்டுக் கவிதை — பக்கம் - 37

நான் சொல்வது சரியா - த.டே.கிஸ்காட் — பக்கம் - 43

### சிறுகதை

வெடிப்பயம் -சித்திரன் — பக்கம் - 16

புருஷஇலட்சணம் - ஆதித்த நிலா — பக்கம் - 18

காலத்தின் பரிசு - ஆ.நா.பொற்கோ — பக்கம் - 24

அரியாத்தை - த.ம.சேந்தன் — பக்கம் - 28

வீடுகள் - ஆதிலட்சுமி சிவகுமார் — பக்கம் - 34

ஒரு அகதியின் நாள் - முல்லை யேசுதாசன் — பக்கம் - 38

### தொகுப்பு

நினைவுக்குறிப்பு.... — பக்கம் - 50

மீள்பார்வை — பக்கம் - 51

பதிவுகள்...... — பக்கம் - 52


**தாயகத்தில் வெடிபொருள் அகற்றல்:**
**வியாபாரங்களுக்கு மத்தியில் விசுவாசப்பணி**




**06**



**12**

**தாயகக்கலைஞர்களும்**
**புலம்பெயர்வாழ் தமிழ்மக்களும்**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

**பூகம்ப அதிர்வாகக் குமுறும் எமது போராட்டத்தின் உக்கிரத்தை உலக சமுதாயத்திற்கு உணர்த்தியவர்கள் கரும்புலிகளே**

தேசியத் தலைவர் அவர்களின் சிந்தனையிலிருந்து...




"கரும்புலி வீரர்கள் பற்றி இன்று முழு உலகமும் பேசுகிறது. அவர்களது மகத்தான தியாகத்தைக் கண்டு மலைத்துப் போய் நிற்கிறது. பூகம்ப அதிர்வாகக் குமுறும் எமது போராட்டத்தின் உக்கிரத்தை உலக சமுதாயத்திற்கு உணர்த்தியவர்கள் கரும்புலிகளே."

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு **வே.பிரபாகரன்** அவர்கள்

(எனது மக்களின் விடுதலைக்காக.....
எனும் கருத்துத் தொகுப்பில் இருந்து)

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




கலை பண்பாட்டு

அரசியல் சமூக ஏடு

இருபத்தியிரண்டாம் ஆண்டு

ஜூலை

2003

திருவள்ளுவர் ஆண்டு 2034

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

எரிமலை
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C-France,
341, Rue des Pyrenees,
75020 Paris.
Tel: 01 - 43 58 11 42
Fax: 01 - 43 58 11 91
e.mail:editor@erimalai.com
www.erimalai.com

# தலைவாசல்

## தீர்க்கமான முடிவு !

இடைக்கால நிர்வாகம் என்கின்ற நெருக்குவாரம் சிங்கள அமைப்பின் அகத்தேயும், புறத்தேயும் கணிசமான நடுக்கத்தை ஏற்படுத்திவிட்டதான தோற்றம் தென்படுகின்றது, இனவாதத்தை நியாயப்படுத்தும் இன்றைய சிறீலங்கா அரசமைப்புக்கு வெளியே நிர்வாகப்பலம் கொண்ட அமைப்பொன்றை நிறுவும் புலிகளின் வேண்டுதலே இன்று பிரதானமானதும் முக்கியமானதுமான நிகழ்ச்சித்திட்டமாக இலங்கைத்தீவின் அரசியற் போக்கில் எழுந்து நிற்கின்றது.

கடந்த பொதுத்தேர்தலுக்கு முன்னர் இத்தகையதொரு அமைப்பை உருவாக்க உதவுவதாகக் கூறிய ரணில் விக்கிரமசிங்கா தரப்பினர் பின்னர் பல்வேறு காரணங்களைக் காட்டி தமிழர் தாயகத்திற்கான இடைக்கால நிர்வாக அமைப்பை உருவாக்குவதற்கு தயக்கம் காட்டி வருகின்ற புறச்சூழலிலேயே தமிழீழத் தேசியத் தலைவர் இடைக்கால நிர்வாக விடயத்திற்கு முடிவு காணாமல் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்ற முடியாது என்கின்ற தீர்க்கமான முடிவை மேற்கொண்டார். இந்த முடிவானது தமிழர்களின் வரலாற்று அனுபவங்களின் அடிப்படையிலும், அரசியல் தொலைநோக்குடனும் எடுக்கப்பட்ட முடிவாக மதிக்கப்படுகின்றது. புலிகளைப் பேச்சுக்களுக்கு செல்லுமாறு நெருக்கும் சர்வதேச சமூகம் கூட வடக்குக்கிழக்கிற்கான இடைக்கால அமைப்பு பற்றிய தேவையை மறுக்க முடியாதவர்களாக உள்ளமை புலிகளின் காய் நகர்த்தலுக்குக் கிடைத்த வெற்றியெனலாம்.

ஆனால், சிறீலங்காவின் மையத்தேயுள்ள இனவாத அமைப்பைப் பொறுத்தவரை இணக்கப் பேச்சுக்களின் ஊடாகப் புலிகளும், தமிழ்த்தேசமும் பெறும் அங்கீகாரமும், இடைக்காலக் கட்டமைப்பு உருவாக்கமும் பீதியைத் தருகின்றது. அது சிங்களப் பேரரசினைச் சிதைத்துவிடும் கூர்மையான ஆயுதமாக விபரிக்கப்படுகின்றது. ஒஸ்லோ பேச்சுக்களின் போது தமிழர்களின் உள்ளீடான சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொண்ட ரணில் தரப்பு அதற்குப் பதிலாக கூட்டாட்சி அடிப்படையிலான தீர்வுக்கான புலிகளின் சம்மதத்தைப் பெற்றது. ஆயினும் சிங்கள அமைப்பு திருப்தியடையவில்லை. புலிகள் தமிழீழத்தைக் கைவிட வேண்டும் என்கின்ற ஒற்றைவழிப்பாதையிலேயே அது செல்ல விரும்புகின்றது. நீண்ட ஒடுக்குமுறைக்கு ஆளான தமிழீழ தேசம் பெரும் விலை கொடுத்துப் பெற்ற சுயநிர்ணய உரிமைக்கான அங்கீகாரத்தை நிராகரிப்பதற்கு அது விளைகின்றது. இதன் தொடர்ச்சியே உண்மையான இடைக்கால நிர்வாக உருவாக்கத்தை முழுச் சிங்கள அமைப்பும் நிராகரிக்கும் போக்குப் பார்க்கப்பட வேண்டும். ரணில் விக்கிரமசிங்க உட்பட எந்தச் சிங்களத் தலைமையும் உண்மையான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை ஆதரிக்கும் அல்லது நியாயப்படுத்தும் வலுவான நிலைப்பாட்டை எடுக்கவில்லை. மாறாக புலிகளினால் நெருக்கப்பட்டு, பேச்சுவார்த்தைகள் மூலம் பெறப்படும் பொருளாதார லாபங்களால் தூண்டப்பட்டே இடைக்கால நிர்வாகம் பற்றிய விடயத்திற்கு பதில் தேடுபவர்களாக உள்ளனர்.

தமிழர் தலைமை தெளிவாகவுள்ளது. ஏமாறும் நிலையிலோ, ஏமாற்றப்படுவதை அறியாத நிலையிலோ அவர்கள் இல்லை. இன்னும் நுட்பமாகக் கூறினால், சர்வதேச சமூகம் கூட நியாயமாக நடக்கும் பட்சத்திலேயே தகுந்த மதிப்பை தமிழர்களிமிருந்து பெறும் என்கின்ற சூழல் நிலவுகின்றது. எனவே, ரணில் அரசம், சிங்கள தேசமும் இடைக்கால நிர்வாக விடயத்தில் தீர்க்கமாக முடிவெடுக்க வேண்டிய கட்டத்தில் உள்ளனர். இலங்கைத்தீவின் வரலாற்றில் அது முக்கியமான முடிவாகவும் அமையப்போகின்றது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## கரும்புலிகள் நாள்



ஜூலை–5
2003




தமிழீழத்தில் நடைபெற்ற
கரும்புலிகள் நாள்
நிகழ்வுகளில் இருந்து...





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





ஊரறியோம் உங்கள் உறவறியோம்
தாய், தந்தையிட்ட பேரறியோம் - ஆனால்
புகழ் அறிந்து மெய்சிலிர்த்து நின்றோம்.
மாலை இட்டு நஞ்சணிந்தோம் கழுத்தில் - உம்
பாதங்கள் போனவழி பூச்சொரிந்து நின்றோம்.




www.tamileelamarchive.com

தமிழர்கள் இயல்பு வாழ்வுக்குத் திரும்பிடுவதற்கு இரண்டு அச்சுறுத்தல்கள் எதிர்நோக்கப்படுகின்றன. ஒன்று சிறீலங்கா இராணுவம் பாரம்பரிய இடங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பது. சிறீலங்கா அரசு இந்த அச்சுறுத்தலை உயர் பாதுகாப்பு வலயம் என்று நியாயப்படுத்தல் மூலம் விடுத்துக் கொண்டிருக்கிறது. மற்றைய அச்சுறுத்தல் இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து விடுவிக்கப்பட்ட பகுதிகளில் எதிர்கொள்ளப்படும் மிதிவெடி, பொறிவெடி, கண்ணிவெடி என்ற வெடி பொருட்களிலான அச்சுறுத்தல். மொத்தத்தில் இரண்டுமே சிறீலங்கா இராணுவத்தினரால் இயல்பு வாழ்வுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள தடங்கல்களே ஆகும்.

இந்த இரண்டு அச்சுறுத்தல்களில் இருந்தும் விடுவித்து தமிழர்களை இயல்பு வாழ்வுக்குத் திரும்பச் செய்ய விடுதலைப் புலிகள் முயன்று வருகின்றார்கள். உயர்பாதுகாப்பு வலய விவகாரத்தில் வெளிநாட்டு இராணுவ நிபுணர்களின் ஆலோசனை பெறப்படுகின்றது. அதே போல வெடிபொருள் அகற்றல் விடயத்திலும் வெளிநாடுகளின் உதவி பெறப்பட்டிருக்கிறது. உயர்பாதுகாப்பு வலயம் இன்னும் தீர்க்கப்படாத தடையாக - அச்சுறுத்தலாக இருக்கின்ற கட்டத்தில் வெடி பொருட்களை அகற்றும் விடயம் என்ன நிலையில் உள்ளது?

வெடிபொருட்களிலான அச்சுறுத்தல் எல்லா வகையான அச்சுறுத்தல்களையும் போல தமிழர் பிரதேசத்தில்தான் உள்ளது. தமிழர் தாயத்தின் எந்தெந்தப் பகுதிகள் தனது கட்டுப்பாட்டில் இருந்தன என்று சிறீலங்கா அரசுகள் பழம் பெருமை பேசுகின்றனவோ அங்கெல்லாம் வெடிபொருட்களின் அச்சுறுத்தல்கள் தமிழருக்கு உண்டு. அந்தளவுக்கு தாம் கட்டுப்பாட்டில் வைத்திருந்ததாகக் கூறும் தமிழர் நிலங்களில் அவர்களின் படை தமது பாதுகாப்புக்காக வெடிபொருட்களை புதைத்து விட்டிருந்தது. அவை இப்போது தமிழர்களின் உடல் பாகங்களையும் உயிரையும் எடுப்பவையாக உள்ளன.

சிறீலங்கா இராணுவ அதிகாரி ஒருவரின் வாக்குமூலத்தின்படி யாழ் குடாநாட்டில் 11 லட்சம் முதல் 15 லட்சம் வரையான மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன. அதே போன்று வன்னிப் பிரதேசத்தில் மட்டும் 20 இலட்சம் மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன. சிறீலங்கா இராணுவத்தினரை ஆதாரமாகக் கொண்டு தரப்படும் இவ்விபரங்களில் ஒரு






www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தகவல் இல்லை. இம் மிதிவெடிகளில் எந்தெந்த நாடுகளில் எத்தனை எத்தனை மிதிவெடிகள் கொள்வனவு செய்யப்பட்டன என்பதே அதுவாகும்.


ஏனெனில் சிறீலங்கா இராணுவம் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு நாட்டினதும் மிதிவெடிகள் ஒவ்வொரு அளவான ஆயுட்காலத்தைக் கொண்டன. இராணுவம் கொள்வனவு செய்துள்ள மிதிவெடிகளில் மிகக் குறைந்தளவான ஆயுட்காலத்தையுடையவற்றை பாகிஸ்தானே வழங்கியுள்ளது. 4mki ரக அம்மிதிவெடிகள் குறைந்தது முப்பது வருடங்கள் வரை இயங்கு நிலையில் இருந்து உடலவயவங்களையோ உயிரையோ எடுக்கவல்லன. அதே போன்று சீனாவிடம் வாங்கிய T72 ரக மிதிவெடிகள் சுமார் ஐம்பது வருடங்கள் உயிர்ப்புடன் இருக்கும் . ஐம்பது வருடமென்பது இன்றைய நிலையில் ஏறத்தாழ ஒரு சிறுவர் சமுதாயத்தின் ஆயுட்காலத்துக்கு ஒப்பானது.

வன்னியிலும் யாழ்ப்பாணத்திலுமாக ஏறக்குறைய 30




# தாயகத்தில் வெடிபொருள் அகற்றல்: வியாபாரங்களுக்கு மத்தியில் விசுவாசப்பணி

லட்சம் மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன. மேற்படி இரு பிராந்தியங்களிலும் வாழும் மக்கள் தொகையை குத்துமதிப்பாக பத்து லட்சம் எனக் கொண்டால் தமிழர் ஒருவரை




இலக்கு வைத்து மூன்று மிதிவெடிகள் காத்திருக்கின்றன என தாக்கத்தின் பாற்பட்டுக் கூறலாம். இதன் மூலம் தமிழர்கள் போரில்லாத ஒரு சூழலிலும் எத்தகைய உயிர்ப்பயமுறுத்தலை எதிர்கொள்கின்றார்கள் என்பதைப் புரிந்து கொள்ளலாம். இதை காலம் தோறும் .இடம்பெற்று வந்துள்ள மிதிவெடியில் அகப்பட்டதான உயிரிழப்புக்களும் அங்கவீனங்களும் உறுதி செய்துள்ளன.

இதனைக் கருத்தில் கொண்டு சமாதான காலத்துக்கு முன்பாகவே விடுதலைப்புலிகள் தாம் மீட்ட இடங்களில் வெடிபொருளகற்றும் பணியை ஆரம்பித்து விட்டார்கள். விடுதலைப்புலிகளின் படையணிகள் தாம் மீட்டெடுத்த பகுதிகளில் உடனடி வெடிபொருட்களை அகற்றும் பணியை மேற்கொண்டன. அதே போன்று தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மனித நேயக் கண்ணி வெடியகற்றும் பிரிவும் அப்பணியை மேற்கொண்டது இப்போதும் மேற்கொண்டு வருகின்றது. இதன் மூலம் கணிசமான பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர முடிந்துள்ளது.

ஆனால், சமாதானத்துக்கான காலத்திலோ மிதிவெடியகற்றும் பணி என்பது சர்வதேச மயப்பட்ட அல்லது சர்வதேசத்தலையீட்டுக்குட்பட்ட விடயமாகி விட்டது. இப்போது சர்வதேச ரீதியாகச் செயற்படும் கண்ணிவெடியகற்றும் பிரிவுகள் தமிழர் தாயகத்தில் வேலைத்திட்டங்களைத் தொடங்கியுள்ளன. ஆனால் இந்தப் பிரிவுகளின் கண்ணிவெடியகற்றும் வேகம், அதற்கான செலவீனம் என்பவற்றை நோக்கும்போது அது ஒரு வியாபாரமாகிப் போய்விட்டுள்ளது போல் தெரிகின்றது. தமிழர் தாயகத்தில் வெடிபொருட்களை அகற்றுவதை ஒரு வியாபாரமாகத்தான் சர்வதேச ரீதியாகச் செயற்படும் கண்ணிவெடியகற்றும் பிரிவுகள் கையாள்கின்றன.

உண்மையில் சர்வதேச தொண்டர் ஸ்தாபனங்களிடம் உதவிப் பணிக்கென வழங்கப்படும் நிதியில் இருபது சதவீதமானவையே தமிழர்களை வந்தடைகின்றன. மீதம் எண்பது வீதமானவையும் அவர்களின் ஆடம்பரச் செலவுகளுக்கும், நிர்வாகம் கவனிப்புக்கும் போய்விடுகின்றன. இது

ஞாபகன்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கண்ணிவெடியகற்றும் பிரிவுகளுக்கும் பொருத்தமானதே சர்வதேச ரீதியால் செயற்படும் இப்பிரிவால் உள்ள அனைத்து வெடிபொருளகற்றும் நிபுணர்களும் வெளிநாட்டவர்களாகவே உள்ளனர். அவர்களின் போக்குவரத்துக்கான ஆடம்பரமான குளிரூட்டப்பட்ட வாகனங்கள் கூட அந்தந்த நாடுகளில் இருந்தே கொண்டுவரப்படுகின்றன. இவற்றுக்கும் அவர்களின் ஊதியத்திற்கும் என பல மில்லியன்கள் செலவாகின்றன.

இதனை எழுமாறாக UNDP யின் அறிக்கையில் இருந்தே கணிப்பீட்டுக் கொள்ளலாம். இது கடந்த ஆண்டில் ஏப்ரல் முதல் டிசம்பர் வரையான ஒன்பது மாத காலத்தில் 998 மிதிவெடிகளையே அகற்றியது. இதற்காக அது 300 மில்லியன் ரூபாய்களைச் செலவிட்டிருக்கிறது. அதாவது ஒட்டுமொத்தச் செலவினங்களோடு ஒரு மிதிவெடியை அகற்றுவதற்கு அது மூன்று இலட்சம் ரூபாய்களைச் செலவிட்டுள்ளது இவ்வாறே தமிழர் தாயத்தில் மிதிவெடியகற்றும் டிடிஜி, ஹலோ ட்ரஸ்ட், யுன்டிபி,, எஃப்எஸ்டி (DDG, Hello Trust, UNDP, FSD) போன்ற சர்வதேச மிதிவெடியகற்றும் பிரிவுகளின் வேகம், செலவு என்பன உள்ளன. போர்க்காலத்தில் யாழ்ப்பாணத்தில் பணியில் ஈடுபட்ட சிம்பாவே குழு ஒரு மிதிவெடியை அகற்ற 15 ஆயிரம் ரூபாவைச் செலவிட்டது. அது ஆக 675 மிதிவெடிகளை மாத்திரமே பல மாதங்களில் அகற்றியது.

இவற்றை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மனிதநேயக் கண்ணிவெடியகற்றும் பிரிவின் பணியோடு ஒப்பிட்டால் பயன்பாடு மலைக்கும் மடுவுக்குமான வித்தியாசமாகவே இருக்கும். அது ஒரு மிதிவெடியை சராசரியாக ஐம்பது ரூபா செலவில் அகற்றி விடுகின்றது. அத்தோடு UNDP என்ற வெளிநாட்டுப் பிரிவு 998 மிதிவெடிகளை மட்டும் அகற்றிய ஒன்பது மாத காலத்தில் புனர்வாழ்வுக் கழக மனிதநேயக் கண்ணிவெடியகற்றும் பிரிவு 40 ஆயிரம் மிதிவெடிகளை அகற்றியுள்ளது என்பது எதனால் நடந்த அதிசயம்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மனித நேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவு தாயக இளைஞர், யுவதிகளையே கொண்டியங்குகின்றது. எப்போதுமே மக்கள் தமக்கான வேலையைத் தாமே செய்யும்போது அபரிமிதமாக வேகமும், நேர்த்தியும் இருக்கும். அதுவே கண்ணிவெடிகளை அகற்றும் விடயத்திலும் செயற்பாடாக உள்ளது. தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தாயக மக்களின் வாழ்வை இயல்பு நிலைக்குக் கொண்டு வரப் பல வழிகளிலும் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அதன் ஒரு பக்கப் பணியே இந்த மிதிவெடியகற்றுதலாகும்.

இங்கே புலம்பெயர்ந்துள்ள தாயக மக்களுக்கு ஒரு செய்தியுண்டு. அவர்களின் கடின உழைப்பால் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பெறும் நிதி வீணடிக்கப்படவில்லை என்பதும் அது பல மடங்கு வேகமான பணியை தாயகத்தில் ஆற்றுகின்றது என்பதுமாகும். இது அவர்கள் திருப்திப்பட்டுக் கொள்ளக்கூடிய ஓர் விடயம்.

அதேவேளை இது இன்னொரு யதார்த்தத்தையும், கொண்டுள்ளது. அது தமிழர் தாயகத்தில் எத்தனை வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்கள் வந்து செயற்பட்டாலும் அவை அதிகமாக எதனையும் சாதித்துவிடப்போவதில்லை என்பதாகும். இன்னும் சற்று உறைக்கும்படி சொல்வதெனில் அவை யார் யாரோ சுரண்டல்வாதிகளுக்கு எம்மைப் பணயம்





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

வைத்துக் கொண்டிருக்கின்றன எனலாம் மொத்தத்தில் தாயகத்தை மீட்பதும் கட்டியெழுப்புவதும் ஈழத்தமிழர்களாகவே இருக்கிறார்கள், இருக்கப் போகின்றார்கள். இருக்கவேண்டும் அதுவே யதார்த்தமும் கூட.

முதலில் வெளிநாட்டு நிபுணர்கள் வடக்கு கிழக்கில் கண்ணி வெடிகளைப் பூரணமாக அகற்ற ஐம்பது ஆண்டுகள் வரை செல்லும் எனக் கூறியிருந்தார்கள். இதுவே மேற் சொன்ன கருத்தை உறுதி செய்யப் போதுமானது. அதன்பின்பு இது பற்றிக் கருத்து வெளியிட்ட விடுதலைப்புலிகள் அவ் வளவு காலம் தேவையில்லை நான்கு அல்லது ஐந்து ஆண்டுகள் போதுமானது எனத் தெரிவித்திருந்தனர். அர்ப்பணிப்பு உணர்வு கொண்டவர்களால் இதனைச் செய்து முடித்து விட இயலும் என்பதையே இதுவரையான செயற்பாடுகள் காட்டுகின்றன. இந்த நிலையில்தான். வெளிநாடு ஒன்றின் வெடிபொருளகற்றும் பிரிவு ஆறு ஆண்டுகள் செல்லும் எனக் கூறியுள்ளது.

இப்போது தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மனித நேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவு தனது பணிகளை இன்னும் துரிதப்படுத்தியுள்ளது. இப்போதைய சமாதானத்துக்கான சூழ்நிலை அதற்கு மிகக் குறைந்தளவிலான நவீன உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்துள்ளது. இது ஒப்பீட்டளவில் இதுவரை இருந்ததை விட கூடிய பாதுகாப்பை அதன் வீரர்களுக்குக் கொடுக்கக் கூடியது. அத்தோடு சர்வதேசத்தரத்திலான பயிற்சிகளைப் பெற்ற 39 பேர் கொண்ட அணியொன்று இம்மாதம் பணியை ஆரம்பித்துள்ளது.

இம்மாதத்திலேயே புனர்வாழ்வுக் கழகம் சகல விதமான கண்ணிவெடிச் செயற்பாடுகளையும் ஒருங்கிணைப்பதற்கான செயலகத்தையும் கிளிநொச்சியில் அமைத்திருக்கின்றது. இதிலே வெளிநாட்டு கண்ணிவெடியகற்றும் பிரிவுகள் பலவும் ஒருங்கிணைக்கப்படுகின்றன. இதன் மூலமாக துரிதமான பணி எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆயினும் இவற்றுக்கு அப்பால் வெடிபொருட்களை அகற்றுவதில் ஒரு சிக்கல் எதிர்கொள்ளப்படுகின்றது. இராணுவத்தினர் தாம் நிலைகொண்டிருந்த பகுதிகளில் எங்கெங்கே எத்தனை எத்தனை வெடிபொருட்களை வைத்தார்கள் என்பதை இனங்காண்பது பெரும் நெருக்கடியாக உள்ளது. படையினர் வழங்குகின்ற வரைபடங்களை மட்டும் நம்பிச் செயலில் இறங்க முடியாத நிலையே இருக்கின்றது. பளை தர்மக்கேணிப் பகுதியில் 30 கண்ணிவெடிகள் மட்டுமே தம்மால் புதைக்கபட்டன எனப் படையினர் குறிப்பிட்ட வரைபடத்தை வழங்கியிருந்தார்கள். ஆனால் அவ்விடத்திலே ஆயிரத்து ஐம்பது கண்ணிவெடிகள் மீட்கப்பட்டன.

படையினர் தாம் கொள்வனவு செய்து புதைத்ததாகக் கூறிய வெடிபொருட்களின் எண்ணிக்கையை விஞ்சி விடாதவாறே வரைபடங்களைச் சமர்ப்பிக்கிறார்கள். உண்மையில் வெளியிடப்பட்ட எண்ணிக்கையை விடக் கூடுதலாகவே சிறிலங்கா படையினர் புதைத்திருக்கிறார்கள் என்பதால் இத்தகைய எண்ணிக்கையில் அகற்றப்படுகின்றன. அதனால் அவற்றை மட்டும் கொண்டு கண்ணிவெடியகற்றும் பணி இலகுபடுத்தப்பட்டுள்ளது என கூறமுடியாதுள்ளது.

இப்போதும் போருக்கான மனநிலையுடனே படையினர் இருக்கின்றார்கள். புதிது புதிதாக காவலரண்களை அமைத்து புதிதாக மிதிவெடிகளையும் புதைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் ஒரு இரட்டை வேடமாக தாமும் வெடிபொருட்களை அகற்றுவதாகவும் அதற்கு உதவுவதாகவும் கூறிச் செயற்படுகின்றார்கள். இதற்காக அண்மையில் தாம் மிதிவெடிகளைப் புதைத்த 984 பிரதேசங்களின் வரைபடங்களை யாழ் அரச செயலகத்தில் இயங்கும் மிதிவெடிச் செயற்பாட்டுக் குழுவிடம் கையளித்துள்ளனர் ஆனால் இவற்றில் கடற்படையினர், விசேட அதிரடிப்படையினர் ஆகியோர் மிதிவெடிகளைப் புதைத்த இடங்களின் வரைபடங்கள் இல்லை.

இதனால், இந்த வரைபடங்கள் தமிழர் தாயத்ததை வெடிபொருட்களின் அச்சுறுத்தல் இல்லாத பகுதியாக மாற்ற எந்தளவுக்கு உதவப் போகின்றன? கண்ணிவெடியகற்றும் பிரிவினர் படையினரின் ஆக்கிரமிப்பில் இருந்த பகுதிகள் முழுவதும் மிதிவெடிகள், பொறிவெடிகள், கண்ணிவெடிகள் என்பன புதைக்கபட்டுள்ளன என்ற கருதுகோளின் அடிப்படையில் அங்குலம் அங்குலமாக துப்பரவு செய்ய வேண்டியிருக்கின்றது. அதுவே சரியானதாகவும் யதார்த்தமானதாகவும் உள்ளது. இதற்கு கண்ணிவெடியகற்றும் பிரிவுகளின் கடினமான விரைவான பணியே வேண்டப்படுகின்றது. இதனைப் பூரணமான முறையில் வெளிநாடுகளின் கண்ணிவெடியகற்றும் பிரிவினரிடம் இருந்து எதிர்பார்க்க முடியாது. ஆகையால் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மனித நேயப் பிரிவே தீவிரமாக செயற்பட வேண்டியுள்ளது.

# எந்தையரே

வெப்பம் நீரை ஆவியாக்கி
மேல்க் கொண்டு சென்று
முகிலாக்கி ஒன்று திரண்டு
ஈரப் பதனடைந்து மாரிபொழிவது
இயல்பு.

விளை நிலம் செழிப்புறும்.
பயிர்கள் விளையும்.
கானகம் வான்நோக்கி உயரும்.
பட்சிகள், விலங்குகள் கூடிக்குலவும்.
மனிதன் மகிழ்வான்.
இதுவும் இயல்பு.
எம்மின உயிர்கள் ஆவியாகின.
விழிகள் ஈரமடைந்து
கண்ணீர் மாரி பொழிவது இயல்பானது.
வழக்கம் குழம்பிய வாழ்க்கை இயல்பானது.

இதனால்

மனிதர் கூடினர், ஒன்றுதிரண்டனர்.
கரும்பறவையாய் செம்பறவையாய்
ஆவியாகினர்.

ஆக

விளைநிலம் செழிக்க
பயிர்விளைய
கானகம் வான்உயர
பட்சிகள், விலங்குகள்
கூடிக் குலவ
மனிதம் மகிழ
இயல்பாக்கிய எந்தையரே!
பாதம்தொட்டு வணங்கி
உளத்தில் உரிமைக்காய்
உறுதி பூண்டுள்ளோம்.




வள்நாடன்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்






## துள்ளித் திரிந்த சின்னப்புலி



லெப்ரினன் அபிநயா

அபிநயாவின் நெட்டையான, சற்றுக் குண்டான தோற்றம் அவ்வணியிலேயே அவளைத் தனியாக இனங்காட்டும். முகம் நிறையச் சிரிப்புடன் எந்நேரமும் துள்ளித்திரியும் இவள் பயிற்சியிலும் இதே ஆர்வத்துடன் செயற்படுவாள். அந்த அணியிலேயே சிறியவள் என்பதால் எல்லோருக்கும் விருப்பமுள்ளவளாக இருந்ததுடன், தனது குழந்தைத்தனமான பேச்சினால் அனைவரையும் கவர்ந்து விடுவாள்.

1998 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் போராட்டத்தில் தன்னை இணைத்துக்கொண்ட அபிநயா சிறுவயதிலேயே சிங்கள மொழியில் கதைக்கத் தெரிந்திருந்தாள். சிலவேளைகளில் தனக்குத் தெரிந்த சிங்களப் பாடல்களைப் பாடி எல்லோரையும் சிரிக்க வைப்பாள். இவளுக்குக் கோபம் வந்தால் சிங்களத்தில்தான் ஏசுவாள். எதுவுமே விளங்காத மற்றவர்கள் கொல் என்று சிரிப்பதுடன் அவளது கோபமும் பறந்து விடும். தாக்குதல் பயிற்சிகளின்போது சிங்களத்தில் கத்திச் சண்டைப் பயிற்சி செய்வாள்.

தான் நன்றாகச் சண்டை செய்ய வேண்டும் என்ற ஆர்வம் இவளிடம் நிறையவே உண்டு. எதிரியை ஓடஓட விரட்டிய ஓயாத அலைகள் - 03 சமரில் இவள் இரு காலிலும் காயமுற்றாள்.

எப்போதும் தான் ஒரு வேவு நடவடிக்கைக்குச் செல்ல வேண்டும் என பொறுப்பாளரிடம் அடம்பிடிப்பாள். இறுதியில் அவளின் திறமையும், ஆர்வமும் அப்பணிக்கு அவளைத் தெரிவாக்கியது. தரையிறக்கச் சமரின் ஒரு கட்டமான இத்தாவில் பகுதி தாக்குதல் நடவடிக்கையில் வேவு அணியில் ஒருவராகச் செயற்படும் சந்தர்ப்பம் இவளுக்குக் கிடைத்தது. இறுதியில் 5 பேர் கொண்ட அணிக்குரிய வேவுப் பொறுப்பாளராக உயர வைத்தது.

சாவகச்சேரிப் பகுதியில் நின்ற அபிநயா வேவுக்குச் சென்று வந்த பின்பு தான் பார்த்தவற்றை துல்லியமாக குறிப்பிடுவதுடன் எதிரியின் உரையாடலையும் கேட்டு வந்து எமக்குத் தமிழாக்கம் செய்வாள். கேட்பதற்கு சுவாரசியமாகவும் இருக்கும். அதே நேரம் அவளது திறமையை எண்ணி மனம் வியக்கும் தனித் துணிவு என்பது அபிநயாவுடன் கூடப் பிறந்த ஒன்று.

சில நாட்களின் பின்னர் இவள் அரியாலைப் பகுதிக்கு மாற்றப்பட்டாள். அதுவே அவளது இறுதிக் களமாகவும் அமைந்தது. நல்ல துணிச்சல்காரியாக, ஒரு நல்ல வேவுப்புலியாக, எல்லோருக்கும் நல்லவளாய், வல்லவளாய் மண்ணுக்காய் வாழ்ந்து வரலாறாகிப் போன அபிநயாவின் நினைவுடனும் நடக்கின்றோம் விடியலை நோக்கி.


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




-புரட்சி-

## தோற்றத்திலும் உயர்ந்த ஆளுமை



லெப்ரினன் நந்தினி

இவளது காப்பரணைக் நடந்து போகும் எவரும் "ஆ... A9 என்னமாதிரி?" என்று கேட்டுவிட்டுப் போகத் தவறுவதில்லை. இது அவளது நிறத்திற்காக அவளுக்கு வைக்கப்பட்ட செல்லப் பெயர். எல்லோராலும் A9 என பிரதான வீதியின் பெயரால் செல்லமாக அழைக்கப்படுகின்ற நந்தினியின் தோற்றம் சிறியதாக இருப்பினும் தனது தோற்றத்துக்கு அப்பால் ஆளுமையை உயர வைத்தவள் இவள்.

தமிழீழத்தில் முத்துக்கள் விளையும் மன்னார் மாவட்டத்தைச் சொந்த இடமாகக் கொண்ட இவள் தாயகத்திலும், தாயக மக்களிலும் மிகவும் நேசம் கொண்டவள். அதனால் தாய் மண்ணுக்குத் தான் செய்யவேண்டிய கடமையை உணர்ந்தாள். கள வாழ்வினுள் புகுந்தாள். 1998 ஆம் ஆண்டு பத்தாவது திங்களில் அவளது பாதம் போராட்டப் பாதையில் பதிக்கப்பட்டது.

பயிற்சிப் பாசறையில் ஆரம்பப் பயிற்சியை முடித்துக் கொண்டு மாலதி படையணிக்கு அனுப்பப்பட்ட இவளை சண்டைக் களம் உடனேயே வரவேற்றது. தொடர்ச்சியாக அனைத்து முனைகளிலுமே தாக்குதல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தமையினால் தாக்குதல் அணிகள் முழுவதுமே களமுனைக்கு நகர்த்தப்பட்டிருந்தன. அந்தப் போர்க் காலத்தில்தான் அவளும் களமுனைக்கு வந்தாள்.

அமைதிக்கும், கலகலப்புக்கும் இடையேயான ஒரு வித்தியாசமான சுபாவம் இவளுடையது. தனக்குத் தெரியாத விடயத்தைப் பற்றி யாராவது கதைத்தால் அதனை முழுமையாக அறியாமல் அவ்விடத்தை விட்டு போகமாட்டாள். எப்போதும் புதிய விடயங்களை அறிய வேண்டுமென்ற ஆர்வம் இவளோடு கூடப் பிறந்த ஒன்று.

வோட்டசெற், ஓயாத அலைகள் 03, ஓயாத அலைகள் 04 என விரிந்த இவளது களமுனைகள் இன்னும் தொடர்ந்தன. இறுதியாக தீச்சுவாலைக் களம் இவளுக்காயும் காத்திருந்தது. ஏப்ரல் மாதத்தின் 25ம் நாள் எமக்காய் தீ சுமந்து வந்த பகைவனையே தீக்குளிக்க வைத்து அனுப்பிய அற்புதமான சமர். உலகின் விழிகளெல்லாம் இங்கே குவிந்த உக்கிர சமர். அந்த வெற்றிக்காகத் தம்மை அர்ப்பணித்த வீரமிகு வேங்கைகளோடு லெப்ரினன் நந்தினியும் விழி மூடிப்போனாள்.

இன்றும் A9 வீதியில் கால் வைக்கின்றபோது நந்தினியின் நினைவே ஓடி வந்து நிற்கும். இவளைப்போல் எத்தனையோ பல மாவீரர்களின் நினைவுகளைச் சுமந்தபடி இந்த A9 வீதி. ஈழம் விடிவாகும் என்ற நினைவோடு தேசத்தின் வீரர்கள்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# தாயகக்கலைஞர்களும் புலம்பெயர்வாழ் தமிழ்மக்களும்

திலீபன்

கடந்த சித்திரை, வைகாசி, ஆனி மாதங்களில் தாயக இசைக்கலைஞர்களின் ஐரோப்பிய இசைப்பயணத்தில் நோர்வே, டென்மார்க், நெதர்லான்ட், ஜேர்மன், பிரான்ஸ், சுவிஸ் போன்ற நாடுகளில் தாயக இசை வெள்ளம், மண்ணின் ராகங்கள், தாயகப்பரணி என புலம் பெயர்வாழ் எம்மவர் கேற்ப தலைப்புக்களோடு பல ஆயிரக்கணக்கான மக்களை உள்வாங்கி மிகவும் வெற்றிகரமான நிகழ்வுகளாக நடந்தேறியது. இது புலம்பெயர்வாழ் தமிழ்மக்களின் புதிய திருப்பம் என குறிப்பிடுவதோடு, தாயகக்கலைஞர்களை நாம் எப்போதும் எந்த சந்தர்ப்பத்திலும் மறந்துவிடவில்லை, நாம் எப்போதும் விடுதலையின் பக்கமே நிற்கின்றோம் இந்தச்செய்தியை எங்கள் தலைவனிற்கு போய்ச் சொல்லுங்கள் என உறுதி பூண்டு நின்ற நிகழ்வுகளாகவே அமைந்திருந்தது. பல ஆயிரக்கணக்கான மக்கள் வெள்ளம் மண்டபங்களை நிறைத்திருக்க நடந்தேறிய இவ்விசைவெள்ளம் சாட்சிகளாக எம் கண் முன்னே நிற்கின்றது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



முன்னொரு காலத்தில் சினிமாப்பாடல்களையும், சினிமாக்கலைஞர்களையும் கேட்டும் பார்த்தும் நின்ற எமது மக்கள் இன்று விடுதலையின்பால் எமக்குக்கிடைத்திருக்கும் தேசியத்தலைவனின் வழிகாட்டலின்பால் விடுதலைப்பாடல்களையும், தாயகக்கலைஞர்களையும் வரவேற்கக் காத்திருக்கிறார்கள் என்பது கடந்த காலங்களில் புலம்பெயர் தேசங்களில் நடந்தேறிய இவ்விசை நிகழ்வுகள் கட்டியம் கூறி நிற்கின்றது.

தாயகத்திலிருந்து புறப்படும்போது அண்ணையின் விருப்பத்தின் பேரில் புறப்படுகின்றோம். புலம்பெயர் வாழ் தமிழ்மக்களின் உணர்வுகள் எவ்வாறு இருக்குமோ. இது எங்களிற்கு வெற்றி அழிக்குமோ என நினைத்து வந்த தாயகக்கலைஞர்களிற்கு ஐரோப்பிய வலம் அவர்கள் நினைத்ததற்கு எதிர்மாறாகவே அமைந்திருந்தது. எமது தலைவன் புலம்பெயர் வாழ் மக்கள்மீது கொண்டிருக்கும் பற்றும், நம்பிக்கையும் எந்தளவிற்கு உண்மையென்பதை தாயகக்கலைஞர்கள் புரிந்து கொண்டிருப்பதோடு, புலம்பெயர்வாழ் தமிழ்மக்களும் தலைவன் இடும் ஆணையை எப்போதும் எந்தச்சந்தர்ப்பத்திலும் நிறைவேற்றக்காத்திருக்கிறோம் என்பதை நிருபித்துக்காட்டியுள்ளார்கள் என்பதுதான் உண்மையும் நிதர்சனமுமாகும்.

## தாயக இசைவெள்ளம்



சுவிற்சலாந்து





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



தாயகப் பரணி



நெதர்லாந்து







மண்ணில் உயிர்த்த நாதம்



டென்மார்க்





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




தாயக பரணி



பிரான்ஸ்










தாயக பரணி



டென்மார்க்








www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# வெடிப்பயம்

## சித்திரன்




இப்படியெல்லாம் நடக்கும் என்று நீண்ட நாட்களாய் செய்திருந்த கற்பனை பலித்துவிட்ட நிறைவு அவனுக்கு. அந்தப் பெயர் கூட மனதுக்குள் சூட்டி அடிக்கடி சொல்லிப் பார்த்துக் கொண்டது. அப்படியே இச் சமருக்கு பொருந்திவிட்டதே என எண்ணியபோது பூரிப்பில் திளைத்தது மனம். 'இனியென்ன கெதியில ஊருக்குப்போய் வீட்டில இருக்கலாம்' திருப்திப்பட்ட மனதுக்குள்ளும் ஒரு ஏக்கம் படர்ந்தது. 'வீடு வீடா இருக்குமோ?' இராணுவத்தின் இராட்சத மனங்களின் கோரம் எழுந்து அச்சுறுத்தியது. அந்த மனங்களின் பிரதிபலிப்பு வீட்டின் சுவர்களில், கூரைகளில் மோதியிருக்கக் கூடாதென பிரார்த்தித்தான் எப்படி கலங்காது இருக்க முடியும்? கூலிக்கென தன் உறவுகளை விட்டுப் பிரிந்து வந்தவன்- பேரினக் குரூரங்களைப் பருகியவன் - எப்போது வெடி விழுமோ எனப் பயந்து கொண்டிருப்பவன் தன் உணர்ச்சிகளை வீட்டின் மேல் காட்டாதிருந்திருப்பான் என எப்படி நம்புவது?

இராணுவத்தின் மூச்சுக்கள் தெறித்துக் கொண்டிருந்த பொழுதிலும் அவற்றின் வெப்பங்களுக்குள் அகப்பட்டுக் கொள்ளாமல் போய் தன் வீட்டை தரிசித்து மீண்ட பரமசிவம், இவனுடைய வீடு கதவுகளைத் தொலைத்து விட்டு காற்றில் ஓலமிட்டுக் கொண்டிருப்பதாய் சொன்னபோது மனம் அதிர்ந்தது எனினும் அந்தளவோடாயினும் இருக்கட்டும் என திருப்பதிப்பட்டுக் கொண்டான். ஆனால் அதன் பின் வந்த நாட்களில் வெடிகளதிர்ந்த பொழுதுகளில் என்னவானதோ? ஒருமுறை போய் பார்த்து வருவோமா எனக் கூட அப்போது எண்ணினான். மறு விநாடியே போய் மீளாது போனவர்களின் நிழல்கள் மனதில் படிந்து உயிரை உறையச் செய்தது. வறுமையின் விரல்களுக்குள் நசிபட்டு இளமை முகத்திலேயே கோடுகளை தாங்கியுள்ள அவன் மனைவியின், வீட்டுத் தேங்காய் நினைவில் தோய்ந்த புலம்பல்? சின்ன மகளின் தன் பட்டிப்பூக்கன்றுகள் பற்றிய கவலை தோய்ந்த பேச்சுக்கள் எல்லாம் அவன் மனதில் மோதி இராணுவம் பற்றிய அச்சத்துக்குள் அழிந்து போயிருந்தது.

எண்பத்தி மூன்றில் கொழும்பில் இருந்து வன்னிக்கு வந்தபோதே இராணுவம் பற்றிய பூதாகாரமான விம்பம் அவன் மனதில் விழுந்தது. அம்புலிமாமாவில் அவன் பார்த்த உருண்டு திரண்ட முரட்டுத்தனமான மயிர்கள் வளர்த்த பற்கள், கடைவாயிலும் நடுவிலும் நீட்டிக் கொண்டிருக்கின்ற அரக்கனின் தோற்றம் இராணுவம் பற்றி எண்ணும் போதெல்லாம் மனதில் விழுந்தது.

அந்தத் தோற்றங்களே ஆயிரக் கணக்கில் சத்ஜெய தொடங்கிய போது மனத் திரையில் அணிவகுத்தன. மூச்சைப் பிடித்துக்


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கொண்டு வன்னேரிக்குளத்துக்கு வந்திருந்தான். மனைவி, பிள்ளையோடு வந்த பொழுதுகளில் இருந்து ஊருக்கு மீளல் பற்றிய கற்பனைகள் மனதில் விரியத் தொடங்கின. முல்லைத்தீவு போல மீளவும் அலைகள் எழுந்து ஆர்ப்பரிப்பதாய்... அவற்றின் மோதுதலில் இராட்சத பாறை விம்பங்கள் உடைந்து கரைவதாய் பல தடவைகள் கற்பனை செய்தான். இடையில் இரண்டு தடவைகள் கனவிலும் தரிசித்தான். அந்தக் கனவுகள் இப்போது நனவாகி விட்டிருந்ததில் வானத்தை தலைகளால் தொட்ட புளகிப்பு அவனுக்கு இந்த புளகிப்புக்குள்தான் தன் வீட்டின் காட்சியளிப்பு பற்றிய நினைவுகள் மனதில் அழுந்தி அழுதன. ஓடோடிப் போய் பார்த்து விட வேண்டும் எனத் தவிப்பு மேலெழுந்தது. எனினும் மறுகணமே அவனுள் விபரீதமான அச்சம் எழுந்து படர்ந்தது.

முன்னரும் ஒரு தடவை ஊருக்குள் புகுந்திருந்து விட்டு இராணுவம் திரும்பிப் போனது. அப்போது ஓடோடிப் போனவர்களில் பலபேர் வலது அல்லது இடது கால்களை சிதறடித்து இரத்தம் சோர ஆஸ்பத்திரியில் வந்து கிடந்தார்கள். இப்போது அந்த நிலை தனக்கும் வந்து விட்டால்???.. எனப் பயந்தான். பயப்பிடாமல் எப்படி இருக்க முடியும்?

இராட்சதன் கண்டபடி மிதிவெடிகளை விதைத்து விட்டுப் போயிருப்பான் ஆவலோடு கால் வைக்கும்போது வீட்டு வாசலில் கிடந்து அதிர்ந்து விட்டால்????? கடவுளே ! ஒரு காலை இழந்து எத்தனை வேதனைகளை முனகல்களை சுமக்க வேண்டும் . பின்நாளில் மனைவி கூட முணுமுணுக்கத் தொடங்கிவிடுவாள் அவனது சுமை பற்றி??? முன்னர் இராணுவம் வந்து திரும்பிய போது பரந்தன் வங்கியின் சுவருச்சியில் கிரனைட்டை வைத்து பிளாஸ்ரரால் ஒட்டிவிட்டுப் போயிருந்தானாம். தற்செயலாய் உள்ளே போனவர் கண்டு அலறியடித்து ஓடிவர ஒரு போராளி துப்பாக்கியால் சுட்டு அதனை வெடிக்கச் செய்தானாம். அது இப்போது அச்சுறுத்தியது. அவனது வீட்டின் வரவேற்பறையின் நீலச் சுவரில் சுவிச்போட்டோடு கிரனைட் கிளிப் கழற்றப்பட்டு ஒட்டி வைக்கப்பட்டிருப்பதாய் ஏதோ அசரீரி மனதுள் சொல்லிற்று 'வேண்டாம் .. இப்போதைக்கு அவசரப்பட்டு போகக் கூடாது.' வாய்விட்டுச் சொல்லிக் கொண்டான்.

'என்ன வேண்டாம் எண்டுறியள்?. இந்தாங்கோ!' எனச் சொல்லி கைகளில் கற்கண்டை நீட்டினாள் மனைவி. திடுக்குற்று நிமிர்ந்தான். தன்னையறியாமலே வார்த்தைகளை பெரிதாய்ச் சொல்லி விட்டு 'எ..எ..என்ன என்ன இது?' தடுமாறினான் முகத்தில் மலர்ச்சி பரவ அவள் சிரித்தாள். 'கற்கண்டு சுந்தரமண்ண வெற்றி விழா கொண்டாடுறார்' அவன் மனம் விழித்துக் கொண்டது. சே.. மறந்து போனேனே எனச் சலித்தான். எத்தனையோ நாளாய் அவன் செய்திருந்த வெற்றி பற்றியே கற்பனைகளில் கற்கண்டும் இடம் பிடித்திருந்தது. எப்படி மறந்து போனான்? மனைவியின் கையிலிருந்து ஒரு துண்டு கற்கண்டை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு எழுந்தான். முன் தெருவில் அசைந்து கொண்டிருந்த சிவப்பு மஞ்சள் கொடிகள் கண்களுள் உறுத்தியது. இப்படித்தான் இளந்தளிரை வன்னிவிளாங்குளத்தில் விதைத்த பொழுதிலும் கொடிகள் காற்றிலசைந்தன. 'இப்ப?இப்ப வேண்டாம். வீட்டுக்கு போனாப் பிறகு எல்லாருக்கும் குடுப்பம்.' எண்ணியபோதே விழிகளில் நீர் கட்டியது. இமைகளால் வெட்டினான். மனம் துயரைச் சுமந்து கனத்தது. மதியம் தாண்டும் வரை ஏதோ நடைப்பிணமாய்த் திரிவதாய் அவனுக்கே தோன்றிற்று. 'அண்ண கிளிநொச்சியில பின்னேரம் கொடியேத்தினமாம் '..போகேலயே ' சூரியன் உச்சி வானை ஏறிக்கடந்த சில மணிகளில் ரவீந்திரன் ஓடி வந்தான். விசையேறிய கம்பிச் சுருள் விடுபட்டதென சட்டென அவனை ஏறிட்டான்.'என்ன?.. இண்டைக்கோ?'

'ஓ பின்னேரம் சங்க லொறி போகுது. அதில போகலாம்' மாலை சாறத்தை மாற்றிக் கொண்டு புறப்பட்டான். லொறி உள்ளேயும் மேலேயும் மனிதர்களைச் சுமந்தபடி வந்தது. 'அண்ண. பாய்ஞ்சு ஏறு' என்று கையைக் கொடுத்தான் ஒருவன். எல்லோர் முகங்களிலும் புன்னகை பரவியிருந்தது. முழங்கால்களை மடக்கி பின் தட்டியில் ஊன்றி தாவி நிமிர்ந்து கூரையைப் பிடித்தபடி நின்றான். மரங்களும் வேலிகளும் பின்னே போயின. கிளிநொச்சியில் மீள அவனுள் அச்சம் பீறிட்டது. எங்கும் சிதிலமாகி கரிபடர்ந்த கட்டிடங்கள் தொன்மையான நாகரிக தேசத்தில் புகுவதாய் தோன்றிற்று இதற்குள் எங்கெங்கே மிதிவெடிகள் கிடக்கின்றதோ என மனம் அஞ்சியது. முன்னால் செல்பவர்களின் கால் தடத்தில் நடந்தான். உற்சாகம் மிதிவெடி பற்றிய நினைவில் மூழ்கிற்று. போய் கொடிக்கம்பமருகே அசையாமல் நின்று விட்டு திரும்பி வந்து பத்திரமாய் லொறியில் ஏறிக்கொண்டான். அதன் பின்னர் வந்த நாட்களில் மீட்கப்பட்ட நகருள் வீடுகளை பார்க்கவென சிலர் போனார்கள் இவன் அது பற்றி எண்ணவே பயந்தான். 'கொஞ்ச நாள் போகட்டும் ஆறுதலா போவம்' என உச்சரித்துக் கொண்டான்.


அக்கராயன் ஆஸ்பத்திரியில் இருவர் காலிழந்து வந்து கிடப்பதாய் செய்தி சொல்லியது. வீடு பார்க்கப் போவது பற்றிய அவனின் நாள் இன்னும் பின் தள்ளப்பட்டது. இரண்டு நாள்களில் மெதுவாய் அவனுக்கு உடல் வெப்பமடையத் தொடங்கிற்று. மறுநாள் மதியம் நடுக்கமும் சேர்ந்தது. அவன் பதறிப்போனான். 'கடவுளே கனநாளைக்கு பிறகு சனியன் பிடிச்சிட்டுது. இனி ஒரு கிழமைக்கு எண்டாலும் வாழ்க்கை நரகம் தான்' மனம் பெரிதாய் சித்திரவதைப்பட்டது. மலேரியாவை தாங்கவே முடியாது. உயிரை விட்டு விடலாம் அவசரமாக மாலை அக்கராயன் ஆஸ்பத்திரிக்கு போனான். இரத்தம் சோதிப்பதற்காய் கொடுத்து விட்டு கதிரையில் தலையை பின்புறமாய் மடக்கி சாய்ந்தபடியிருந்தான். காற்று புழுதியை சுமந்து வீசியது. இரைச்சலிட்டபடி மோட்டார் சைக்கிள் ஒன்று வந்து நின்றது. தலையை நிமிர்ந்து பார்த்தவன் திடுக்கிட்டான் ஒருவனைப் பின்னால் தாங்கிப் பிடித்திருந்தார்கள். வலது கால் பாதத்திற்கு மேல் சிதைந்து போயிருந்தது அவனுக்கு சுற்றிக் கட்டியிருந்த துணியை மீறி குருதி சொட்டிக் கொண்டிருந்தது. இலை குலைகளும் மண்ணும் ஒட்டிக் கிடந்தது. 'மைன்ஸில போட்டுது' என்றார்கள் ஸ்ரெச்சரில் வைத்து உள்ளே கொண்டு போக இவனுக்கு தலை கிறுகிறுத்தது. மயக்கம் வரும் போலிருந்தது. அப்படியே நீண்ட கதிரையில் படுத்துக் கொண்டான். வீட்டிற்கு வரும்போது கிளிநொச்சிக்கு போகும் நாளை இன்னும் பின் தள்ளினான். இரவு மலேரியா கடுமையாய் தன் வெம்மையை காட்டியது குளிசைகளை விழுங்கி விட்டுப் படுத்தான். ஒரு வித மயக்கமாயிருந்தது. நித்திரையும் வரவில்லை. பாயில் கிடந்தபடி உழன்றான். இடையிடையே மயங்கிய விழிகளில் பயங்கரம் தலை விரித்தது.

கிளிநொச்சிக்கு வீடு பார்க்கப் போனான். ஓடுகளை இழந்து மூளியாய் கிடந்தது வீடு. மனம் சிறிது துயருற்றது உள்ளே புகுந்தான் சுவரில் சிலந்தி வலை பின்னியிருந்தது கைகளால் அவற்றை களைய சுவரில் ஒட்டியிருந்த கிரனெட் வெடித்து கை சிதறியது. முகம் நெஞ்சு எங்கனும் குருதி சீறியது. பழந்துணியினால் சுற்றிக் கட்டி யாரோ மோட்டார் சைக்கிளில் ஏற்றினார்கள். கட்டிய துணியில் நிணவாடை 'ஐ..ஐ..ஐயோ..' கத்தியபடி பிரயத்தனத்தோடு கண்களைத் திறந்தான். கனவு.. உடல் நடுங்கியது வியர்த்தது காய்ச்சல் சற்று தணிந்திருந்தது.

நீண்ட நாட்களிற்குப் பின்னர் உண்மையாய் மனதில் உறைந்திருந்த அச்சத்தோடு பலருடன் வீடு பார்க்கப் போனான். அவனது தெருவின் இருபுறமும் பற்றைகள் அடர்ந்து வீதி சிறுத்துப் போயிருந்தது. வலது புறமாயிருந்த இரண்டு கூரை வீடுகள் எரிந்து தடிகள் தொங்கிக் கொண்டிருந்தன. நாலாவது வீடு அவனுடையது. நெருங்க நெருங்க கால்கள் நடுங்கின. இதயம் பலமாய் துடித்தது. கறையான் சுவைத்த வேலிகளின் மேலால் பார்வையை வீசினான். அவனது வீடு கூரைகள் விழுந்து சுவர்கள் இடிந்து போயிருந்தது. அவனுக்கு வியர்த்தது.. கால்களின் நடுக்கம் தளர்ந்தது. மனதுள் துயரம் ஆயினும் பயங்கரம் ஒன்று விலகிய திருப்தியாயிருந்தது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



ஆதித்தநிலா

# புருஷ இலட்சணம்

வாத்தியின்ர வகுப்பெண்டா எனக்கு அலாதியான பிடிப்பு.

அரைவாசியும் வாத்தியின்ர அலட்டலுக்குத்தான், அலட்டலுக்குள்ள ஆழமான அர்த்தங்கள் இருக்கும். வாத்தியின்ர அபிநயங்கள் படு ஜோர்.

எல்லாத்தையும் அந்தந்த மாதிரியே செய்து காட்டும்.

பிருதுவி அவளும் அப்படித்தான், வாத்தியுக்கு கொஞ்சமும் சளைத்தவள் அல்ல, அபிநயம் மட்டும் விதி விலக்கு.

வாத்தியின்ர அறுவையளுக்கு சரியான அடி குடுக்க சரியான ஆள் அவள்தான்.

வாத்தி எட்டடி பாய்ஞ்சா அவள் பதினாறடி பாய்வாள்.

வாத்திக்கு எந்த வகுப்பிலையும் கரடிபிடிக்கிற் கதை சொல்லாட்டிப்பத்தியப்படாது.

நெளிச்சு, நெளிச்சு கதை சொல்லும், பிள்ளையளை நக்கலடிக்காட்டி மனுசனுக்கு அண்டைக்கு வகுப்பெடுத்த திருப்பதி இருக்காது.

மனுசன்ர கரடிக்கதையை சொல்ல வேணும். இல்லாட்டி நீங்கள் 'நல்ல நண்பனை ஆபத்துவேளையில் அறியலாம்' என்று கரடி சொன்னதான கதை எண்டு நினைச்சுப் போடுவியள்.

மிலேனியம் ஆண்டின் கணனிக் கண்டு பிடிபுப்போல இது மனுசன்ர தனித்துவமான கண்டுபிடிப்பு.

'கரடி பிடிக்கிறது' எண்டா அந்தாளின்ர அகராதியில் 'காதல்' வாறது.

மனுசன் எடுக்கிற வகுப்புகளிலெல்லாம் தனக்கேயான ஏகபோக கரடிக்கதையை அவிட்டுவிடும். கரடி பிடிக்கிறது எண்டா ஏதோ வாத்தியின்ர வர்க்கத்திற்கு நாட்டம் இல்லாதது போலவும் பிள்ளையள் மடக்கிப் பிடிச்சுக் கொண்ட மாதிரியும் அவையளும் ஏதோ எப்பனும் விருப்பமில்லாமல் மாட்டிக் கொண்டினம் போலவும் மனுசன் கதை சொல்லும்.

இதில அவையளின்ர சாதனை என்ன இருக்கோ தெரியாது. அப்பாவியள் போல கொக்.. கொக்.. எண்டு எங்களைப் பார்த்துச் சிரிப்பினம்.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்துப் போட்டு பிருதுவி ஒருநாள் கேட்டாள்.

"மாஸ்ரர் கரடி பிடிக்கிறது சரி மாஸ்ரர்... கரடன் பிடிச்சா என்ன செய்யிறது"

"கரடன்..."

மாஸ்ரருக்கு கணப்பொழுது அவள் கேட்டது விளங்கேல்ல.

"அது என்ன கரடன்..."

"மாஸ்ரர் கரடி எண்டு பிள்ளையள மட்டும் சொல்லிக் கொண்டிருக்கிறயள். கடுவன் - பெட்டை மாதிரி கரடி - கரடன்...."

அவள் விளக்கம் புரிய வாத்தி வாய் பிளந்து தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டு சிரிச்சுப்போட்டு,

"அது தானே... ஓ... கரடனும் பிடிக்கும் பிள்ளையள்"

வாத்தியின்ர சமாளிப்பு ஒரு பக்கத்தை மட்டுமே வாத்தி பார்த்துக் கொண்டிருந்தது எண்டதை அப்பட்டமாய் வெளிப்படுத்தியது.

வாத்தி ஒரு மாதிரியாச் சமாளிச்சுது.

"சரியாச் சொன்னாய் பிள்ளை! நீ சொல்லுறது சரி. ஆனா கரடிப் பிடி மாதிரிக் கரடன் பிடி இருக்காது பிள்ளை. கரடன் வேறயொரு கரடி வசமா மாட்டிக் கொண்டா அதை விட்டிடும் பிள்ளை"

வாத்தி இப்ப எங்கட பக்கம்.

அதுக்குப் பிறகு கரடி பிடிக்கிற கதை சொல்ல வேண்டி வந்தா கரடன் - கரடி பிடிக்க விடாதையுங்கோ! கடமைக்கு முதன்மை குடுங்கோ! பேந்து கரடன் - கரடியைப் பிடியுங்கோ எண்டு அறிவுறுத்திறதில மறந்தும் மனுசன் 'கரடனையும்' இணைத்துச் சொல்ல தவறினது இல்லை.

வாத்தியோட மல்லுக்கட்டி மல்லுக்கட்டி பிருதுவியும் வாத்தியின்ர பெஸ்ற் பிறண்டாகிப் (First friend) போனாள்.

வயது வேறுபாடெல்லாம் காணாமல் போட்டுது. நட்புக்கு என்ன வயதும் வாய்க்காலும். இரண்டும் கதைக்கிற கதையளைக் கேட்டா ஆரும் நம்பமாட்டினம். உதுகள் இரண்டும் உப்பிடிக் 'கொஸ்' அடிக்குதுகள் எண்டு.


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அண்டைக்கு வாத்திக்கு நான்தான் ரீ கொண்டு போனனான்.

"சீனி குறைவாய் போட்டனியே... பிள்ளை குட்டிக்காரன் பிள்ளை" அவ்வளவுதான் வாத்தி என்னோட கதைச்சது.

"எடி பிள்ளை பிருதுவி! உவ்வளவு கதைக்கிற நீ உன்னைப்பற்றி யோசிக்கேல்லையேடி டேற் (Date) போனா கைவிட வேண்டியது தான்...?

"என்ன மாஸ்ரர்..."

பிருதுவிக்கா விளங்காது வாத்தியின்ர வாயைக் கிளறும் யுக்தியில் அவள்.

"பிள்ளை ஒரு கரடனைப் பார்த்துப் பிடி! வயதான காலத்திலையெண்டாலும் துணை வேணுமடி. தனிமை இப்ப சுகமாய்த் தெரியலாம். பின்னுக்குப் போகப் போக மோட்டு வேலை செய்திட்டன் எண்டு கவலைப்படப் போகிறாய்..."

"மாஸ்ரர் ஒரு கரடனைக் கரடனாய்க் காட்டுங்கோ அண்டைக்கே கட்டுறன்"

"இதென்ன கதை சொல்லுறாய்! எத்தினை கரடன்கள் காலுக்கையும் கையுக்கையும் இருக்கேக்க...."

"மாஸ்ரர் கரடன்களுக்கு அது மட்டுமில்லைத் தகுதி. அதை இண்டைக்கு குளோனிங்கே செய்து போட்டுப்போகுது"

வாத்தி வாயைப் பிளந்து கொண்டு கேட்டுது.

"பிள்ளை சீரிஸாக் கேக்கிறன் என்ன தகுதியை எதிர்பார்க்கிற..."

"மாஸ்ரார் அப்பான்ர வயதில இருக்கிறியள் எண்டாலும் சொல்லுறன் வடிவாக் கேட்டுக் கொள்ளுங்கோ"

"படுக்கைக்கும் பெறுகிறதுக்கும், சலவைக்குமான இயந்திரம் எண்டு கிட்லர் சொன்னதுபோல கருதுறவையள் முதலாவது தகுதியை இழந்த கரடன்கள்...."

"இரண்டாவது...."

வாத்தி நல்லா நடித்து நடித்து அவளைத் துருவி ஊக்குவிச்சுக் கொண்டிருந்தது.

"இரண்டாவது... உரிமைகளில மட்டுமில்ல 50:50 உணர்வுகளிலையும் 50:50 தான். நானும் உயிருள்ள மனுசி. வா எண்டுற நேரம் நான் போகோணுமெண்டா நான் வா எண்டுற போது அது ஆபாசமெண்டா வாழத் தெரியாத வில்லங்கங்களைக் கட்டிப் போட்டு அல்லாட என்னால ஏலாது"

"பிள்ளை..."

"மாஸ்ரர் முடியேல்ல..."

"சரி சொல்லு...."

"நான் ஒண்டும் கசாப்புக் கடைக்காரன் இல்ல. அவன் பல்லுப் பார்த்து காசு குடுத்து மாட்டை வேண்டுறது பங்கு போட்டுக்கொள்ள. இதென்னடா எண்டா என்ர பல்லைக் காட்டி நானே காசும் கொடுத்து என்னைப் பங்குக்கு விட நான் ஒன்றும் அடிமாடில்ல. அறிவுள்ள மனுசி மாஸ்ரர்..."

"சொல்லு..."

"ஒரு சதமும் குடுத்து வேண்டத் தயாரில்லை. நானும் படிச்சவள். நானும் உழைப்பன். என்னையும் என்ர அம்மா, அப்பா கஸ்ரப்பட்டுத்தான் படிப்பிச்சவையள். என்னை ஆளாக்கினதோட அவையின்ர கடமை முடிஞ்சு போச்சு, எனி செய்ய வேண்டியது நான்தான். பெத்த கடனை அடைக்க முடியாதுதான். ஆனா முடிஞ்சவரை செய்யலாம். அதுகள ஊன் இருக்க சீதனம் எண்ட பேயால உறிஞ்சி தெருவில அலையவிட நான் தயார் இல்லை. கரடனை மாதிரித்தான் என்ர அப்பா அம்மாவும் கரடியைப் பெத்தவை. கரடியைப் பெத்தவையள் எண்டதுக்காக நடைப்பிணமாகோணும் எண்டது எந்த வகையில நியாயம்?"

"..........."

"மாஸ்ரர்..."

"சொல்லு பிள்ளை..."

"ஆரும் ஆருக்கும் கணக்கெழுத வேண்டாம். அறிவு இருக்கு, ஆரோக்கியமான உடம்பு இருக்கு. உழைப்பம், வாழுவம், தெளிவு இருந்தா வரச்சொல்லுங்கோ..."

"பிள்ளை..."

"பொறுங்கோ மாஸ்ரர் இன்னும் முடியேல்லை..."

"சரி சொல்லு...."

"ஆஜானபாகுவா, ஆறடி உயரத்தில, கட்சா, மொட்சா... அது மட்டுமெண்டா கசாப்புக் கடைக்காரனுக்கு தேவைப்படும். எனக்கு அழகு அகத்தில இருக்க வேணும்"

"அதையும் விளக்கமாச் சொல்லன்...."

"சொல்லுறன். மனுசனுக்கு மனுசத்தன்மை இருக்க வேணும். அறிவும் ஆளுமையும் மட்டுமில்லை மாஸ்ரர் மனுஷன். பண்பு வேணும், பரிவு வேணும், அன்பு வேணும், ஆதரவு வேணும், அழகுணர்ச்சி வேணும், புரிதல் வேணும், சிகரமாய் போலிகள், வேஷங்கள் உருட்டுப் பிரட்டுகள் இல்லாத உண்மை வேணும். பொய்யும் புரளியும், தில்லுமுல்லுகளும் ஆண்டான் - அடிமை எஜமானப் பாங்கும் தான் அறிவு எண்டா, ஆளுமை எண்டா பண்பு எண்டா எனக்கது வேண்டாம்.

இந்த அறிவு, இந்த ஆளுமை, இந்தப் பண்பு என்னட்ட இல்லத்தான் உங்கட வர்க்கம் நினைக்கிற மாதிரி படிச்சும் பவிசு தெரியாது வாழத்தெரியாத 'அப்போஸ்' எண்டு கருதுற மாதிரியே இருந்திட்டுப் போறன்..'

"......"

"மாஸ்ரர் இன்னுமொண்டு...."

"சொல்லு...."

"கட்டின இரண்டு நாள் கண்ணே மணியே எண்டு போட்டு காலகதியில காதலிச்சனியோ, கண்ணடிச்சனியோ எண்டா அதே கேள்விகள் எனக்கும் பொருந்தும்"

"மாஸ்ரர் ஒரு பகிடி..."

"சொல்லு..."

"பிரியங்காவைத் தெரியுமல்லோ"

"தெரியும்"

"கஜானாவைத் தெரியுமல்லோ"

"எங்கட முகடைத்தானே சொல்லுறாய்..."

"அவளே தான்..."

"அவளுக்கென்ன..."

"சொல்லுறன், பிரியங்காவை பார்த்த மாத்திரத்திலேயே ஆருக்குத்தான் பிடிக்காது. அறிவில ஆளுமையில மட்டுமில்ல அழகிலையும் பண்பிலையும் கூட அவள் உசத்தி தானே...."

"சொல்லு..."

"கஜானாவிட்ட அழகு மட்டுமில்ல, அறிவு, ஆளுமை, பண்புங்கூட இல்ல குணத்தையே திரும்பிப் பார்க்கிறாங்கள் இல்ல. பணம் தேடி அலையிற குலத்தில வயித்தெரிச்சல்காரி இவள். அவளைப் பார்த்துச் சொல்லுறாள் உவளின்ர ஆட்டத்தால தான் உவனுகள் அலையிறானுகளாம்.

"என்ன புழுக்கம் மாஸ்ரர். முல்லைப்பூவிலையும், முங்கைப்பூவிலையும் எதைப் பறிப்பியள்?"

"சொல்லு..."

"மாஸ்ரர் உதுகளுக்குள்ளால எல்லாத்தையும் சரியா மதிப்பிட்டு நிமிர்ந்தது தான் நிமிர்வு! பிரியா அழகானவள், அறிவானவள், ஆளுமையானவள், பண்பாணவள், பண்பான ஆக்களுக்குத் தான் 'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்...' எண்டதைப்போல,

அவளை மாதிரி ஒரே ஒரு சந்தர்ப்பம் கஜானாக்கு கிடைச்சிருந்தா இண்டைக்கு கஜானான்ர கழுத்திலையும் கல்லுக் கட்டப்பட்டிருக்கும், வேலைக்கும் நீங்கள் வேறயாளைப் பார்த்துக் கொண்டிருப்பியள்"

"நீ என்னதான் சொல்லுறாய்..."

"மாஸ்ரர் 2nd hand, 3rd hand எண்டது இல்ல, கணிப்பு மனுசனாய் இருக்கட்டும்"

"வாத்தி புரிஞ்சுதோ புருஷ இலட்சணம்! ரீ ஆறிப்போட்டுது குடிச்சிட்டுப் போங்கோ! முடிஞ்சா ஆளை நீங்களே செலக் பண்ணுங்கோ! ஆளையே பார்க்காம அண்டைக்கு கட்டுறன்.'

அவள் போய்விட்டாள்.

ரீக் கப்பிற்காய் நான்தான் காத்துக்கொண்டிருந்தேன்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்






# மலைக்குகை

1

உண்மைப் பதிவு

மணலாறு விஜயன்



'போரும் வாழ்வும்' என்ற இவ்வுண்மைப் பதிவுகளில் தம் வாழ்வோடு உயிரையும் அற்பணித்த சிலரது நினைவுகளையே பதிவாக்கியிருப்பதாகக்கூறும் மணலாறு விஜயனின், 'போரும் வாழ்வும்' என்ற நூலின் உண்மைப் பதிவுகளை எரிமலை வாசகர்களுக்காக இங்கு தருகின்றோம்.

1984ம் ஆண்டு விடுதலை நோக்கி கிழக்கே நகர்கின்றோம். தலைவரின் தொடர்பிலிருந்து சற்று நீண்ட தூரம் செல்லவேண்டிய அவசியம். காடுகளையும் மலைகளையும் நம்பிய பயணம். திரியாய்க்கு வந்தடைந்தோம். அங்கே ஒரு போராளியின் வீட்டில், இருட்டில் சத்தமின்றி சாப்பிட்டோம். இருட்டுத்தான் எமது பாதுகாப்பு போர்வை. திரியாயிலிருந்து கும்புறுபிட்டியில் யாரை சந்திப்பது, யார் எங்களுக்குத் துணிந்து உதவி செய்வார்கள்? கேள்விக்குறியோடு நடக்கின்றோம். ஆற்று வளைவு ஆற்றினை அண்டிய வெளி. வெளியைத் தாண்டினால் கும்புறுபிட்டிக் கிராமம் கையில் வலையும் இடுப்பில் பறியுமாய் எதிர்ப்படுகின்றார் முத்துலிங்கண்ணன். கும்புறுபிட்டியில் மட்டுமன்றி திருகோணமலை மாவட்டத்திலே ஒரு சிறந்த வேட்டைக்காரன். வைத்த குறி தப்பாது சூடு.

உல்லாசப் பயணிகளாய் வரும் வெள்ளைக்காரர்கள் இவரிடம் அடிக்கடி வருவார்கள். குருவி, கொக்கு சுடுவதற்கும், காட்டு மிருகங்களை வேட்டையாடுவதற்கும் இவரைப் பயன்படுத்தினர். ஆயுதங்களுடன் பழகிய சிங்கள இராணுவத்தினர்கள்கூட வேட்டைக்காக அடிக்கடி வந்து முத்துலிங்கண்ணனை அழைத்துச் செல்வார்கள். நவீனரக துப்பாக்கிகளை இயக்கும் பயிற்சி பெற்று இருந்தும் முத்துலிங்கண்ணையின் வேட்டைத் துப்பாக்கியில் அவர்களுக்குக் கூட அளவற்ற நம்பிக்கை இருந்தது.

வேட்டைக்குச் செல்லும் அவர் கையில் துப்பாக்கியுடன் ஒரு காட்டுக் கத்தியும் இருக்கும். இவையிரண்டும் இல்லாவிட்டால் இடுப்பில் பறியும் கையில் வீச்சு வலையும் இருக்கும். ஒப்பற்ற ஒரு உடல் உழைப்பாளி என்பதை இது காட்டும். காட்டின் நடுவே நின்றும் கண்ணால் திசைகாட்டும் காட்டனுபவம் உள்ளவர் அவர் செல்லும் திசையில் நடந்தால். சொல்லிய திசையை நிட்சம் அடையலாம். அனுபவம் அவரின் நம்பிக்கைமிக்க திசைகாட்டியாக இருந்தது. முத்துலிங்கண்ணன் உதவியைப் பெறுவது பல வழிகளில் சிறந்ததெனக் கருதினோம். அவரைப் பயன்படுத்த நாங்கள் நினைத்தோம் அதற்கு மாறாக அவர் சிந்தித்தார். விடுதலைப் போருக்கு வலுவூட்ட எங்களுக்கு தன்னால் முடிந்தவரை உதவி செய்வதென முடிவெடுத்திருந்தார். தமிழ் அன்னை அவரை எமக்காக அனுப்பி வைத்திருந்தது போலிருந்தது.

முத்துலிங்கண்ணன் வீடு, உடன் வீசிய மீன் குளம்புக் கறியோடு அன்போடு உணவு பரிமாறினார் அவரது மனைவி. வயிறாறச் சாப்பிட்டோம். கருணந் தப்பினால் மரணம். இதனால் அடுத்த கட்ட நடவடிக்கையில் இறங்கினோம். மக்கள் அறியாத பாதுகாப்பான இடமொன்றை தேடவேண்டும் இதனை முத்துலிங்க அண்ணனிடம் கூறினோம்.

கிராமத்துக்குச் சற்றே தள்ளி ஆற்றங்கரை வளைவினையண்டி அமைந்திருந்த காட்டுக்கு எங்களை அழைத்துச் சென்றார். இதுதான் வேலப்பன் மலை. இந்த மலையில் சின்னக் குகையொன்று இருக்குது. இதுக்குள்ள நீங்கள் பாதுகாப்பாய் தங்கலாம். எனக்கூறி இடத்தை முழுமையாகக் காட்டினார். குடையப்பட்ட சிறிய குகைதான். ஆனாலும் பாதுகாப்பானதாய் தென்பட்டது. குகைவாழ்க்கை ஆரம்பமானது. காட்டிக் கொடுப்போர் அதிகமுள்ள காலம். ஆனால் அவற்றை முத்துலிங்கண்ணர் பொருட்படுத்தவில்லை. செயலில் இறங்கினார். தனது தந்தையார்கூட சந்தேகிக்காத வகையில் அவர் நடந்து கொண்டது வியப்பிற்குரியது மலைக்குகைக்கு எம்மை அழைத்துச் சென்றபோது தந்தையாரின் சேனைப்புலவுக்கு கூடவே சென்றார். தந்தைக்குத் தெரியாது மெதுவாக நகர்ந்து சென்றது இன்னும் பசுமையாக நினைவில் தெரிகிறது.

மலைக்குகை வாழ்க்கை தொடங்கியநாளில் இருந்து சிறிது சிறிதாக உணவுப் பொருட்களை சேகரித்து இரவிலே சிறிய முடிச்சாக்கிக் கொண்டு தரும் பணியைத் தினமும் செய்து


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



கொண்டிருந்தார். சில நாட்களில் சமைத்த உணவைப் பார்சலாக்கி பறியில் போட்டுக்கொண்டு ஆற்றிலே இறங்கி வீசுவதுபோல வீசி எங்களது இடத்தை வந்தடைவார். பொலிசார், இராணுவத்தினர் பற்றிய தகவல்களையும் திரட்டி வருவதுடன் எங்களுக்கான புதிய நம்பிக்கைமிக்க ஆதாரவாளர்களை இணைப்பதிலும் நிதானமாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தார். முத்துலிங்கண்ணனின் மனைவி புதுமையானவர். எவருடனும் அதிகம் அளவளப்பாகப் பேசமாட்டார். எம்மைக் காப்பதில் அவரது இந்த இயல்பு பெரிதும் உதவியது. எமது நடவடிக்கை பற்றி ஒருவார்த்தைகூட அவர் வாயிலிருந்து வெளிவராது. இதனால் முத்துலிங்கண்ணன் குடும்பத்தில் மற்றவர்கள் சந்தேகம் கொள்ள வாய்ப்பிருக்கவில்லை. மாதங்கள் சில நகர்ந்தன. புலிகள் நடமாட்டம் இருப்பதாக மக்கள் காதோடு காதாய் கிசுகிசுக்கத் தொடங்கினார்கள். இரவு வேளைகளில் மட்டும் முத்துலிங்கண்ணன் வீட்டுக்கு சாப்பிட வருவதும், உணவுப் பொருட்களை கொண்டு செல்ல வருவதும் வளக்கமாக இருந்தது. ஆற்றங்கரை வெளியில் நான் சென்று வருவதை யாரோ அவதானித்து இருக்க வேண்டும்.

கும்புறுப்பிட்டி கிராமத்தில் இரவு வேளையில் நாய்கள் குரைத்தால் புலிகள் நடமாடுவதாக மக்கள் பேசிக் கொண்டனர். நாய் எதற்குக் குரைத்தாலும் இந்தக் கருத்தே மக்களிடமிருந்தது.

ஆனால் எந்த வீட்டிற்கு வந்து செல்கிறார்கள் என்பது மட்டும் எவருக்கும் தெரியாது. இதுபற்றிய தகவல்களை கிராமசேவகர் ஒருவர் இராணுவத்திற்கு கொடுப்பதாக முத்துலிங்கண்ணன் மூலம் அறிந்தோம். வேறுசிலரும் ஆற்றங்கரை வெளியில் மறைந்திருந்து அவதானிப்பதையும் அறிந்து கொண்டோம். லெப். கேணல் சந்தோசம் மாஸ்ரர் வேறு ஒரு மறைவிடத்தை தேடும்படி முத்துலிங்கண்ணரிடம் கூறினார். முத்துலிங்கண்ணன் உடனேயே செயலில் இறங்கினார். கையில் ஒரு காட்டுக் கத்தியுடன் நடந்துகொண்டிருந்தார். சில மைல்தூரம் சென்றதும் இரண்டு ஆற்றுக்கு நடுவே வந்து நின்றார் முத்துலிங்கண்ணர். காடு, காட்டாறு ஆகியவற்றுக்கிடையே மிக விரைவாக ஒரு கொட்டிலை அமைத்தார். வாய்சிவக்க வெற்றிலை போட்டு சிறிது நேரம் ஓய்வெடுத்தார்.

இரண்டு ஆற்றிக்குமிடையில் அமைந்த கொட்டிலை ஆறு அள்ளிச் சென்றுவிடுமே என்ற ஐயம் மனதில் எழுந்தது. ஆனால் முத்துலிங்கண்ணனிடம் இதைக் கூறவில்லை. கொட்டிலின் அருகில் இடிந்துவிழும் மண்ணை இடியாமல் தடுப்பதாக குதிக்கால்களால் நிரையாக நெருக்கமாக இடித்தார். எல்லாம் முடிந்த பின்னர் "இந்த இடத்திற்கு ஆமி எந்த வழியாலும் வரமாட்டன். ஆத்துவெள்ளம் அள்ளிக்கொண்டு போய்விடுமெண்டு பயப்படாதேங்கோ. எந்தப் பிரச்சினையும் இந்த இடத்தில் உங்களுக்கு ஏற்படாது" என உறுதியாகக் கூறினார். முத்துலிங்கண்ணர். எங்களது பயமும் சந்தேகமும் நீங்கியது.

இப்போது கும்புறுப்பிட்டி கிராமத்துக்கும் நாம் இருக்குமிடத்துக்கும் தூரம் சற்று அதிகமாக இருந்தது. முத்துலிங்கண்ணனும் தனது நடவடிக்கைகளில் சில மாற்றங்களைச் செய்து கொண்டார். தேங்காய்களை உரிக்காமலே வீட்டில் ஒருமூலையில் கொண்டு வந்து போட்டார். அரிசி, மா என்பவற்றை சிறிது சிறிதாக சேகரித்தார். தூரமும் அதிகமாக இருந்ததால் சாமான் முடிச்சுக்களை கொண்டுவருவதில் முத்துலிங்கண்ணனுக்கு சிரமம் இருக்குமெனக் கருதி நாமும் அவருடன் கூடவே வந்து சென்றோம். போகும் பாதையிலும் மாற்றமொன்றை ஏற்படுத்தியிருந்தார். ஆற்றங்கரைவெளியைத் தவிர்த்து ஆற்றுக்குக் குறுக்காக தண்ணீர் வழியாகச் சென்றார். ஆளமான இடத்துக்கும் சேறுள்ள இடத்துக்கும் அடையாளத்துக்காக தடிகளை நாட்டியிருந்தார். இதைச் சரிவரப் புரியாவிடில் வம்பில் மாட்ட நேரிடும். முத்துலிங்கண்ணனுக்கு இந்த ஆறு அத்துப்படி இருட்டில் கூட நிதானமாக சரியான பாதையில் எங்களை அழைத்துச் செல்வார் நாங்கள் படும் கஸ்டம் அவருக்கு மனவேதனையைக் கொடுத்திருக்க வேண்டும். ஊருறங்கும் சாமத்தில் வண்டில் பூட்டிக்கொண்டு வரத் தொடங்கினார்.

பாசறையில் நாம் சுடும் ரொட்டியையும் சுவையற்ற சாப்பாட்டையும் பார்த்துவிட்டே வீட்டிலிருந்தே சாப்பாட்டுப் பார்சல்களைக் கொண்டுவரத் தொடங்கினார்.

முத்துலிங்கண்ணனின் மறக்கமுடியாத அற்புதங்களைச் சொல்லிக் கொண்டிருந்த அந்த மூத்த போராளி சிலகணம் மௌனமாக இருந்தார். குரலில் சற்று தளதளப்பாய் இருந்தது. சிலகண மௌனத்தில் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு மீண்டும் சொல்லத் தொடங்கினார்.

முத்துலிங்கண்ணன் பாசறைக்கு வந்ததும் கொட்டிலுக்குள் வரமாட்டார். "நீங்கள் இவ்வளவு உதவி செய்தும் உரிமையோடு பழகியும் ஏன் கொட்டிலுக்குள் வர மறுக்கிறியள்" எனக் கேட்டோம். "நீங்கள் ஆயுதங்களுடன் பழகுபவர்கள், கட்டுப்பாடுகளை உடையவர்கள் சிலவேளை ஏதாவது தவறுகள் நடந்துவிட்டால் அல்லது பொருட்கள் காணாமல் போய்விட்டால் அதுக்குப் பாத்திரவாளியாக நானிருக்கக் கூடாதல்லவா" என விளக்கமளித்தார். பீடி பத்தும் பழக்கம் அவரிடமிருந்தது. ஆனால், எங்களுக்கு முன்னால் இருந்து பத்தமாட்டார். மறைவாகப் போயிருந்து பத்தி முடியவே வருவார். குடிப்பழக்கமும்


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



இருந்தால் அதனை நிறுத்திவிடும்படி அடிக்கடி கேட்டோம். இயன்றளவு குறைத்துக் கொள்கிறேன் நாளடைவில் நிறுத்தவும் முயற்சிக்கிறேன் எனக் கூறினார். ஒருநாள் குடியை நிறுத்திவிட்டதை அறிந்து நாங்கள் சந்தோசப்பட்டோம். நீண்ட நாள் துப்பாக்கிசுடும் திறன் பரீட்சிக்கவில்லை. இதனால் பாதுகாப்பான இடம்தேடி காட்டில் நடந்துகொண்டிருந்தோம். ஒவ்வொரு இடங்களைப் பற்றியும் அவற்றின் வரலாறுகளைப் பற்றியும் சுவாரசியமாக வேட்டைக் கதைகளைப் பற்றியும் கூறிக்கொண்டே நடந்தார் முத்துலிங்கண்ணன். நடுக்காடு புதர் நிறைந்த மலையொன்று. அந்த மலையில் ஆதிவாசிகள் வாழ்ந்த குகையொன்றைக் காட்டினார். அதற்குள் இருந்த சிறிய கிணற்றில் பாசியை நீக்கிவிட்டு தண்ணீர் குடித்தோம். அந்த இடத்திலேயே மனித உருவொன்றை வரைந்துவிட்டு சுடும் பயிற்சியைத் தொடங்கினோம். மனித உருவத்தின் நெஞ்சினை குறிபார்த்துச் சுட்டுக்கொண்டிருந்தோம்.

முத்துலிங்கண்ணரிடம் ஜீ 3 துப்பாக்கியை கொடுத்து சுடும்படி கூறினோம். "வேட்டைத் துப்பாக்கியில சுட்டுப் பளகின நான் இதில சுட குடுத்து வைக்கோணும்" எனக் கூறிகொண்டே குறிபார்த்துச் சுட்டார். தலையில் குண்டு துளைத்தது. "எதுக்கு குறி பாத்தனீங்கள்" எனக்கேட்டோம்.

தலைக்குக்குறி பாத்துத்தான் எனக்குப் பழக்கம். அதால தலைக்கு குறிவைச்சுச் சுட்டன் எனக் கூறினார். எடுத்த எடுப்பில் பயிற்சியற்ற துப்பாக்கியால் குறிதவறாமல் சுட்டதை நினைத்தால் இன்னும் வியப்பாகவே இருக்கிறது. மாதங்கள் சில நகர்ந்தன. வந்த நாளிலிருந்து தலைவரிடம் தொடர்புகள் ஏற்படவில்லை. தொலைத் தொடர்பு சாதனங்கள் இல்லாததால் கடிதங்கள் மூலமே தலைவருடன் தொடர்புகள் வைத்திருந்தோம். இதனால் பணக்கஸ்ரம் ஏற்பட்டிருந்தது. முத்துலிங்கண்ணன் தனது வறுமையை மறந்து எங்கேயோ கடன்பட்டு ரூபா 3000 - கொண்டுவந்து தந்தார். அந்த நேரம் இந்த உதவி மலையளவு உயர்ந்ததாகவேயிருந்தது.

திருமலை மாவட்டத்தில் முதலில் துரோகிகளை அழிக்கும் படலத்தை ஆரம்பித்தோம். சாம்பல் தீவில் எமது பணி ஆரம்பமானது முத்துலிங்கண்ணனே இதற்குப் பல வழிகளில் உதவினார். சண்முகராசா மாஸ்டர், ராசு, ரங்கா என்ற மூன்று துரோகிகளுக்கு மின்கம்பத் தண்டனை வழங்கினோம். இது பற்றிய மக்கள் கருத்தை முத்துலிங்கண்ணனே திரட்டி வந்தார். யாரோ சில குழுக்களுடைய பார்வை இவர்மீது விழுந்துவிட்டது. 1985ம் ஆண்டு ஆரம்பகாலம் இராணுவத்தினர் திடீரென இவர் வீட்டுக்கு வந்தனர்.

வேட்டைக்குச் செல்ல வேண்டுமென அழைத்துச் சென்றனர். ஆனால் காட்டுக்குச் செல்லாமல் நேரே திருகோணமலைக் கோட்டைக்குக் கொண்டு சென்றனர். சித்திரவதைகள் எதுவும் செய்யவில்லை. ஆனால் முத்துலிங்கண்ணனுக்கு சந்தேகம் ஏற்படத் தொடங்கியது. ஒருநாள் அவரைச் சீருடை அணியும்படி கட்டளைபிறப்பித்தனர். தனது சந்தேகம் உறுதியாவதை முத்துலிங்கண்ணர் உணர்ந்து கொண்டார்.

ஜீப் வண்டி கும்புறுப்பிட்டி நோக்கி விரைந்தது. முத்துலிங்கண்ணரின் வீட்டு வாசலில் வந்துநின்றதும் அவரை உள்ளே சென்று மனைவியுடன் ஏதும் கதைக்க இருந்தால் கதைத்து விட்டு வரும்படி கட்டளை பிறப்பித்தனர். வீட்டுக்குள் வந்த முத்துலிங்கண்ணர் மனைவியிடம் இரகசியமாக சில வார்த்தைகளைக் கூறினார். மலர் மாஸ்ரராக்களை இருக்கிற இடத்தில் இருக்கச் சொல்லு என்ர உயிர் போனாலும் இந்த இடத்தைக் காட்டிக் குடுக்க மாட்டனாம் எண்டு சொல்லு பிள்ளைகளை எனக்கு ஏதும் நடந்தால் பயப்படவேணாமெண்டு சொல்லு. கவனமாய் அவர்களைப் பார்த்துக்கொள். எனக்கேதும் நடந்தால் புலிகள் உங்களைக் காப்பாற்றுவார்கள் என்று கூறி மறுகணமே வெளியே வந்தார். ஜீப் வண்டி இவரை ஏற்றிக்கொண்டு விரைந்தது. மறுநாள் மேலும் இருவர் கைதாகினர். மூவருக்கும் சித்திரவதை ஆரம்பமானது.

கண், கை, கால் அனைத்தும் கட்டப்பட்டு மூர்க்கத் தனமாக தாக்கப்படனர். புலிகள் இருக்கும் இடத்தை காட்டும்படி. இல்லையேல் சுட்டு விடுவோம் என்றும் மிரட்டினர். முத்துலிங்கண்ணர் ஊமையாகினார். கூட இருந்தவர்களில் ஒருவன் தான் காட்டித் தருவதாகக் கூறினான். வேலப்பன் குகைமுன்னே இராணுவ ஜீப் வண்டிகள் வந்து நின்றன. அங்கே நாம் ஆரம்பகாலத்தில் பாவித்த சில பொருட்களை தேடி எடுத்துக் கொண்டனர். மலைக்கு முன்னே மூவரையும் நிரையாக நிறுத்தினர். துப்பாக்கிகள் குறி பார்த்தன. கண்மூடிமுழிக்குமுன் ஒருவர் தப்பியோட துப்பாக்கிகள் குண்டுகளைப் பொழிந்தன. மலைக்குகை முன்னே இரத்த வெள்ளத்தில் கிடந்தார் முத்துலிங்கண்ணன்.

"எங்களை சோறூட்டி வளர்த்த இவரை மறந்துவிட முடியுமா?" கடைசி வார்த்தைகளைச் சொல்லும்போது அந்த மூத்த போராளியின் கண்கள் குளமாய் நிறைந்தது. கிழக்கில் முதல் அடைக்கலம் கொடுத்து காத்த மனித தெய்வத்தின் வரலாற்றை நீங்கள் அறியலாம். இன்று அவரது மனைவியும் பிள்ளைகளும் ஈழத்தில் வாழ்கின்றார்கள். உறவுகள் பலர் களத்தில் நிற்கின்றனர். தம்பி நிதி ஆனையிறவு பெரும் சமரில் காவியமாகி விட்டான்.

(பதிவுகள் தொடரும்)


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# பயணம்

இப்படித்தான்
முடிவுகள் என
முடிவுரைகள்
எழுதப்பட்டுக்கொண்டிருக்கும்
நீண்டதொரு பாதையொன்றின்
வழியில்
மனக்குடமெங்கும்
நம்பிக்கை மொட்டுக்கள்
நிறைந்தொழுக நீள்கிறது
என் பயணம்.
மெத்து மெத்தென்றிருக்கும் – எனது
பாதங்களின் சத்தங்கள்
எனது செவிகளைத்
தீண்டத் திராணியற்று
காற்றில் அலைந்து
கரைகிறது.
கற்களும் பற்றைகளும் முட்களும்
காலடியை கிழித்தும்
குத்தியும் ரணமாக்க
தொடர்ந்தும் – நான்
பயணிக்கிறேன் இந்த
பாதை வழியாக.
புதை மணல் குழிகளும்
பொறிக் கிடங்குகளும்
அகலமாய் வாய் திறந்து
விழுங்கக் காத்திருக்கின்றன
மௌனமாய்.
லாவகமாய் பெயர்த்து
எடுத்தெடுத்து வைத்த பாதங்கள்
மரத்தும் கனத்தும்
போனதெப்போ?
என் காலடியோசை இப்போது
எனக்கே பயமூட்டுகிறது
உயிர் குலை ஊடுருவி
பகை உள்ளம் உழுது
அச்சம் விதைக்கிறது சத்தம்,
பாதையோரம் பதுங்கிக்கிடந்த
விஷஜந்துக்கள்
சரசரத்து ஓடி மறைய
சாவதானமாய் தொடர்கிறது
பயணம்.
அனலூறும் பாலைவெளியில்
சிறு சோலையும்
பெரும் சோலை நடுவில்
சிறு பாலையும் பார்த்து
சில நேரங்களில்
என்னொத்தவர் நினைவில்
கண்கள் பனித்தும்
விரைச்தேகுகின்றன
பாதங்கள்.
நெடு வழியெங்கும்
கூடுகட்டி முட்டையிடும்
குயில்களும்
மடி இறங்கி இறகுபோடும்
மயில்களும்
அடைகாத்துப் பொரித்த
குஞ்சுடன் உலவும்
சேவல்களும்
பேடுகள் கூவி விடிந்த
பொழுதுகளுமாய்
அதிசயம் பூக்கிறது.
ஒரு விடியலின் விளிம்பிலும்
நெடும் பாதையின முடிவிலும்
என்னொத்தவர் பலர்
எண்ணெயாகி ஏற்றியதோர்
தீபம் சுடர்கிறது.
என்னொத்தவர் கனவுகள்
மெய்ப்பட
எண்ணையாகி வார்க்கின்றேன் –
நான்
என்னை.

ப்ரியா ஜெயக்குமார்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# காலத்தின் பரிசு

ஆ.நா.பொற்கோ

அட அஞ்சு மணியாப்போச்சு கோயில் மணி அடிக்குது, கோழியும் கூவுது இண்டைக்கு கட்டாயம் வெள்ளனப் போகோணும். நாளைக்குவருசமெல்லே. எப்பிடியும் சந்தைக்குக் கனக்கச்சனம் வரும், ரெண்டு கட்டுப்பையெண்டாலும் விக்கலாம். வாற காசுக்கு அம்மாக்கு ஒரு மாப்பேணி வாங்கோணும் பாவம் அம்மா, மூச்சு வாங்கிறா அப்பாவை ஆமி சுட்டாப்பிறகு அம்மா கவலையிலை நல்லா மெலிஞ்சுபோனா.

அம்மா அருளுறா, அம்மா எழும்பக்கு முன்னம் போயிட வேணும். இல்லாட்டி என்னைக் கண்டிட்டு தேம்பித் தேம்பி அழுவா நானும் அதைப்பாத்துப் பொறுக்கேலாமல் அழுதுபோடுவன், அம்மாக்கு ஒரு காலும் கையும் இழுத்துப்போட்டுது. பாரிசவாதமாம், அண்டைக்கு டொக்டர் பாத்துப் போட்டு நல்ல சாப்பாடு சாப்பிடச் சொன்னவர். பால்மா கரைச்சுக் குடிக்கச் சொன்னவர் அம்மாக்கு ஏலுமெண்டா நான் இப்பிடிப் பைவிக்கப்போக விடுவாவே.

சத்தம் போடாமல் படலையைச் சாத்திக் கொண்டு றோட்டிலை ஏறினான் இப்ப நிலம் நல்லா விடிஞ்சிட்டுது. சைக்கிளும் ஆளும் தெரியாம வாழைக்குலையள் கட்டிக் கொண்டு வியாபாரியள் சந்தைக்குப் போகினை. வண்டிலொண்டும் கிறாதிக்கு மேலை மரக்கறியோடை போகுது.

வண்டில் போகவே கிரவல் புழுதி அடிக்குது, வாகனம் போனாச் சொல்லவே வேணும் வழமையாச் சந்தை வாசல்லை நிக்கிற நொண்டிப் பிச்சைக்காரன் என்னைக் கண்டோன்னை சிரிச்சபடி.... "என்னபடா" எண்டிட்டு கையை நீட்டிறான். சைக்கில்ப் பாக்கண்ணை மரக்குத்தியிலை இருந்தபடி ரிக்கெற்றுகளை கிழிச்சுக் குடுத்துக் கொண்டிருக்கிறார். இன்னும் நான் பை வாங்கிற கடை திறக்கேல்லை.

அட அந்தக் கடைக்காற அண்ணையும் வாறார் ஒவ்வொரு நாளும் நான்தான் முதலாவதா அவையிட்டைக் கைவியளயாவாரமாப் பை வாங்கினால் என்ரராசியோ என்னவோ தெரியேல்லை அவைக்கு நாளாந்தம் நல்ல யாவாரம் நடக்கிறது.

கடை துறந்தாச்சு என்னட்டை இருந்த காசைக் குடுத்தன் கடைக்கார அண்ணை ரெண்டு கட்டுப்பையைத் தூக்கித்தந்தார். அவருக்கு நான் என்ன வேணுமெண்டு சொல்லத் தேவையில்லை.

இன்னும் மீன் இறைச்சி வரேல்லை. முதல் மரக்கறிக் கடைப்பக்கம் போவம். அங்கதான் இப்ப சனம் நிக்கும். ஒரு கட்டுப் பையெண்டாலும் அங்கை வித்துப் போடவேணும். ஒவ்வொருத்தரும் தங்கடை மரக்கறிக்கடையளை வித்தியாசம் வித்தியாசமா வைச்சிருக்கினை, சிலபேர் மரக்கறியளைக் குவிச்சுப் போட்டு விக்கினை, சிலபேர் அடுக்கி வைச்சு விக்கினை மூலையிலை கடை வைச்சிருக்கிற தடியனை எனக்குக் கொஞ்சமும் பிடிக்காது அவன் பழுதான மரக்கறிகளையும் நல்லதோடை கலந்து விக்கிறவன்.

பெரும்பாலான மரக்கறிக்கடையள்ளை என்னைப்போல சின்னப் பொடியள்தான் நிக்கினை, ஒருத்தன் பஞ்சுபோல பிஞ்சுக்கீரை மக்களுக்கு இரும்புச்சத்து, ஓடியாங்கோ பிடி நாலுரூபா எண்டு கத்திறான் இன்னொருத்தன் உழுத்தங்களி கிலோ எட்டு எண்டு மரவள்ளியைக் காட்டிக்கத்திறான். இன்னொருத்தன் மக்களுக்கு மலிவு ஓடியாங்கோ எண்டிறான் இவைக்கும் என்ரை வீடுமாதிரிச் சரியான கஸ்டமாயிருக்கும். அவங்கள்தான் கனக்க யாவாரம் செய்யினம். ஆனா கடைக்காரர் அவைக்குக் குடுக்கிற சம்பளம் குறைவாத்தானிருக்கும்.

மரக்கறிக்கடைப்பக்கம் சனம் குறைஞ்சிட்டுது. மீன்கடைப் பக்கம் போகு முன்னம் பழக்கடைப்பக்கம் ஒருக்காப் போட்டுப் போவம். பழக்கடை முனியாண்டியின்ரை மகன் அஞ்சுரூபா தரவேணும். அதையும் வாங்கினாத்தான் இண்டைக்கு மாப்பேணி வாங்க காசுகாணும்.

பழக்கடைப்பக்கம் நெருங்க வித்தியாசமான வாசனை மூக்கைத் துளைக்குது. பழக்கடைப்பக்த்தை அப்பிடியே படம் எடுத்தா நல்லாத்தானி ருக்கும் பழக்கடையள் கூடுதலாய் பொம்பிளையள்தான் நடத்தினை அம்மாக்கும் ஏலுமெண்டா சிலநேரம் பழயாவாரம் செய்திருப்பா நான் பள்ளிக்கூடத்திலை படிச்சுக் கொண்டிருந்திருப்பன்.

எனக்கு நிறையப் படிக்கோணுமெண்டுதான் ஆசை. ஆனா என்ன செய்யிறது, இப்படியாப் போச்சு.


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அஞ்சாமாண்டோடை பள்ளிக்கூடத்தை விட்டாச்சு பள்ளிக்கூடத்திலை நெடுக முதலாம் பிள்ளையாத்தான் வாறனான்.

அங்கார் அந்த இயக்க அண்ணை வாறார். அந்த ஓடைக்க ஒழிவம் அவர் கண்டா என்ன தன்னோடை வாறியா எண்டு கேப்பார். நிறையப் படிக்க அனுப்பிறதாச் சொல்லுவார், நான் படிக்கப்போனா என்ரை அம்மாவை ஆர் பாக்கிறது? அதுதான் மாட்டனெண்டிட்டன்.

அந்த அண்ணையப்பாத்தா நிறையப் படிச்சாள் மாதிரிக்கிடக்கு, என்னைக் கண்டா மெதுவாச் சிரிப்பார், எனக்கும் சந்தோசமாயிருக்கும். அவரை விடிஞ்சாப் பொழுதுமட்டும் சந்தேக்கை காணலாம். மரக்கறிக் கடையளுக்கை நிப்பார். இறைச்சிக் கடையுக்கையும் நிப்பார் மீன்கடைப்பக்கம் ஆளை நெடுகக் காணலாம்.

முனியாண்டியின்ரை மகன் என்னைக் கண்டோண்ணையே சிரிச்சபடி காசை எடுத்து நீட்டினான், அதை வாங்கி சட்டைப்பையிலை கவனமா வைச்சிட்டு புடவைக் கடைப் பக்கத்தாலை நடந்தன்.

புடைவைக்கடையிலை எனக்கு அளவான காச்சட்டையள் தொங்கவிட்டிருக்கு. ஒண்டுவேண்டினா நல்லந்தான். ஆனா காசுக்கு எங்கை போறது போட்டிருக்கிற காச்சட்டையும் நல்லாக் கிழிஞ்சுபோட்டுது, அம்மா நெடுகிலும் கிழியலைத் தச்சுத் தாறவதான். சந்தையிலை நிக்கிற என்னோட்டைப் பொடியள் குண்டிப்பக்கக் கிழியல் காச்சட்டைக்கை தபால் பெட்டியெண்டு கடுதாசியள் போடுறவங்கள். எனக்கு அந்த நேரம் சரியான வெக்கமாத்தானிருக்கும், சரியான கோவம் வரும். அந்தப் பொடியளுக்கு அடிக்கோணுமாரியிருக்கும் அம்மா ஒருதரோடையும் சண்டை பிடிக்கக்கூடதெண்டு சொல்லிறவ.

அப்பா இருக்கேக்கை என்னை சைக்கிள்ளை சந்தைக்குக் கூட்டிக்கொண்டாறவர். எனக்கு வடிவான உடுப்பு. படிக்கக் கொப்பி, ரொபி எல்லாம் வேண்டித்தாறவர். அவரும் செத்து ரெண்டு வருசமாப் போச்சு.

மீன் கடைப்பக்கம் சனம் நிறைஞ்சுபோயிருக்கு. நான் உசாராக் கூவத்தொடங்கினன். பை வேணுமா பை ஒரு பை ரெண்டுரூபா பையளைச் சனங்கள் வேகமாக வாங்கத் தொடங்கியிட்டினம்.

மீன் யாவாரியள் எல்லாற்றையும் கூவல் சேர்ந்து பெரிய குழப்பமான சத்தமாக் கிடந்தது, இறைச்சிக்கடைப்பக்கம் சனம் கும்பலா நிக்கினம். அந்தப்பக்கம் போவம்.

மீன் வெட்டிற பக்கம் தாண்டித்தான் இறைச்சிக்கடைக்குப் போகவேணும். மீன் வெட்டிறாக்கள் பெரும்பாலும் ஆம்பிளையளாத்தான் இருக்கினை. பண்டா ஐயா பெரிய வெட்டுக்கத்தியோடை இருக்கிறதைப் பாக்கப் பயமாத்தான் கிடக்கு. அவற்றை உடம்பெல்லாம் ரத்தம்



தெறிச்சிருக்கு. அவற்றை இடது கையிலை மூண்டு விரல்லை பாதி இல்லை. மீன் வெட்டைக்கை வெட்டுப் பட்டுப்போச்சாம். ஒரு அம்மாவும் இருந்து மீன் வெட்டிறா. அவவும் வலு உசாராத்தான் மீன் வெட்டிறா.

காட்டிறைச்சிக்கடையிலை பண்டியும் மானும் வித்துக் கொண்டிருக்கினை. சனம் அதை வாங்கிறதுக்கு முண்டியடித்ததுகள். காட்டிறைச்சி விக்கிற சுதாண்ணை நெரிபடாதேங்கோண்டு கத்திறார். சனங்கள் கேட்டாத்தானே. இஞ்சைதான் பைக்கு என்ன விலை சொன்னாலும் வாங்குவினம். அவைக்குப் பையின்ரை விலை முக்கியமில்லை. இறைச்சிதான் வேணும்.

ஆட்டிறைச்சி விக்கிற லுயிஸ் ஐயா மெதுவா ஆட்டு விலா எலும்புகளைக் கழட்டுறார். சனம் ஒண்டிரெண்டா வந்து ஆட்டிறைச்சி வாங்குதுகள். மாட்டிறைச்சிக் கடையிலை சனம் வரிசையா நிக்குது.

ரெண்டு கட்டுப்பையிலை இன்னும் பதினைஞ்சு பைதான் இருக்கு. இதையும் வித்தாத்தான் அம்மாக்கு மாப்பேணி வாங்கலாம். காலமையும் சாப்பிடேல்லை. சரியாப் பசிக்குதுதான் சாப்பிட்டா மாப்பேணி வாங்கக் காசு காணாமல் போயிடும்.

தெற்கு மரக்கறிக்கடைக்கு முன்னாலை பானையிலை தண்ணி இருக்கு. அங்கை போனா தண்ணி குடிக்கலாம். முகம் எரிஞ்ச ஐயா அங்கை சுருட்டுக்குடிச்சபடி இருக்கிறார். அவர் ஆமியின்ரை செக் பொயின்ராலை மண்ணெண்ணை கொண்டந்தவராம் ஆமி கொண்டர விடேல்லையெண்டு தலையிலை ஊத்தித் தனக்கே நெருப்பு வைச்சவராம். கடவுள் புண்ணியத்திலை தப்பியிட்டார்.

பானையிலையிருந்து ரெண்டு யொக்கு தண்ணி குடிச்சான். வயிறு நிறைஞ்சிட்டுது. களைப்பும் குறைஞ்சிட்டுது. திடீரெண்டு வானத்திலை கிபிர் சத்தம் கேட்டுது. தீச்சுவாலைத் தோல்வியின்ரை ஆத்திரத்திலை சனத்துக்கை குண்டு போடப் போறான் போல கிடக்கு. உவன் வழமையா உப்பிடித்தான். சனங்கள் விட்டு வேகமாகக் கலையுதுகள்.

இன்னும் பத்துப்பை கிடக்கு அதையும் விக்கவேணும். கிபிர் தூரத்திலை குண்டு போட்ட சத்தத்திலை நிலம் இடிஞ்சமாதிரி அதிர்ந்தது சந்தை வெறிச்சோடிப்போச்சு முந்தியும் இப்படித் தான் மந்துவில் சந்தையிலை அடிச்சுக் கனசனம் செத்ததுகள்.

வெத்திலை பாக்கு கடைப்பக்கம்போனா சில நேரம் கொஞ்சப்பை வாங்கிறவை சிலநேரம் வாங்குவினம். வெத்திலை பாக்குக் கடைக்காரர் எல்லாம் பாக்கு வெத்திலை சப்பிக்கொண்டுதான் இருக்கினை. வெத்திலைக்கடைச் சின்னப்பா என்னைக் கண்டோண்ணை வெத்திலைச் சாறு கடவாயாலை சிவப்பா வழியச் சிரிச்சார்.

அங்கையும் சனங்கள் இல்லை. அப்பிடியே தேங்காய்க்கடைப் பக்கமாப் போவம். தேங்காய்க் கடையும் வெறிச் சோடிப்போய்க் கிடக்கு கோதாரியிலை போவானாலை இண்டையான் யாவாரம் பட்டுது தேங்காய் விக்கிற பெரியாச்சி பெரிசாப் புலம்பிறா.

என்ன செய்யிறதெண்டு எனக்குத் தெரியேல்லை. எப்படியும் மிச்சப்பையும் விக்க வேணும். கவலையோடை பழக்கடைப்பக்கம் வந்தன். ரெண்டு வெள்ளைக்காரன்களும் நிண்டு பழங்கள் வாங்கிக்கொண்டிருக்கினம். வெள்ளைக்காரியள் வித்தியாசமாக உடுப்புப் போட்டிருக்கினை. என்னை அவயோடை வந்தாள் கூப்பிடுது. எனக்குக் கிட்டப்போக வெக்கமாத்தான் கிடந்தது. அவை என்னட்டை இருந்த பத்துப்பையையும் இருபோறுவா தந்திட்டு வாங்கிச்சினை.

காசை வாங்கினவுடனை நான் காலமை பை வாங்கின கடைக்குப் போனன். அவை கடை பூட்ட ஆயத்தம் செய்து கொண்டிருந்தினை. காசைக் குடுத்து மாப்பேணி ஒண்டு வாங்கினன். பொழுதுபடத் தொடங்கிட்டுது. சைக்கிள் பாக் கனகண்ணையையும் காணேல்லை. நொண்டிப் பிச்சைக் காரனும் இல்லை.

மாப்பேணியை நெஞ்சோடை அணைச்சபடி வீட்டை நோக்கி ஓடத்தொடங்கினன். அம்மாக்கு மா கரைச்சு நான் தான் குடுக்கவேணும். அம்மா என்னையும் குடிக்கச் சொல்லுவா. அம்மா சொல்லுறுதையும் மறுக்கேலாது கொஞ்சமாத்தான் குடிக்கோணும். எனக்குக் குடிச்சா அம்மாக்கு இல்லாமல் போகும்.

அம்மா வாசல்லை காத்துக் கொண்டிருப்பா. என்னைக் காணேல்லையெண்டு எத்தினை நாள் தெருவுக்கு வந்திட்டா.

என்ன இண்டைக்கு அம்மாவை வாசல்லை காணேல்லை. அட அம்மா படுத்திருக்கிறா. விளக்கும் கொழுத்தேல்லை. உடம்பு நல்லா ஏலாமல் போச்சோ, மாப்பேணியை அம்மாக்குப் பக்கத்திலை வைச்சிட்டு அம்மாவைத் தொட்டன். கையெல்லாம் குளிருது, மூக்குக்குக் கிட்டைக் கையைக் கொண்டு போனன் மூச்சைக் காணேல்லை அம்மா......

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# உயிர் ஒன்று மெய் இரண்டு

ச.பொட்டு

கார்வண்ணன் வவுனியாவில் வீரச்சாவு, அரசவானொலி அன்று பகலே முன் உணரவைத்த ஊகம் எமது தொடர்பு சாதனத்தினூடும் உறுதியாகிப்போனது.

'கார்' இன் பணியின் தாக்கம்--------- அவனது சாவின் காரணி------ அவையல்ல, இங்கு பேசுபொருள் வேறொன்று, சோகம், பாசம், அந்தரம், பரிதவிப்பு, ஆறுதல், தேறுதல் ஆக உணர்வுகளின் சங்கமம்.

ஒரு பெயரில் பலர் இருப்பது ஒன்றும் புதினமல்ல, இருப்பினும் எம்மில் புலனாய்வுத்துறையில்- பலரில் இவர்கள் இருவருக்கும் மட்டும் பெயர் கார்வண்ணன். செல்லமாக 'கார்'

இரண்டு கார்வண்ணனும் வெவ்வேறு பணியாக ஒரே பணிக்களத்தில் ஒரே நாட்களில் வவுனியாவில், நாமே உணராது வந்தமைந்து பொருந்திய நிலமையிது.

இருவரினதும் மூத்த சகோதரர்கள் இயக்க உறுப்பினர்கள். அவர்கள் இருவரும் இங்கு போர்க்களத்தில். போர்க்கள மருத்துவப் பணியில் மருத்துவர்களாக, எப்போதும் எவராலும் திட்டமிட்டு தீர்மானிக்கப்படாமலேயே ஒன்றன் மேல் ஒன்றாய் வந்தமைந்த பொருத்தங்கள் இயற்கை தன்பாட்டில் அமைத்ததோ? இந்த வினோதப் பொருத்தங்கள்.

வீரச்சாவு கார்வண்ணனாம்..... டொக்டரின் தம்பியாம்..... செய்தி பரவி, தமையன்மார் காதிலும் எட்டியது. என்னதான் இயக்கம் என்ற போதும் என்னதான் போர்க்கள வைத்தியர்கள் என்ற போதும்-----உயிர் வாழ்வுக்கும் சாவுக்கும் இடையேயான கணங்களை கண்டும். கணக்கிட்டும் பழபகியவர்தான் என்றபோதும் ---- இது தம்பியல்லவா என் தாயின் வயிற்றிலேயே உதித்த இரத்த உறவல்லவா.

முதலில் மற்ற கார்வண்ணனின் தமையன் வந்து விபரம் கேட்க வீரச்சாவு உங்கள் தம்பியில்லை அது "மற்ற டொக்ரரின் தம்பி" பதில்.

"என் தம்பி வவுனியாவில் தான் நிற்கின்றான்" வீரச்சாவு யார்? ஆள் பற்றி குறிப்புகள் சரியா? தவறா? ஆய்வு.

என் தம்பி இல்லையென்றால் என் நண்பனின் தம்பியல்லவா? என் தம்பி இல்லையென்று ஆறுதலா? என் நண்பனின் தம்பியென்று அழுகையா?

முதலில் விபரம் கேட்க வந்த தமையனின் தம்பியல்ல என்று ஆனது.

இதற்கிடையில் மற்ற கார்வண்ணனின் அதாவது வீரச்சாவு அடைந்த கார்வண்ணனின் தமையனுக்கு செய்தி வரும் விபரம் பெற விரைவு. அவருக்கும் குழப்பம் மற்ற டொக்ரரின் தம்பியா அல்லது எனது தம்பியா?

இன்னாரின் தம்பியான இந்த கார்வண்ணன்தான் வீரச்சாவு என உறுதியாகிப் போனது.

"இரண்டு போராளிகள்", "இரண்டு வைத்தியர்கள்" "இரண்டு கார்வண்ணன்களது தமையன்மார்" ஆக இருவரும் சந்திப்பு.

"உங்கட தம்பிதான் டொக்ரர் வீரச்சாவு" "உங்கட தம்பிக்கு பிரச்சினை இல்லையாம் டொக்ரர்" ஒரே நேரத்தில் ஒரே விடயம் ஆறுதல் செய்தியாகவும், தேற்றுதல் மொழியாகவும், மெதுவாய் ஒலித்தது. ஒன்றாய்க் கலந்து மௌனமாய் ஆனது.

இரண்டு கார்வண்ணன்களிடையே எல்லாமே பொருத்தம்தானா? பொருந்தாமை இல்லையா? உள்ளதே ஒரு 'கார்' இன் அம்மா, அப்பா இங்கு வன்னியில். மற்ற 'கார்' இன்




www.tamileelamarchive.com



குடும்பத்தினர் யாழ்ப்பாணத்தில்.

இது போன்ற விடயங்களில் யார் சொன்னது? ஏன் சொன்னது? எப்படிச் சொன்னது? என்ற எந்த புலனாய்வாலும் கணடறிய முடியாத தகவற் தொடர்பு செயற்படும்.

வன்னியில் உள்ள அம்மா அப்பாவிற்கு செய்தி சென்றது. தங்கள் செல்வம் வவுனியாவில் என்ற செய்தியை முன்னரேயறிந்து பதறியிருந்த நெஞ்சுகள் "வவுனியாவில் 'கார்' வீரச்சாவு" என்ற செய்தி கேட்டு அதிர்ந்தன.

உண்மையா? பொய்யா? என்று மேலதிக தகவல் தேட இடியாய் அடுத்த செய்தி
"இயக்கத்தில் இருக்கின்ற டொக்ரரின் தம்பி கார்வண்ணனாம்"

"ஐயோ! மகனே" என்று அலறும் நெஞ்சில் அடுத்த செய்தி.
"இல்லையாம், இது வேறொரு கார் வண்ணனாம்"

"இல்லையில்லை இயக்க டொக்ரரின் தம்பியாம்"

"மற்ற கார்வண்ணனின் தமையனும் இயக்கத்தில் டொக்ரர் தானாம்
பெற்ற வயிறு எரிதலின் அதிர்வைத் தணிக்கும் சமாளிப்பா? அல்லது உண்மைதானா?

சர்வதேச செஞ்சிலுவைக் கடிகாரமும் சிறீலங்காவின் படைத்துறை நாட்காட்டியும் வழமைபோல் கடமைப்படி நகர்ந்தன.

இங்கு கார்வண்ணனைச் சேர்ந்தோருக்கு நாட்கள் இரக்கமில்லாததாகவும், மெதுவாகவும் நகர்ந்தன.

செஞ்சிலுவை தாங்கிய வாகனம் கார்வண்ணனின் புகழுடல் சுமந்து, புனிதம் பெற்று நாம் மீட்ட எம்நிலம் தொட்டது.

அவனைச் சேர்ந்தோர் மத்தியில் அவனை வழியனுப்பிய தோழர்கள் முன் 'கார்' இனது வித்துடல் முன்வரிசையில், பதறும் மனத்துடனும், துடிக்கும் வயிற்றுடனும் அப்பாவும் அம்மாவும்.

அது வன்னியில் இருந்த அம்மா, அப்பா இரண்டு கார்வண்ணனில் ஒரு கார் வண்ணனை சுமந்து பெற்ற அம்மா அப்பா......

www.tamileelamarchive.com



மென்டிசு பார்க்கிறான். என்ர கடையைத்தான் பார்க்கிறான். இவன் நெடுகிலும் இப்படித்தான். நாறல் மீனை எட்டியிருந்து பூனை பார்த்துக் கொண்டிருக்கிறதைப் போல என்ர கடையைத்தான் பார்க்கிறான்.

பரதேசிப்பயல், பொட்டைப் பொறுக்கி. இப்படித் திட்டிறனெண்டு குறை நினையாதையுங்கோ என்னுடைய இயலாத்தனம். மனசுக்குள் பொருமிக்கொள்ள வேண்டியதுதான். வேறு என்ன செய்ய முடியும். தினமும் இந்த மாதிரி பொரிந்து கொட்டினால்தான் மனசின் பாரம் குறையும். கொஞ்சம் உரமாகச் சொல்வேனாகில் என்ர குரல்வளையை லபக்கென்று கொத்திக் கொண்டு போய்விடுவான். அதுதான் அமத்தி வாசிக்கிறேன்.

மென்டிசு இப்ப மூட் அவுட்டில் இருப்பான். என்னிடம் ஓசியாக ஒரு பெட்டி சிகரட் எடுத்து தம்மடித்தாத்தான் நோமலுக்கு வருவான். நான் கடைதிறந்து கூட்டித் துடைத்து- மஞ்சள்த் தண்ணீர் தெளித்து - பூ வைத்து காசு மேசையில் இருக்கும்வரை இங்கேதான் இவன் பார்வை மொய்ச்சிருக்கும்.

எனக்கும் இவனுக்கும் அதிக தொலைவு இல்லை. கூப்பிடு தூரத்திலும் குறைவுதான் என்ர கடை, கடையை எதிர்த்தாப்போல பள்ளிக்கூடம், ரண்டையும் ஊடறுத்துச் செல்லும் மெயின் றோட், பள்ளியிலிருந்து ஐம்பது மீற்றர் போனாப் போல முச்சந்தியில் தொடுக்குது. அந்தச் சந்தியில் இரண்டு றோட்டுக்கள் இணையும் சந்தியில் இரண்டு றோட்டுக்கள் இணையும் சுவருக்கிடையில் மென்டிசுவின் செக்பொயின்ற்- அந்தரங்கங்களை அவிட்டுக் காட்ட வேண்டிய இடம் இருக்கின்றது. என்ர கடையில் இருந்து பார்த்தால் அவ்விடத்து நடப்புக்கள் எல்லாம் துலாம்பரமாய்த் தெரியும்.


இண்டைக்கு ஞாயிறு. முச்சந்தி சனசந்தடியின்றி வெறிச்சோடிப் போய்க் கிடக்கின்றது. சந்தியிலுள்ள மூன்று கடைகளும் பூட்டப்பட்டிருக்கின்றன. அவை பலசரக்குக் கடைகள். என்ர கடையில் ரீ, பிளேன்ரீ, வடை, வாய்ப்பன் எல்லாம் விற்கப்படுவதால் ஞாயிறும் திறந்து பூட்டலாம். அதற்காக சாப்பாட்டுக்கடை என்று சொல்லவும் முடியாது.

பள்ளிப்பொடியங்களை நம்பித்தான்





www.tamileelamarchive.com



# அரியாத்தை

நான் இந்தக் கடையை ஆரம்பிச்சனான். பொடியள் வாங்கும் எல்லாச் சாமான்களும் அதனுடன் பலசரக்கும் என்ர கடையில் எடுக்கலாம்.

83 ஆம் ஆண்டு கலவரத்தோடு கொழும்பிலை வைத்திருந்த கடையை சிங்களக் காடையர் மூட்டின நெருப்புக்கு தானம் பண்ணிப்போட்டு சொப்பிங் பை உடுப்போடு லங்கா ராணி கப்பல் ஏறி யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனான். பள்ளிக்கூடத்திற்கு முன்னால் வீடு இருக்கிறதால் வீட்டோடு கடையொன்றை போட்டு காலத்தை ஓட்டக்கூடியதாக இருக்கிறது. இப்ப இன்னும் வசதியாகப் போட்டுது. கடையும் நடத்திக்கொண்டு வீட்டுக்கும் காவலாக இருக்கிறன்.

மெண்டிசு றோட்டில வந்து நிக்கிறான். இங்கதான் பார்க்கிறான். கடையை நோக்கித்தான் வாறான். அந்தச் சனியனையும் தோளில் கொழுவிக் கொண்டு வாறான். கடைப்பொடியனை இன்னும் காணேல்லை. இண்டைக்கு ஞாயிறுதானே பிந்தித்தான் வருவான்.

நானும் கடையைத் திறக்க லேற்றாய்ப் போச்சுது. இராத்திரி முழுக்க ரண்டு படம் பாத்ததுதான் காரணம். வீட்டுக்குள்ளேயே இருக்கிற பிள்ளைகளுக்கு அதுதானே பொழுதுபோக்கு. தாராளமாய் சஞ்சிகைகளையும் புத்தகங்களையும் கூடவே வாங்கிக் குவிக்கிறன். இவ்வளவோடை பொழுதைப் போக்காட்டி வீட்டுக்கு வெளியே வெளிக்கிடாமல் இருந்தாச் சரி. வந்திட்டான் மெண்டிசு.

"மொதலாளி வணக்கம், நம்ம கடை தொறந்தாச்சுதானே"

நம்ம கடையோ? இண்டைக்கு கடைக்கு உரிமை கொண்டாடுவாய், நாளைக்கு? மனசுக்குள் கறுவிக் கொள்கிறன். அதை வெளிக்காட்டாமல்.

"ஓம்...ஓம்....சேர்"

எண்டு வார்த்தைகளோடு நில்லாமல் அசட்டுச் சிரிப்பையும் வரவழைத்துக் கொள்ளுறன். பாணிக்கந்தன் மொதலாளி மொதலாளி எண்டு நல்ல பாணி போட்டு கதைப்பான்.

"மொதலாளி ஜாம் ரேஸ்ரு நல்லந்தானே"

அதிலும் கண் வைக்கிறான்.

"ஓம் சேர், உமக்கு எல்லாம் தரலாம்"

மெண்டிசு சேர் என்ர வாழ்க்கைக் காலத்தில் வாத்தியாரைக்கூட சேர் எண்டு அழைச்சதாக நினைவு இல்லை. மெண்டிசு சின்னப்பொடியன். இருபத்திநாலு வயது வந்துதில்லை. என்ர வயசிற்கு மகன் மாதிரி இருப்பான். இருந்தாலும் சேர் போட்டுத்தான் ஆகவேண்டும். இன்னும் நிக்கவிட்டால் கடையையே கொண்டுபோய் விடுவான்.

ஒரு பெட்டி சிகரட், ஒரு போத்தல் ஜாம், ஒரு றாத்தல் பாணைத் துண்டு துண்டாக வெட்டி எல்லாத்தையும் சொப்பிங் பையொன்றில் வைத்து அவன் கையில் கொடுக்கிறன். எனது செய்கை இந்த இடத்தை விட்டு உடனடியாக போகும்படி வேண்டுவதாக இவனுக்கு உணர்த்தியிருக்க வேண்டும். "கொந்தாய் மொதலாளி" சாமான் வாங்க வருவோர் பார்க்கக்கூடியதாக மாட்டிவைத்திருந்த பலகையை பார்க்கிறேன். அதில் காசு கொடுத்து அச்சொட்டாக எழுதியவாசகம் என்னைப் பார்த்துச் சிரிக்கிறது. கேலி செய்கின்றது. உறவுக்கு பகை கடனோ....? இன்னுமொண்டைச் சிங்களத்தில் எழுதி அருகில் வைத்திருக்கலாமே எண்டு சொல்லாமல் சொல்கிறது.

முன்னம் வறுமைப்பட்ட சனம் வந்து விடிஞ்ச கையோடு கடன் கேட்டபோது கண்மண் தெரியாமல் வாய்க்கு வந்தபடி ஏ.சித்துரத்திய கடந்த காலம் சுள் எண்டு நெஞ்சைத் தைக்கிறது.

கடைப்பொடியன் வாறான். அவனுக்கும் மெண்டிசுவின் "சப்போட்டு" உண்டு "ஜய்புவன் சேர்" சொல்லிப்போட்டு வந்துடுவான்.

மெண்டிசுக்குக் கொஞ்சம் கிள்ளிக் கொடுக்கிறதால நான் ஒண்டும் நட்டப்படப் போறதில்லை. கொழும்பில் இவன்ர பரம்பரைக்கு கப்பம் கொடுத்துப்

www.tamileelamarchive.com

பழகிப்போன கைதானே. காலை, மதியம், மாலை என மூன்று சிகரெட் பெட்டிகள், பதினொரு மணிக்கு ஒரு சோடா, மாலை ஒரு ரீ இவ்வளவுந்தான் மென்டிசுக்கான தின வழங்கல் பட்டியல். எப்பவாவது இருந்திட்டு விஸ்கட், ஜாம் எண்டு பட்டியல் நீளும் நான் எதையும் கண்டு கொள்றதில்லை. பார்த்துப் பாராமல் கொடுக்கிறதுதான். அதிகம் நல்லா சிகரெட் பிடிக்கட்டும் அப்பதான் கான்சர் வந்து வேளைக்குச் செத்துப்போவான்.

முச்சந்தியில் இந்த செக் பொயின்ற்று முளைச்ச பிறகுதான் எனக்கு வியாபாரமே சூடுபிடிச்சது. அதிலும் மென்டிசு வந்து குடியேறிய இந்த ஆறு மாசமாகத்தான் ஓகோ எண்டு நல்ல வியாபாரம். சந்திக்குப்போய் இவனிடம் சஞ்சலத்தையும் வாங்கவேண்டிவரும். அதனால் சனம் என்னிடமே எல்லாத்தையும் வாங்கிப் போயிடுங்கள்.

என்ரை கடை வியாபாரத்தைப் பார்த்து சந்திக்கடைகள் மூண்டும் மூஞ்சியை சீட்டிக் கொண்டிருக்கின்றன. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டும். இந்த வாய்ப்பை நழுவிடாமல் நல்லாகவே தூற்றிக் கொள்ளுறன்.

என்ன விலை சொன்னாலும் காசு கொடுத்துச் சாமான் வாங்கும் மனநிலையில் தான் இருக்குதுகள் சனங்கள். வெளிநாட்டுக் காசுதானே. அதற்காக அறா விலையில் விக்கலாமோ? கொள்ளை இலாபம் வைக்காமல் நியாயமான விலையில்தான் கொடுப்பன் அதாலையும் என்னிடம் வருவோர் தொகை அதிகமாக இருக்கலாம்.

சிங்களப் பாட்டுச் சத்தம் காதில் நுழையுது மென்டிசுதான் காலையிலேயே கைகளைத் தட்டி உரத்துப் பாடுறான். நல்ல மூட்டில் இருந்தாத்தான் இவன் வாய்க்குள்ளால் பாட்டு வரும். செக் பொயின்ரையும் தாண்டி றோட்டை வினவுகின்ற போதுதான் பாட்டு வரும் காரணம் புரியுது.

வருகிறாள். அவள்தான் ஆட்டக்காரி மென்டிசுவின் நோனா அவள் சிங்கிச்சா பாவாடையுடன் சிங்காரமாக சைக்கிள் ஓடி வருவது எடுப்பாத்தான் இருக்கு. அவளது தூக்கலான தோற்றம் எழுத்தாளர் சுஜாதாவை நினைவுபடுத்துது. அவர் யாழ்ப்பாணத்து செவ்விளனிதான் தனக்கு ரொம்ப பிடிக்குமாம் என்று ஏதோ ஒரு சஞ்சிகைக்கு கேள்வி பதில் எழுதி முறையாக வாங்கிக்கட்டினவர். இவங்களுக்கு யாப்பாணே தெம்பிலிதான் வேண்டும் போல கிடக்குது.

அவளைக் கண்டால் இவனுக்குக் காணும். எனக்கு கண்ணிலும் காட்டக் கூடாது. நேரம் போவது தெரியாமல் சல்லாபிப்பாள், சிரிப்பாள், நெளிப்பாள்.



அதொண்டு இந்த நேரம் இவன்ர கெடுபிடிகள் ஓய்ஞ்சிருக்கும். சனமும் நிம்மதியாக போய் வருங்கள்.

அவள் வந்த கையோடு என்னவோ கதைத்துப்போட்டுத் திரும்புறாள். இவன் விடுறதாயில்லை. சைக்கிளின் முன் நின்று மறிக்கிறான். அவள் உச்சிக்கொண்டு போறாள். பத்து அடி போயிருக்கமாட்டாள் திரும்பி இவனைப் பார்க்கிறாள்.

மென்டிசு வலது கை விரல்களை தனது குவித்த உதடுகளில் வைத்து பக்க வாட்டாக வேகமாக எடுக்கிறான். அவள் தலையை சிலிப்பிப்போட்டு ரற்றா காட்டிக் கொண்டு போறாள். என்ன கிசுகிசுவோ? அப்பனே உனக்குத்தான் வெளிச்சம்.

அவளுக்காக அண்டைக்குப் பரிதாபப்பட்டேனே. வெப்புசாரம் தலைக்கேறுகிறது. வெக்கம் கெட்டவள்.

இவன் ஒரு செக்கல் நேரம் றோட்டால் போனவையள் மீது சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தான். அந்தச் சமயம் பார்த்து அவள் நைசாக அவ்விடத்தை விட்டு கழன்று போக எத்தனித்தாள். இவன் கண்டிட்டான்.

"நங்கி எங்க போறது நாம செக் பண்ணாம"

அவள் திடுக்குற்று மிரண்டு போய் கொண்டு நின்றாள்.

"கையை அப்பண்ணு, குண்டு கொண்டு போறது"

என்றவன் தாமதிக்காமல் அவளை நெருங்கினான் அவளின் உடலில் ஆங்காங்கே இவனது கைகள் தட்டிப்பார்த்தன. அந்தச் சாட்டில் இவன் என்னோவெல்லாம் செய்து கொள்ள முனைந்தான். அவள் வேறு வழியின்றி அழுதுகொண்டு போனாள்.

அந்தப் பிள்ளையா இந்தப்பிள்ளை? ஜீரணித்துக் கொள்ள கடினமாக இருக்கிறது. எப்பவாவது இந்தப் பொயின்ரைக் கடந்து போறவள். எப்படி இவ்வளவுக்கு நெருங்கிப் பழகினாள் எண்டோ? அந்த நெருக்கம் தப்புச் செய்யுமளவுக்கு எல்லை மீறிவிட்ட தெண்டோ நான் சொல்லமாட்டன். ஆனா இந்த நெருக்கம் எங்கே போய் முடியப் போகுதோ....?

மென்டிசுவில எனக்கு வெறுப்புத்தான் எக்கச்சக்கம். ஆனால் வெளிக்காட்டுரதில்லை. அடிக்கடி மனிசத்தன்மைகள் இவனிடமிருந்து விலகிப் போயிடும். அந்த நேரங்களில் இவனுக்குள் ஒழிந்திருக்கும் காட்டுமிராண்டித்தனம் சன்னதம் கொள்ளும். கிழடுகட்டைகள், பிள்ளைத்தாச்சிகள், குழந்தை குட்டிகள் எண்டெல்லாம் வேறுபடுத்திப் பார்க்கமாட்டான். அங்குலம் அங்குலமாக ஆராய்வான். அதற்குள் இவன்ர சொறிச் சேட்டைகளும் அரங்கேறும். அப்புறம்தான் போவதற்கு அனுமதி கொடுப்பான். இவன்ர இந்தமாதிரியான செயல்களினால் அதிகாரிகள் மட்டத்தில் இவனுக்கு நல்ல பெயரும் உண்டு.

மென்டிசு சந்தியில மூண்டு கடைகள் இருக்கத்தக்கதாக எட்ட இருக்கிற என்ர கடைக்குத்தான் வருவான். என்னில் என்ன பாசமோ நாசமோ தெரியேல்ல. நானும் மூன்று பொம்பிளைகளை வைச்சிருக்கிறன். இந்தக் காலத்தில வாழத் தெரிஞ்சிருக்க வேண்டும்.

உன் சாவாசமே வேண்டாமென்று வெறுக்கவும் முடியாது. எடுத்தெறிந்து நடப்பேனாகில் இவன் என்மீது கறள் வைத்திடுவான். பின்னாடி குண்டைக் கிண்டை கழட்டிக் கடைக்குள் போட்டு தன் கோபத்தை சாதித்திடுவான். இயலுமானவரை கதைத்துப் பேசி சாதுரியமாக நடக்கிறதுதான். எது எப்படியோ மென்டிசுவின் உறவை வீடுவரை நீட்டாமல் கடையோடு வெட்டுகிறதில நான் வலு கவனம்.

சமுசய கண் கொண்டு பின்னும் முன்னும் அவதானித்து வருகிறவையளுக்கு என்ர நடவடிக்கை பிழையாகத்தான்படும். எண்டாப்போல ஒருபகுதிக்கு தலையையும் மறுபகுதிக்கு வாலையும் காட்டும் வழுசல் குணம் என்னிட்ட கிடையாது. எதையும் தீர விசாரித்து முடிவு எடுக்கும் தன்மை இப்ப 'பெரிசு' களிடம் இருப்பதனால் நான் இதையிட்டு பெரிசாக அலட்டிக் கொள்ளுறதில்லை.

மென்டிசு இப்ப முன்னையமாதிரி இல்லை. நிறைய மாற்றம் தெரியுது. அந்த சிங்கி நோனாவோடுதான் கூடிய நேரம் மினக்கெடுறான். அதால் வேற பெண் பிரசுகளில் நாட்டம் குறைஞ்சு போச்சு.


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அவள் மதம் பிடித்த யானையை அங்குசம் கொண்டு அடக்கிற போல மெண்டிசுவைத் தன் கட்டுக்குள் கொண்டு வந்திட்டாள். அப்படி என்ன மாயா ஜால வித்தை காட்டினாளோ நான் அறியேன்.

என்ன இருந்தாலும் இந்த புள்ள இப்படி நடந்து கொள்ளக்கூடாது. இவளின் அப்பன் ஆத்தை இந்த நாட்டில் இல்லைப்போல. அதுகள் இருந்தால் இந்தமாதிரி நெறிகெட்டு நடக்க விடுங்களா? மெண்டிசு மாதிரி எத்தனை ஆமிக்காரன்களோடு 'லிங்' இருக்குமோ ஆர் அறிவர்? ஒரு பொம்பிளையைப் பற்றி எலும்பில்லாத நாக்கினால் எழுந்தமானமாக கதைப்பது தப்புத்தான். நானும் வயசுக்கு வந்த பொம்பிளைகளை வீட்டிலை வைச்சிருக்கிறன். அதுகளின் வளர்ப்பில் ஆராவது குறை சொல்லட்டும் பாப்பம்.

ஐஞ்சு ஆண்டுகளுக்கு முன்னம் இவளும் நாலு பேர் பார்க்க நல்ல பிள்ளையாகத்தானே நடந்திருப்பாள். இப்பதான் அமர்கொண்டு அலையிறாள். அப்படி மெண்டிசுவில் என்னத்தைக் கண்டாளோ? வெள்ளையும் சுள்ளையுமாக இருந்தால் சரியே. காப்பிலி ஆமிக்காரனாக இருந்தாலும் ஏதாவதொரு காரணம் கற்பிக்கலாம். இவன் கழுதை கால்காசுக்கும் குடும்பம் நடாத்த வக்கில்லாதவன்.

நாசமாப் போவார் வந்த பிறகுதானே இந்தக் குடாநாட்டிலை மாத்திரம் எயிட்சு கண்ட எட்டுப்பேர் வரையில் இனங்கண்டு பிடித்திருக்கிறாங்களாம். அடுத்த நோய்க்காரி இவளோ? அந்த துர்ப்பாக்கியசாலி இவளாக இருந்துவிடக்கூடாது என்பதே என் வேண்டுதல். முருகா நீதான் ஒரு வழி பண்ணணப்பா.

என்ர கடைக்குட்டி வாறாள். இண்டைக்குப் பள்ளி இல்லைத்தானே. ஏதாவது இடைத்தீன் போட்டாத்தான் அவளுக்குப் பத்தியப்படும். உன்னை ஆரம்மா இங்க வரச்சொன்னது. அந்தப் பிராந்து கண்ணிலை எத்துப்படாமல் இருக்கிறதுதான் நல்லது. டேய் பெடியா அரைக்கிலோ விஸ்கட்டும் ஒரு கிலோ பழமும் கொடுத்துடு. கெதியா வீட்டை ஓடிப்போமா.

நான் பிராந்தைப் பார்க்கிறன். அது மயில் ஒண்டுடன் கூடிக்குலாவிக் கொண்டிருக்கிறது. அந்த மயில் அவள்தான். மறுபடியும் வந்திருக்கிறாள். துரையைத் தேடி வந்திட்டாள் தோறை.

மெண்டிசு தனது கைகளை அவளது முகத்தருகே கொண்டு போறான். அவள் செல்லமாகத் தட்டிவிட்டு வாய்க்குள் ஏதோ முணுமுணுக்கிறாள். அந்தவுடன் இவன் என்னைப் பார்க்கிறான். நான்



பார்த்துக்கொண்டிருக்கிறன் என்று சொல்லியிருப்பாளோ? அவள் முணுமுணுத்ததையும் சட்டை செய்யாமல் மறுபடியும் குறும்பு செய்யும் அவதியில் இவன் கைகள் நீளுகின்றன. அவளும் திரும்பத் திரும்ப மறிக்கிறாள். என்ன ஆட்டம் ஆடினாலும் அவள் ஒரு பொம்பிளை அல்லவா? மெண்டிசுக்கு என்ன? இவன் விகாரமாதேவி பூங்காவிலும் கோல்பேசிலும் புரண்டு எழும்பியிருப்பான்.

இவன்ர தொந்தரவு தாங்காமல் அவள் அங்கிருந்து நகர எத்தனிக்கிறாள். ஏதோ சொல்லுகிறா ன். அவள் தலையாட்டிவிட்டு என்ர கடையைப் பார்க்கிறாள். இங்கதான் வாறாள். என்ன அலுப்புக்கோ தெரியேல்லை. நான் முகத்தைச் சப் என்று இறுக்கி வைத்துக்கொள்கிறன். வட்டமுகம். உச்சி பிரியாது வாரியிளுத்த தலை. எண்ணெய் காணாத கட்டையான கூந்தல். திரட்சியான கன்னங்கள். உருண்டு திரண்ட உதடுகள். இப்ப எல்லாருடைய வாய்களும் உச்சரித்து ஓய்ஞ்சு போயிருக்கும் அசல் மோனிக்காவே தான்.

இண்டைக்கு சிங்கிச்சா இல்லாமல் தொளதொளத்த கறுப்பு நிறமான தோப்புளாசு பாவாடை உடுத்தியிருக்கிறாள். இலேசான தாண்டலுடன் கூடிய நிமிர்ந்த நடை, அளவில்லாத சன்ரில்ஸ் போட்டிருக்கிறாளோ? அல்லது முன்னம் பின்னம் சன்ரில்ஸ் போட்டு நடந்து பழக்கமில்லையோ?

பாவாடைப் பொக்கற்றிற்குள் கையை நுழைத்து நூறும் ஐம்பதுமாக நூற்றைம்பது ரூபா காசை எடுத்து நீட்டுகிறாள்.

"கண்டோஸ் தாங்கோ ஐயா?"

"இவ்வளவுக்குமோ?"

இறாங்கியான தோரணையில் கேட்கிறன்.

"இல்லை. உதிலை ஒண்டு தாங்கோ"

ஐம்பது ரூபா பெறுமதியான கண்டோசை எடுத்துக் கொடுக்கிறன். அவள் அதை பெற்றுக்கொண்டு நேரே மெண்டிசுவிடம் நடந்து போகிறாள். அவளை எடைபோடும் அவதியில் மிச்சக்காசைக் கொடுக்க மறந்திட்டன். அவளும் கேட்கயில்லை. சைக்கிள் நிற்குதுதானேன். ஈடுக்க வரேக்க குடுப்பம்.

கண்டோசை நீட்டுகிறாள். இவன் அதை வாங்குவதோடு அவளது கை விரல்களையும் பற்றிப்பிடிக்கிறான். அவள் சடாரென்று கைகளை இழுத்துக் கொள்கிறாள். கன்டோசுப் பேப்பரை பிரித்துக் கொண்டு ஏதோ இவன் கேட்க மறுப்பதற்குப் பதிலாக தலையாட்டுகிறாள். மெண்டிசு கெஞ்சுகிறான்.

அவளது பதில் சிரிப்பாகவே இருக்க இவன் மறுபடியும் மறுபடியும் கெஞ்சுகிறான். அவள் இவன்ர ஆக்கினை தாங்கமாட்டாமல் சம்மதிப்பதுபோல தனது கட்டை விரலும் கடைவிரலும் மடித்திருக்க மூண்டு விரல்களையும் நிமிர்த்திக் காட்டுகிறாள். இவனின் மூஞ்சியில் புளுகம் தெரிகிறது. பிரித்த பேப்பரைச் சுற்றி கண்டோசை பொக்கற்றுக்குள் வைக்கிறான்.

இந்தநேரம் பார்த்து இந்தப் பொடியன் கடைக்குள் வாறான். புது முகமாய்க் கிடக்குது. முகத்தில் பாதியைத் தாடி மறைக்குது. ஏதாவது சாப்பிடத்தான் வந்திருப்பான்.

"டேய் பெடியா தம்பிக்கு தட்டெடுத்து வை"

"ஐயா ஒண்டும் எடுக்க வேண்டாம் ஒன்லி பிளேன்ரீயும் சிகரெட் ஒண்டும் எடுங்கோ"

இவனும் புகைத்தல் பேர்வழியாக இருக்கிறான். நான் இவனோடு கதைத்துக்கொண்டு நிற்க அவள் கடைக்குள் வந்திற்றாள். "ஐயா பெப்சி ஒண்டு எடுங்கோ உதிலை பத்து ரொபியும் தாங்கோ"

கடைப்பொடியன் சோடா எடுக்கிறான். நான் கணக்குப் பார்த்து மிச்சக் காசை கொடுக்கிறன். பெரிய வசதியானவள் எண்டு சொல்வதற்கில்லை. தன்னை அழகுபடுத்தவேண்டும் எண்டு அதிக சிரத்தை எடுப்பவளாகவும் தெரியேல்லை. அவளைப் பார்க்கும்போது அவசர அவசரமாக கழுவாத முகத்திற்குக் கிறீம் பூசி ஐரெக்சு, லிப்ரிக்கு கொண்டு ஒப்பனை செய்தாளோ எண்டு தோன்றுகிறது. இடக்கை மணிக்கட்டில் காயம் ஆறிய தழும்பு வேற தெரிகிறது.

சூரியக்கதிர் சண்டைமூட்டம் செல் விழுந்து ஆத்தை அப்பன் செத்துப்போக இவள் சின்னக்காயங்களோடு தப்பித்திருக்கலாமோ? வாழ வழி தெரியாமத்தான் இந்த நிலைக்கு

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தள்ளப்பட்டாளோ? அவளைப் பார்க்க இரக்கமாகவும் கிடக்குது. ஆத்திரம் ஆத்திரமாகவும் வருகுது.

"நாங்களும் சோடா குடிப்பம்" சிகரெட்டை வாயிலை வைத்துச் சுருளாக புகை விட்டுக் கொண்டிருந்த அந்த வாட்டசாட்டமான பொடியன்தான் மெதுவாக சொல்கிறான். அது அவள் காதிலும் விழுந்திருக் வேண்டும். டக்கெண்டு திரும்பியவள் புன்னகைத்தபடி "அட நீங்களும் இங்கைதான் நிக்கிறியளோ" என்கிறாள். பிறகு மூண்டு ரொபிகளை உவன் முன்னால் வைத்துப்போட்டு இப்ப ரொபி மட்டும்தான் அப்புறம் உங்களுக்கும் சோடா தரலாம் எண்டு அதே புன்னகையுடன் சொல்லிப்போட்டு வெளியேறுகிறாள்.

உவன் தன் பங்கிற்குச் சிரித்தபடி ஒண்டு, ரண்டு, மூண்டு எண்டு எண்ணிக்கொண்டு அதில் ஒண்டை வாய்க்குள் போடுறான்.

எனக்குத் தெரியாதவனையும் தெரிகிறபடியால் இவள் தொழிலுக்குப் புதுசு இல்லை. அடிபட்டவளாகத்தான் இருக்கிறாள்.

"ஐயா, ரொபி சாப்பிடுங்களேன்" என்ர யோசனையைக் கலைத்தவன் எனக்கும் கடைப் பொடியனுக்கும் நீட்டுகிறான்.

"ஏன் தம்பி நாங்கள் தான் போத்தல் நிறைய வைச்சிருக்கிறமே"
"அது எனக்கு தெரியும் ஐயா நான் தாறன் பிடியுங்கோவன்"
"வேண்டாம் தம்பி" எண்டு நான் ஒரேயடியாக மறுத்துவிட எழுந்து போய்விடுகிறான்.

காசு தராமல் போறான். பிளேன்ரீயும் சிகரெட்டும்தானே போகட்டும். இனிமேல் இந்தப்பக்கம் வராமல் இருந்தால் சரி. அவரின் தாடியும் தலைஇழுப்பும். அம்மன் கோயிலடியில் புதிசாத் திறந்த செயலகத்தில் நிக்கின்ற களிசறைகளில் ஒருத்தனாகத்தான் இருப்பான்.

மெண்டிசு சோடாவை வைத்து மண்டுறான். அவளைக் காணேல்லை. போயிருப்பாள். அவனுக்கென்ன ஓசிச் சோடா, ஓசி ரீ, ஓசிச் சிகரெட் வாழ்க்கை ஈசியாகவே போகுது.

அன்ரி வருகிறா வாங்கோ., அன்ரி பாணோ வேணும். மதியத்திற்கோ, பிள்ளைகள் எல்லாரையும் வெளியில அனுப்பிப்போட்டு நீங்கள் பாணோடு காலத்தை ஓட்டுறியள். அதுவும் சரி. அங்கிளுக்கு டையப்பிற்றிக் சோறு ஆக்கி ஆர் சாப்பிடுகிறது. டேய் பொடியா அன்ரிக்கு ஒரு பாணும் ஒரு கிலோ பழமும் குடு. ஆயிரத்தை நீட்டுறியள். இண்டைக்கு மாத்தக் கூடியமாதிரி இல்லை. பிறகு கொண்டு வந்து தாங்கோவன். சரி போட்டு வாங்கோ.

அன்ரியின்ர லண்டனில் இருக்கிற இளையவனுக்கு என்ர மூத்தவளை கட்டிக்கொடுக்கிற பிளான் இருக்கு. அன்ரியும் ஓம்படுவா போல இருக்கு அதுதான் அவவோட நல்லமாதிரி நடந்து கொள்கிறனான்.

இவ அன்ரிக்கு மெண்டிசுவில் நல்ல விருப்பம். அவவின் மூத்த பொடியன் இவன் மாதிரித்தான் நல்ல வெள்ளையாம், இவனும் அன்ரி, அன்ரி எண்டு நல்லா வழிவான். அப்பப்ப நல்ல தீனும் செய்வித்துச் சாப்பிட்டிடுவான். அன்ரி சொல்கிறா, வடிவான பொடியங்களாம், டீசன்ரா கதைப்பாங்களாம், அன்ரி இன்னும் நல்லது கெட்டதை கண்டறியிறாவில்லை.

கோப்பாய் பக்கத்திலை அறுவது வயசுக் கிழவியை ஏதோ செய்து போட்டு நகை நட்டுகள் எல்லாத்தையும் களவு எடுத்துக்கொண்டு போனது இந்த டீசன்ரான பொடியங்கள்தான் எண்டு அன்ரிக்குத் தெரிஞ்சிருக்கத்தானே வேணும்.

நானும் மெண்டிசுடன் சுமுகமான உறவைப் பேணுகிறன். அதனால் எனக்கு இப்போவரை நன்மைகள்தான் அதிகம்.

கடைசியா வந்த போயா தினத்தண்டைக்கு இராத்திரி உதுகளில் கொஞ்சத்திற்கு நிறைவெறி, பைலா ஆடி கற்கள் எறிஞ்சு கலாட்டா செய்ததுகள். அவைகளில் ஒண்டோ ரண்டு என்ர கடைக்கதவோடு மல்லுக்கட்டிச்சுதுகள். நான் கடைக்குள் படுத்திருந்தனான். மெண்டிசுதான் ஏய் அது நம்ம மொதலாளி கடை, நம்மகடை எண்டு சொல்லி தடுத்தது என்ர காதிலை விழுந்தது. அண்டைக்கு இவன் இல்லாட்டி கடைக்கு நாசந்தான்.

நான் செல்லமாக வளர்க்கும் ஜிம்மிக்கு வாரத்திலை மூண்டு தடவை இறைச்சியும் முள்ளும் வாங்கி வைக்கிறனான். அதை திண்டிட்டு அது உசாராக வீட்டைக் காக்குது. மெண்டிசுக்கு ஒருநாள் தப்பாமல் சோடாவும், சிகரெட்டும் கொடுக்கிறன். இவன் குடித்துப்போட்டு என்ர கடையைக் காக்கிறான். என்ர சிநேகிதன் அடிக்கடி சொல்லுவான். நாய் எண்டால் கடிக்குமாம், பாம்பு எண்டால் கொத்துமாம், ஆனா மனிசன் எந்த நேரம் என்ன செய்வான் எண்டு தெரியாதாம். அதுவும் சரிதான் அப்பனே நீதான் காப்பாற்ற வேண்டும்.

அவள்தான் இதோடை மூண்டாம் தடவையாக இவனை சந்திக்கிறாள். ஏதும் கனத்த நாளோ? றோட்டில சனப்புழக்கம் குறைவு. மற்றைய நாளுகளில் வேலைக்குப் போகிறவளாக இருக்கலாம். இண்டைக்கு வீட்டிலை இருந்திருப்பாள். பொழுதைப் போக்காட்டுவதற்காக அடிக்கடி இவனிடம் வருகின்றாளோ? மெண்டிசும் வழமைக்கு மாறாகத்தான் நிக்கிறான். இவன் முகத்தில் புளுகமும் பரபரப்பும் தாண்டவமாடுகின்றது. அவன்ரை நடவடிக்கைகளிலும் அவதி தெரிகின்றது.

அவள் சைகை காட்டிவிட்டு வருகிறாள். என்ர கடையைத் தாண்டிப் போகின்றாள். இவன்ரை நசல் பார்வை அவள் மிதே படர்கின்றது. அந்தப்படியே பொக்கற்றுக்குள் இருந்து கண்டோசை எடுக்கிறான். உதடுகளை குவித்து அதன்மேல் வைக்கிறான். திரும்ப அதை உள்ளே வைக்கிறான்.

எதேச்சையாக, சுவரிலை மாட்டியிருந்த மணிக்கூட்டைப் பார்க்கிறன். அது சரியா மூண்டைக் காட்டுது. இப்பதான் புரிகின்றது. அவள் காட்டிய மூண்டு விரல்களின் தாற்பரியம். புரிஞ்சதுதான் தாமதம் மெண்டிசுவைப் பார்க்கிறன். அவனும் வெளிக்கிட தயாராகின்றான். ரண்டு பேர்






www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இருந்து உல்லாசமாக ஓடும் அந்த நீளமான சைக்கிளை எடுத்துக்கொண்டு வாறான். என்ர கடையைத் தாண்டிப் போகின்றான்.

எங்க போகின்றான்? புதிர் ஒண்டு எனக்குள் விரிகின்றது. எங்கே விடை கண்டு பிடி பார்ப்போம் எனக்குச் சவால் விடுகிறது. கண்டுபிடித்து விடும் அவாவில் கடைவாசலுக்கு வருகிறன். றோட்டை பார்க்கிறன்.

நான் பார்க்கிற அதே நேரம் மென்டிசு அந்த வீட்டுக்குள்ளை போகின்றான். அது பள்ளிக்கூடத்திலிருந்து மூண்டாவது வீடு. வீட்டின் சொந்தக்காரன் கணேசன் வன்னியிலை இருக்கிறான். வெறிசாக் கிடக்கும் அந்த வீட்டுக்குளை இவனுக்கு என்ன அலுவல்?

அதற்கு எதிரே என்ர தங்கச்சி வீடு. புதினம் அறியும் அவா என்னை விடுகிறதாயில்லை. போ, போய் என்னெண்டு ஒருக்காப்பார் எண்டு தள்ளுகிறது. கடையிலை பொடியனை விட்டிட்டு விண்ணானம் அறிய விரைகிறேன்.

கணேசனின் வீட்டைத் துளாவிப் பார்த்தபடி தங்கச்சி வீட்டுக்குள் நுழைகிறேன். ஒண்டும் தெரிகிறதாயில்லை. ஆ..... அந்த மென்டிசுவின் சைக்கிள். அதற்குப் பக்கத்திலை அது.....? அது அவளின் சைக்கிள்தான்.

அப்ப சரியா கதை. கண்டோசு பேப்பரை பிரிச்சு, அதை எடுத்து.... ச்சே கேவலம் கெட்ட வேலை இனியும் அவ்விடத்திலை நிக்கப் பிடிக்காமல் கடைக்குத் திரும்புவோம் எண்டு முடிவு எடுக்கையிலை அதற்குள் படீர்.... படீர்.... எண்ட ஓசைகள் வந்து காதுச் சவ்வைக் கிழிக்கின்றன. ரண்டும் வெடிச்சத்தந்தான்.

சந்தேகமே இல்லை. மென்டிசு. அவளைச் சாகடித்துப்போட்டான். அட படுபாவிப் பயலே. உன்ர காரியம் நிறைவேறியதும் அவள் கதையை முடிச்சுப்போட்டியே. நான் வேதனைப்பட்டுக் கொண்டிருந்த அந்தக் கணத்தில் திடுப் எண்டு அவள்தான், அவளேதான் வெளியே வருகின்றாள். தெறித்த இரத்தத் துளிகளை லேஞ்சியில் துடைத்தபடி. அதே சமயம் அருகிலை உள்ள ஒழுங்கையினாலை மிதந்து எனக்கு றொபி தந்த பொடியன் றோட்டிலை எதிர்ப்படுகின்றான்.

மதம் கொண்ட யானையைக் கொன்று நிமிர்ந்தவளாக அவன் துணையுடன் அவள் அவசரமாக அவ்விடத்தைவிட்டு போகின்றாள். நான் திகைப்பு எடுபடாமல் விறைத்த கட்டையாக நிக்கிறன்.

**த.ம.சேந்தன்**



## தேடுங்கள் ஓவியங்களை

மாற்றுங்கள் உங்கள் ஓவியங்களை
இவை உங்களுடையவை அல்ல
யாரோ என்றோ
விட்டுச் சென்ற
அடையாளங்களையும்
போட்டு வைத்த கோடுகளையும்
பின்பற்றிச் செல்லும் ஓவியங்கள்
உங்களுடையவை அல்ல.
நிஜங்களைத் தேடுங்கள்
உங்களுக்கென்று உங்களுக்காக
புதிய கோடுகள் தோன்றும்
அவற்றின் ஆதியில் இருந்து
உங்கள் ஓவியங்களை வரையுங்கள்
அவையே உங்களுடையவையாக
அமையட்டும்.


அதுவரை ஓவியங்கள் ஒவ் வொன்றும்
உங்களுடையவை அல்ல என்று
உணருங்கள் அப்போது
நீங்கள் புதியவர்களாக
இவ் வையகத்தில் தோற்றம்
பெறுவீர்கள்
தடங்கள் புதியனவாக மாறும்
புதிய புதிய ஓவியங்கள் தோற்றம்
பெறும்.

**ஆத்மரிஷி**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



ஆதிலட்சுமி சிவகுமார்

# விடுகை

“நீங்கள் எப்பிடியும் பொங்கலுக்கு வீட்டை வருவீங்கள் என்று இரவிரவாக பாத்துக்கொண்டிருந்தோம். ஏதோ வேலையாக்கும். அதுதான் நீங்கள் வரவில்லை. ஆனாலும், அடுப்பில் அரிசி போட்டுப் பொங்கி பிள்ளையளுக்கு குடுத்தனான். நாங்கள் முற்றத்தில் பொங்காததால் நிறையப்போ் புக்கை கொண்டுவந்து தந்தார்கள். நீங்கள் வந்தாலும் என்று நல்லதாய் கொஞ்சம் எடுத்து வைத்தனான்... நீங்கள் வரேல்லை....”

அவன் சுவரில் தொங்கிக் கொண்டிருந்த நாட்காட்டியைப் பார்த்தான். ஜனவரி - 18 .... சிவப்பு நிறத்தில் பெரிதாக இருந்தது. சடாரென்று நெஞ்சுக்குள் சுருக்கென்று ஏதோ தைத்தது.

மெல்ல நடந்து வெளியில் வந்தான். அலுவலகத்தின் இடதுபுறமாக சடைத்து நின்ற மாமரத்தின் கீழ் இரண்டு பிளாஸ்டிக் கதிரைகள் தெரிந்தன. நகர்ந்து போய்க் கதிரை ஒன்றில் அமர்ந்துகொண்டான்.

இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னரே மழை ஓய்ந்து போனாலும், காற்றில் குளிர்மை இருந்தது. சேற்று மணமும் சேர்ந்திருந்தது.

“பூத்தகொடி பூக்களின்றித் தவிக்கின்றது...” யாரோ ஒருவன் இருளில் வீதியால் பாடிக்கொண்டு போனான்.

அவன் நெஞ்சில் கையைவைத்துப் பொக்கெற்றைத் தடவிப் பார்த்தான். அவனுடைய மனைவி மதி எழுதிய கடிதம் உள்ளே மடமடத்தது.

“நீங்கள் எப்பிடியும் பொங்கலுக்கு வீட்டை வருவீங்கள் என்று இரவிரவாக பாத்துக்கொண்டிருந்தோம். ஏதோ வேலையாக்கும். அதுதான் நீங்கள் வரவில்லை. ஆனாலும், அடுப்பில் அரிசி போட்டுப் பொங்கி பிள்ளையளுக்கு குடுத்தனான். நாங்கள் முற்றத்தில் பொங்காததால் நிறையப்போ் புக்கை கொண்டுவந்து தந்தார்கள். நீங்கள் வந்தாலும் என்று நல்லதாய் கொஞ்சம் எடுத்து வைத்தனான்... நீங்கள் வரேல்லை....”

மனைவியின் கடிதம் அவனுக்கு மனப்பாடமாய் இருந்தது. விடுமுறை நாளிற் கூட வீட்டுக்கு வராமலிருப்பதை எந்தவிதமான கடுகடுப்புமின்றி ஏற்றுக்கொள்ளும் தன் மனைவியின் மனப்பக்குவம் அவன் அறிந்ததுதான். ஆனாலும் ஏதோ ஒரு குற்ற உணர்வு உறுத்தியது.

திருமணமான ஆறுவருடங்களின் அவள் ஒருபோதும் ஒன்றையும் தன்னிடம் யாசிப்பதில்லை என்பதை அவன் நினைத்துக்கொண்டான். வேதனை கலந்த மகிழ்வாயிருந்தது.

அலுவலக விடுதியில் இப்போது இரவு உணவு நேரம். உணவுப் பாத்திரங்களும், உணவருந்துபவர்களின் கூச்சல்களும், சிரிப்பும் அலைமோதிக் கொண்டிருந்தன.

அவனுக்கு இந்தக் கூச்சல் கும்மாளங்களில் ஈடுபடும் மனநிலை இல்லை என்பதால் அவன் ஒதுங்கியிருந்தான். எல்லோரும் சாப்பிட்டுவிட்டு போன பின்னர் அவன்





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

எழுந்து போய்த் தனக்குரிய உணவை வாங்கிச் சாப்பிடுவான். உணவு பரிமாறும் ஐயா அவனுக்குரிய உணவை எப்போதும் எடுத்து வைத்திருப்பார்.


அவரைப்பார்த்தால் அவனுக்கு செத்துப்போன அப்பா நினைவுவரும்.

அங்கு பணியாற்றுபவர்களில் அவன் மட்டும்தான் திருமணமானவன் என்றில்லை. ஆனால் அவர்களுக்குக் குடும்பம் ஒரு சுமையாகத் தெரியவில்லை. சிலர் ஒவ்வொரு நாளும் காலையில் வேலைக்கு வந்து மாலையில் வீடு திரும்பி இருக்கிறார்கள்.

ஆனால் அவன் இருபத்திரண்டு கிலோ மீற்றர் தூரம் தினமும் சயிக்கிள் ஓட முடியாதென்று விடுதியிலேயே தங்கிக்கொள்வான். அவனுடன் விடுதியில் இன்னும் பலர் இருக்கிறார்கள்.

அவனுக்கு யாரோடும் ஒட்டுதலில்லை. அதேபோல் பகைமையும் இல்லை. அவன் வயதொத்தவர்கள் என்று யாருமில்லை. அவனை விட வயதில் இளையவர்களும், வயதில் மூத்தவர்கள் சிலரும் இருக்கிறார்கள்.

போனமாதம் அவன் விடுப்பில் வீட்டுக்குப் போயிருந்தான். கிறிஸ்மஸ் காலப்பகுதி என்பதால் ஊர் களைகட்டியிருந்தது. பலவருடங்களுக்குப் பிறகு பட்டாசுகளும் வெடித்தன.



அவனுடைய கடைசிப்பிள்ளை சூரியா வெடிச்சத்தத்தில் பயந்துபோய் அவனுடைய தோளைவிட்டு இறங்கவேயில்லை. அவர்களுடைய நாயும் வீட்டு மூலைக்குள் சுருண்டுவிட்டது.

"அப்பா.... ஏன் ஆக்கள் பட்டாசு கொளுத்துறவை?...." அவனுடைய மூத்தவள் கிரிஜா கேட்டாள்.

"தங்களின்ர மகிழ்ச்சியை மற்றவர்களுக்குத் தெரிவிக்கிறதுக்காக......"

"இப்படி காசைச் செலவழிச்சு மகிழ்ச்சியை மற்றவைக்கு தெரிவிக்க வேணுமோ?......" எவ்வித தயக்கமுமில்லாமல் கேள்வி பிறந்தது. மகளின் கேள்வி அவனைத் திணறவைத்தது. அவளை அணைத்து முதுகில் தடவிவிட்டான். பதில் சொல்ல முடியாமலிருந்து.

"உங்களுக்குப் பட்டாசு கொழுத்த விருப்பமோ?...." கேட்டான்.

"ஐயோ..... வேண்டாமப்பா..... உந்தச் சத்தமே எனக்கு விருப்பமில்லை......."

அவன் வழக்கத்துக்கு மாறாக இம்முறை நான்கு நாட்கள் விடுப்பில் நின்றான். அவன் கூடுதலாக வீட்டில் நின்றதால் குழந்தைகள் குதூகலமாய் இருந்தார்கள்.

மனைவியிடம் பணம் பற்றாக்குறையாக இருந்திருக்கவேண்டும். அவள் அந்தப் பற்றாக்குறையை வெளிப்படுத்தாமல் நாட்களை அவதானமாக நகர்த்தினாள். அவனும் அவள் தன்னிடம் அதைச் சொல்லவேண்டுமென்று எதிர்பார்க்கவுமில்லை.

"ஒருவேளை எப்பாலும் லீவிலை வந்து நிக்கிறவரிட்டை ஏன் அதில்லை இதில்லை என்று புலம்புவான்?...." என்று அவள் நினைத்திருக்கலாம் என நினைத்துக்கொண்டான்.

மதியம் உணவு பரிமாறும்போது, "தவமக்காவிட்டை ரெண்டு கோழி வேண்டி விட்டிருக்கிறன்.... முட்டையிட்டா பிள்ளையளுக்குக் குடுக்கலாம் தானே........"

அது சரி..... என்று ஆமோதித்தான். "ஏன் என்னுடைய அனுமதியின்றி வாங்கினாய்" என்று கண்டிக்கும் ரகம் இல்லை அவன். 'எதையும் அவனிடம் கேட்டுத்தான் செய்யவேண்டும்' என்ற ரகமில்லை அவளும். அவர்களுக்குள் அப்படியொரு பரஸ்பரம் இருந்தது. எத்தனையோ துன்பங்களிலிருந்து அந்தப் பரஸ்பரம்தான் அவர்களை மீட்டிருக்கிறது.

ஆரம்பத்தில் அவனுடைய அலுவலகம் அவனுடைய வீட்டிலிருந்து நான்கு கிலோ மீற்றர் தூரத்தில்தான் இருந்தது. பிறகு, போராளிகளால் மீட்கப்பட்ட கிளிநொச்சி நகருக்கு மாறிவிட்டது.

அவனும் யாழ்ப்பாண இடப்பெயர்வில் இங்கு வந்தவன்தான். இப்போது அவனுடைய அக்கா குடும்பம், மூத்தண்ணர் குடும்பம் என்று எல்லோரும் ஊருக்குப் போய்விட்டார்கள்.

"நீங்கள் ஊருக்குப் போகேல்லையோ?...."

"இல்லை...."

"உங்களுக்கு வன்னி நல்லாப் பிடிச்சுது போலை....."

அவன் சிறிதாகப் புன்னகைப்பான், பதில் கூறாமல்.

ஊரில் ஒரே ஒரு காணிதான் அவர்களுக்கிருந்தது. பெரியக்கா குடும்பம் அதில்தான் இருக்கிறது. அவனுடைய நிலைப்பாடு, ஊரைவிட்டு ஒதுங்கிக்கொண்டான்.

இன்னும் சிறிது நேரத்தில் மின்பிறப்பாக்கியை நிறுத்திவிடுவார்கள். அவன் மெல்ல எழுந்து உணவருந்தும் கூடத்துக்குப் போனான்.

"வாரும் தம்பி........."

வாங்கைச் சிறிது பின்னால் தள்ளிச் சரிசெய்து அமர்ந்தான். ஐயா அவனுக்கு புட்டும் மீன் குழம்பும் கொண்டுவந்து சாப்பிட முற்பட்டபோது மனைவியின் கடித வரிகள் தொண்டையில் சிக்கின.

எந்தவித உணர்வையும் வெளிப்படுத்தாது விரைவாகச் சாப்பிட்டு முடித்தான். உணவுத்தட்டைக் கழுவி மேசையில் வைத்துவிட்டு விடுதிக்கு வந்தான்.

சிவனேசன் உடுப்புத் தோய்த்துக் கொடியில் விரித்துக்கொண்டிருந்தான்.

இருளில் வரும் அவனைப் பார்த்து, "ஆரது?....." என்றான்.

"அது நான்....."

"தேவண்ணையே?...."

"ஓமோ...."

"இருட்டிலை எங்கையண்ணை போட்டு வாறியள்?...."

"சாப்பிட்டுட்டு வாறன்....."

மூலையில் செருப்புக்களைக் கழற்றிவிட்டு உள்ளே போனான். விலைகூடிய, அழகான செருப்புகளுக்கருகில் தனது செருப்புகள் தலைகுனிந்து இருப்பதாகப்பட்டது. தன் நினைப்புக்காகச் சிரித்துக்கொண்டு போனான்.

உள்ளே ஜீவறஞ்சன் காலுக்கு மேலே கால் போட்டுக்கொண்டு புத்தகம் படித்துக்கொண்டிருந்தான்.


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அவனைக் கண்டதும் காலை எடுத்துவிட்டு,
"வாங்கோ அண்ணை" என்றான்.
பாயை உதறி மெதுவாக சுவர்க்கரையில் விரித்தான்.
அவன் தலைக்கு மேலே மூலையில் நுளம்புச் சுருள் புகைந்துகொண்டிருந்தது.
"அண்ணை நித்திரை கொள்ளப் போறியளோ? "
"ஓம்....."

கைகளைத் தலைக்குக் கீழே வைத்துக் கொண்டு கூரையைப் பார்த்தபடி படுத்திருந்தான். சிவநேசனும், ஜீவரஞ்சனும், அவனும்தான் இந்த அறையினுள் படுப்பார்கள்.

சிவநேசன் இப்போது சில மாதங்களுக்கு முன்னர்தான் பயிலுனராக வேலையிற் சேர்ந்திருக்கிறான் ஜீவறஞ்சன் மல்லாவிப் பிரதேசத்தில் வேலைசெய்து இப்போது இங்கு வந்திருக்கிறான். அவனுடைய தங்கையொருத்தி ஆனையிறவு முற்றுகைச் சமரில் வீரச்சாவடைந்து மாவீரரானதாக எப்போதோ சொல்லியிருக்கிறான். கவிதைகள் எழுதுவதிலும், படிப்பதிலும் நல்ல ஆர்வமுள்ளவன். அவன் எழுதிய சில கவிதைகள் பத்திரிகைகளிலும் வெளிவந்திருக்கின்றன.

"பதினெட்டாம் திகதியே மதியிட்டைக் கைச்செலவுக்கு காசில்லை என்றால் என்னெண்டு மிச்ச நாட்களை நகர்த்திறது?......" அவனுக்குள் பெருந்துன்பம் வருத்தியது.

அடுத்த சம்பளத்துக்கான நாட்களை விரல் விட்டு எண்ணிப்பார்த்தான். இன்னமும் பதினெட்டு நாட்கள் இருந்தன. இந்தப் பதினெட்டு நாட்களும் அவனைப் பொறுத்தவரை பாரமானவை.

சிவநேசன் ஈர உடம்பை துடைத்துக்கொண்டு உள்ளே வந்தான்.
"மச்சான் நாளைக்கு வீட்டை போற மாதிரி இருங்கோ?...."
"இல்லையடாப்பா .... வீட்டை போறதநினைக்க நடுங்குது........"
"என்ராப்பா"... அவனவன் வேலைநாளில கூட லீவு குடுத்திட்டு வீட்டை ஓடுறான்... நீ என்னெண்டா....."
ஜீவறஞ்சனுடையதும் சிவநேசனுடையதுமான உரையாடல் சுவாரசியமாக இருந்தது. அவன் காதுகளைக் கூர்மையாக்கினான்.

"நான் வேலையில் சேர்ந்த நாள் துவக்கம் அம்மா மனுசி எனக்குக் கலியாணம் பேசிக்கொண்டு திரியுதடா......"
"அது நியாயம் தானேயடா........."
"நியாயம் தானடா...... ஆனா..... வேலை நிரந்தரமான வேலையில்லை.... அதோடை நான் எடுக்கிற சம்பளத்தில்தான் அம்மா, தம்பி, தங்கச்சி ஆக்களையும் பாக்கவேணும்......."

"அப்ப என்ன செய்யப்போறாய்?..........."

"தம்பி படிச்சு ஒரு நிலைக்கு வரட்டும்.... தங்கச்சியும் A/L படிச்சு முடிச்சு கொம்பியூட்டர் படிக்கிறாள்..... அவளும் தன்ரை சொந்தக் காலிலை நிக்கட்டும்.........."
"அதுவரைக்கும் நீ வீட்டை போகாமலிருக்கப் போறியோ?.........."
"இல்லையெடப்பா.... அம்மா பேசிவைச்சிருக்கிற கலியாணத்தை தட்டிக் கழிக்க ஒரு காரணம் கிடைக்கும் வரை போமாட்டன்.........."
சிறிது நேரம் இருவரும் எதுவும் பேசவில்லை.
கண்கணை மூடிக்கொண்டிருந்த அவன் முழித்துப் பார்த்தான். மின்சாரம் நின்றுபோயிருந்தது.

# கருணைக்காய் ஒரு மனு

## கானா நாட்டுக் கவிதை



இந்த மண்ணின் மைந்தர்
நாம்
உன் ஆலயத்துக்கு
கும்பிட வந்திருக்கிறோம்
நிர்வாண மேய்ப்போன்
பசுக்களைப்
பத்திரமாய்க் கூட்டிவந்து
வீடு சேர்த்துவிட்டு
நெற்றியில் உருளும்
மழை நீரைத் துடைத்துவிட்டபடி
தன் மூங்கிற் புல்லாங்குழலுடன்
அமைதியாய் நிற்கிறான்.

பாடப்படாத ராகங்களுடன்
விடியலின் வரவை நோக்கி
பறவைகள் தம் கூடுகளில்
தூங்கி வழிகின்றன

கரைகளில் குவியும் நிழல்கள்
தங்கள் இதழ்களை
கடலின் மார்பகங்களில்
இறுகப் பதிக்கின்றன.

உழைப்பு முடிந்து
வீடுவந்த
உழவர் கூட்டம்
கணப்பருகே இருந்தபடி
பழங்கதை சொல்கின்றனர்

எங்கள் இயதங்களில்
பாடல் நிறைந்திருக்கையில்
துக்கத்தில் எங்கள்
இதழ்கள் நடுங்குகையில்
இந்த மண்ணின் மைந்தர்
நாம்
ஏன்
உன் ஆலயத்துக்கு முன்
கெஞ்சிக் கொடிருக்கவேண்டும்

மின்மினி தாரகைகளோடும்
கணப்பின் தீ சூரியனோடும்
சுரைக் குடுவை நீர்
வலிய வோல்ரா நதியோடும்
போட்டி போடுகையில்
தந்தைகளே சொந்தமான
ஏழ்மையோடு
பச்சை கேட்டு
நாம்
எசமானின் வீட்டுக் கதவருகே
வந்திருக்கிறோம்.

எழுதியவர்: குவேசி புறூ
நாடு: கானா
தமிழில்: வின்சென்ற் புளோறன்ஸ்


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



என்னுடைய மண்ணிலிருந்துதான்
நீ வந்திருக்க வேண்டும்.
உன் புருவங்களைச் சூழத்
துடித்துக் கொண்டிருக்கும்
உன் ஆன்மாவில்
அதனைக் காண்கிறேன்
அதையும்விட
துக்கமாயிருக்கும் வேளைகளில்
நீ நடனமாடுகிறாய்
என்னுடைய மண்ணிலிருந்து தான்
நீ வந்திருக்க வேண்டும்.

நடந்து கொண்டேயிரு
காலம்
எம்மை அணைக்கக்
காத்திருக்கிறது
உன்
விளக்கில் எரியும் எண்ணை
உண்மையில்
குமுறிக் கொண்டிருக்கும்
என் குருதிதான் என்பதையும்
அது பொங்கி வழிந்தால்
நீ
விளக்கை ஏற்றக் கூடாது
என்பதையும்
இதிலிருந்து தெரிந்து கொள்.
எம் புராதன வழிபாட்டுக்கென
இருண்ட மூலையொன்று
எமக்கு வேண்டும்.

ஒரே தொப்புள் கொடியிருந்துதான்
எல்லோருமே வந்தோம்
கோலம் கெட்ட எம் தலைகளை
எங்கே பெற்றோம் என்பது
யாருக்குத் தெரியும்?

அயடின் வீச்சம் கொண்ட
இந்த மௌனங்கள்
அனேகமான வேளைகளிலே
துன்மார்க்கமான முடிவுகளால்
எம்மைப் பாழ்படுத்துகின்றன.
ஏனென்றால்
தாடி இல்லாத
என் மனச் சாட்சியோ
எங்களை மட்டுமே
பாழ்படுத்துகிறது.

# நடந்து கொண்டேயிருந்தது

## கொங்கோ நாட்டுக் கவிதை

எழுதியவர்: ச்சாயா யூ ராம்ஸி
நாடு: கொங்கோ
தமிழில்: வின்சென்ற் புளோறன்ஸ்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



நாதன் இந்தியாவுக்கு வந்து பத்து வருசமாச்சு. வரும்போது மூத்த மகளுக்கு எட்டு வயசு. அதுகளுக்கு இலங்கைத் தமிழ் அறவே தெரியாது. தொண்ணூறுக்கு முந்தி நாதனும் பெரிய சம்மாட்டியாத்தான் இருந்தான். அவனுடைய மூன்று சகோதரர்களும் மச்சானும்சேர்ந்து ஒன்றாகத் தொழில் செய்தார்கள்.

நாதன்தான் எல்லாவற்றிற்கும்பொறுப்பு. சகோதரர்கள் அவனில நல்ல நேசம். கடலுக்குப் போவது அவன்தான். கரையில 'ஐஸ்வாடி' வேலைகள் செய்து கொழும்புக்கு மீன் அனுப்புவதும் அவன்தான். ஐந்து வள்ளங்கள், 'ஐஸ்வாடி' என்று ஓரளவு வசதியாயிருந்தவன். ஒவ்வொருவராய் கல்யாணம் முடித்து பிரிந்து போனாலும் தொழிலை அவன் பிரிக்கவில்லை. கடலுக்கு நாதன் பயந்தவனில்லை. எந்தக் காற்றுக்கடலுக்கும் தொழிலுக்குப் போவான். கடலடி வந்தால் வள்ளம் கரைக்குவிட நீந்திப்போய் வள்ளம் விடுவான். எதற்கும் பயப்படாதவன். ஆனால் 'ஆமி' க்கு மட்டும் சரியான பயம்.

# ஒரு அகதியின் நாள்

## முல்லை யேசுதாசன்

எப்படியாவது இவர்களிடமிருந்து தப்பிப்போயே ஆகவேண்டும்.

இல்லாவிட்டால் வேலூரோ, ஒரிசாவோ, சேலத்திலையாவது அடைபட்டுக் கிடக்கவேண்டி வரும். இந்த ஜென்மத்தில் விடுதலை என்பது கடைசி வரைக்கும் கிடைக்காது.

நாதன் சட்டைப்பையில் எவ்வளவு காசு இருக்கும் என்று யோசித்துப் பார்த்தான். ஒரு இரண்டாயிரத்துக்கு கொஞ்சம் குறைவாக இருக்கலாம். இவங்களுக்கு லஞ்சம் கொடுத்து தப்பிப் போறதென்றால் அதுபோதாது. ஆகக்குறைந்தது ஐயாயிரம் ரூபாவாவது வேணும். பெண்சாதி பிள்ளைகள் ஒருமுறை மனதுக்குள் வந்து போனார்கள். தப்ப வேணும் தப்ப வேணும் எப்படியாவது தப்பவேணும். மண்டையைப் போட்டு உடைத்து ஒரு முடிவுக்கு வந்தான்.

"சார் ஒண்ணுக்குப் போகணும் சார்"
"திருட்டுத்தனம் பண்ணும்போது யோசிக்கிறதில்லை அப்புறம் என்னடா பயத்திலை ஒண்ணுக்கு வருதா? தே இவனை ஒண்ணுக்குக் கூட்டிப்போ"

தனக்குக் கீழ் பணிசெய்யும் பணியாளுக்கு உத்தரவிட்டான். அந்த 'கஸ்டம்ஸ்' அதிகாரி. இன்னும் நாதனை காவல்துறையிடம் கையளிக்கவில்லை. அதற்கு முன்னர் நாதன் தப்பியே ஆகவேணும். ராமேசுவரத்தில் இருக்கும் அந்தப் பெரிய 'கஸ்டம்ஸ் குடோனுக்கு' நான்கு ஐந்து தடவைகள் நாதன் போய்வந்தவன். ராமேஸ்வரம் ஏரியா முழுவதும் அவனுக்கு நல்ல பழக்கம். அவனைப் பார்க்கும் எந்த இந்தியனும் அவனை ஒரு இலங்கைக்காரன் என்று சொல்லமுடியாது. பெரியார் மாவட்ட பாணி உடை, கேரளமும் கர்நாடகமும் கலந்திருக்கும் கோயம்புத்தூர் பேச்சு. வேட்டியைத் தூக்கி மடிச்சுக்கட்டி, வெளியில தெரியும் அண்டர்வெயர், எந்தப் பொது இடத்திலும் பெண்களின் முன்னாலும் நாகரீகமின்றி வேட்டியைத் தூக்கி அண்டர்வெயரில் காசுக்கு கைவிடும் பழக்கம். எங்கோ ஒரு கோயம்புத்தூர் பக்கத்துக் கிராமத்தான் மாதிரித் தோற்றம். என்றாலும் அவன் அவர்களிடம் மாட்டி விட்டிருந்தான்.

"ஏம்பா அந்தச் சுவத்துப்பக்கம் ஒண்ணுக்கடிச்சிட்டு சீக்கரம் வாப்பா" வெருட்டினான் அந்தக் 'கஸ்டம்ஸ்' பணியாளர். நாதன் அவனைத் திரும்பிப் பார்த்தான். நின்று நிதானமாய் வேட்டியைத்தூக்கி அண்டர்வெயரில் கைவிட்டு 'பர்சை' எடுத்து அதனுள் இருந்த காசை எடுத்தான். அவனிடம் நீட்டினான்.

"எதுக்கப்பா" என்றான் அந்தக் கஸ்டம்ஸ் பணியாள்.

"நான் ஓடப்போறன் சார் நீங்கள் பாக்காம இருக்க" துணிவாய்ச் சொன்னான் நாதன்.

"ஏய்யா, என்னை நீ லஞ்சம் வாங்கச் சொல்றியா?" கோபமாய்க் கேட்டான் பணியாளன்.

அவர்கள் அவனைப் பிடிச்சு வைச்சு இன்னும் கால்துறையிடம் பாரங் கொடுக்காமல் வைத்திருப்பதற்குக் காரணமே இதற்குத்தான் என்பது நாதனுக்குத் தெரியும்.

"சார் நான் என்ன கொலையா பண்ணிப்புட்டன், எங்கிட்ட பணமிருந்தா பிளைட்டிலையே போயிருப்பேன் சார், இந்தாசார் என்கிட்ட ஆயிரம் ரூபாதான் இருக்கு வச்சுக்கோ சார்" நாதன் காசை நீட்டினான்.

நாதனிடம் வேறு காசு இல்லை என்பதை பணியாளர் நம்பினார். அந்த ஆயிரமாவது வரட்டும் என்று, கையை நீட்டினான்.


www.tamileelamarchive.com

நாதனுக்கு தான் தப்பிவிட்டேன் என்ற சந்தோசம். இருந்தாலும் ஆயிரம் ரூபா அநியாயமாக போகுதே என்ற கவலை.

"சார் ஒரு ஐம்பது பைசா கொடுங்க ரீ சாப்பிட கூட காசில்லை"

பணியாள் அவனுக்கு ஒரு ரூபா கொடுத்துவிட்டு "சீக்கிரம் வாய்யா" என்று வந்தவழியே போய்விட்டான்.

நாதனுக்கு தெரியும் இனி அவனைத்தேடி அந்தப் பணியாள் வரமாட்டார் என்று.

இராமேஸ்வரத்தில் இரவு ரயிலேறி விடியற்காலையில் கோயம்புத்தூரில் சந்தியமங்கலம் போவதற்கான ஜீவா பஸ்சில் இருந்தான் நாதன்.

"ஏம்பா, சந்தியமங்கலமா?"

"ஆமா" என்றபடியே எழுந்துநின்று 'அண்டர்வெயரில்' கைவிட்டு காசெடுத்துக் கொடுத்தான். இவனைப் பார்த்தவுடனேயே உண்மையில மேட்டுப்பாளையமோ, பவானிசாகரோ, ஏதோ ஒரு கிராமத்தவனைப் போலிருந்தான் நாதன்.

ஊட்டியின் மலையடிவாரத்தில் மேட்டுப்பாளையம் முகாமில்தான் முதலில் நாதன் இருந்தான். ஒவ்வொரு அரசியற் பிரச்சினைக்கும் அங்காங்கு அகதிமுகாம்களை மாற்றுவார்கள். தொண்ணூறில் அவன் இந்தியாவுக்குப் போகும்போது தமிழக ஆட்சியில் கருணாநிதி. அதுக்குப் பிறகு ஜெயலலிதா வந்ததோடதான் கஸ்ரங்களே ஆரம்பித்தது. சின்ன எசகு பிசகென்றாலும் வேலூர் அல்லது சேலம் தம்பம்பட்டி போனா வெளியே வாறது இயலவே இயலாது. அடிக்கடி 'செக்கிங்' என்று அகதி முகாம்கள் அல்லல்படும். வாற 'பொலிஸ்'காரனுக்கு எவர் என்றாலும் பத்துப் பேரை பிடிச்சுக்கொண்டு போனாச்சரி நாதனும் கொஞ்சக்காலம் கோயம்புத்தூர் சின்ன 'ஜெயில்'ல இருந்தவன். லஞ்சம் லஞ்சமாக் கொடுத்துத்தான் வெளியில வந்தவன். அவன் கொண்டு போனகாசில் அரைவாசிக்கு மேல் தமிழ்நாட்டுப் 'பொலிசு' க்கு லஞ்சம் கொடுத்திருப்பான். இப்ப கொஞ்சக் காலம் பவானிசாகர் முகாமுக்கு மாற்றப்பட்ட பிறகுதான் நிம்மதியா போகிறவன்.

நாதன் இந்தியாவுக்கு வந்து பத்து வருசமாச்சு. வரும்போது மூத்த மகளுக்கு எட்டு வயசு. அதுகளுக்கு இலங்கைத் தமிழ் அறவே தெரியாது. தொண்ணூறுக்கு முந்தி நாதனும் பெரிய சம்மாட்டியாத்தான் இருந்தான். அவனுடைய மூன்று சகோதரர்களும் மச்சானும்சேர்ந்து ஒன்றாகத் தொழில் செய்தார்கள்.

நாதன்தான் எல்லாவற்றிற்கும்பொறுப்பு. சகோதரர்கள் அவனில நல்ல நேசம். கடலுக்குப் போவது அவன்தான். கரையில 'ஐஸ்வாடி' வேலைகள் செய்து கொழும்புக்கு மீன் அனுப்புவதும் அவன்தான். ஐந்து வள்ளங்கள், 'ஐஸ்வாடி' என்று ஓரளவு வசதியாயிருந்தவன். ஒவ்வொருவராய் கல்யாணம் முடித்து பிரிந்து போனாலும் தொழிலை அவன் பிரிக்கவில்லை. கடலுக்கு நாதன் பயந்தவனில்லை. எந்தக் காற்றுக்கடலுக்கும் தொழிலுக்குப் போவான். கடலடி வந்தால் வள்ளம் கரைக்குவிட நீந்திப்போய் வள்ளம் விடுவான். எதற்கும் பயப்படாதவன். ஆனால் 'ஆமி' க்கு மட்டும் சரியான பயம். இந்தியன் 'ஆமி'ப்பிரச்சினை வந்தபோது இவனோடு கடலுக்குப்போனவன் 'ஹெலி'யடிச்சு செத்துப் போன போது நன்றாகப் பயந்து விட்டான்.

அதுக்குப் பிறகு ஹெலிச்சத்தம் கேட்டாலே ஓரிடத்தில் நிற்கான். ஒடித்திரிவான். எத்தனை தரம் 'ஆமி' யிடமும், 'நேவி' யிடமும் அடிவாங்கிப்போட்டான். அதுதான் அவனை இந்தியாவுக்குப் போக வைத்தது. தம்பி மாரும் தங்கச்சியும் தாங்கள் இந்தியாவுக்கு வரமாட்டோம் என்று சொல்ல தொழிலைப் பிரிச்சு தன்னுடைய பங்கையும் அதுகளுக்கே விற்றுப் போட்டு 'என்ர பிள்ளைகளை காப்பாத்தோணும்' என்றுதான் இந்தியாவுக்குப் போனான்.

இருந்த காசெல்லாம் இந்தியாவில் கரைச்சு, பிள்ளைகள் வளர வளர செலவு



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கூடி சித்தாள் வேலைக்குப் போய், 'லாரி' க்கு மண்ணடிச்சு, செய்யாத வேலையெல்லாம் செய்து ஜெயில்ல மாசக் கணக்காக கிடந்து, லொறியில் அடிபட்டு கொஞ்சக் காலம் இயலாமல் கிடந்து, இருந்த நகையெல்லாம் அழிச்சு அப்பவும் கடனில் இருந்து மீள முடியவில்லை. ஒரு பெட்டிக் கடையும் இரண்டு சங்கிலியும் தான் மிச்சம். அதை வச்சுத்தான் கடன்காரர் எல்லாரையும் சமாளித்தான். இன்னும் கொஞ்சநாள் போக அதுவும் இல்லாமல்.

அந்த நேரம்தான் இலங்கைக்குப் போகிற முடிவை மனுசிக்கு சொன்னான். அவளுக்கு விருப்பமில்லை, அதைவிட கடன்காரர்.

"எங்க நீங்க புறப்பட்டு போறது சரி. கடன்காரங்க உங்களை வுட்டுருவாங்களா?" மனுசி கேட்டாள்.

அதான் உன்னையும் உம்புள்ளங்களையும் விட்டுட்டு நான் தனிய போயிரன் நாதனுக்கு அதைச் சொல்ல மனமில்லாமல் சொன்னான்.

"ஏங்க இங்க எங்களை கூட்டிட்டு வந்தீங்க?"

"வந்தது பிழை தாண்டி"

"உழைச்சுப் பணம் அனுப்புறன் கடனைக் கொடுத்திட்டு புள்ளங்களை கூட்டிட்டுவா"

"பிழை செய்து போட்டீங்கள் நீங்கள்"

"ஆமாடி பிழைதாண்டி செஞ்சுபோட்டன். இங்க பயமில்லாம இருக்கலா மண்ணுதாண்டி இங்க வந்தன். பயமே இங்கதாண்டி இருக்கு. இங்க உழைச்சு சாப்பிடலாமென்று வந்தோம். அதுவும் முடியல நம்ம நாட்டுக்கு எப்படிப் போகப்போறோம். இங்கேயே கிடந்து ஒவ்வொருநாளும் ஏங்கி, ஏங்கி பயந்து பட்டினியாகக் கிடந்து 'லாஸ்டில' செத்து போயிடுவமடி. "அழுதான் நாதன். அவளும் சேர்ந்து அழுதாள்"

"நீங்க எப்பங்க போகப்போறீங்க"

"ராமேஸ்வரம் போனா ரோலர் வள்ளங்கள் தொழிலுக்குப் போகும். அதில போயிரலாம். ஆனா நிறைய பணம் வேணுமடி. ரோலர் வள்ளங்கள் இலங்கை கரைதெரிய வுட்டுடா நான் நீந்தியே போயிருவன்"

"அப்படிப் போகும்போது இலங்கை நேவி வந்திட்டால்"

"எப்படி பண்றது இங்க யாரு எங்கள மதிக்கிறான். எச்சல நாய்களே! "கம்மனாட்டி, கேக்கதி" என்று எதுக்கெடுத்தாலும் திட்டுறான் ஏச்சு வாங்கிக்கொண்டே கிடக்கச்சொல்றியா? போனாப் போவுது உசிரு. நான் போய்ச் சேந்திட்டா எங்கட பிள்ளைகளை காப்பாத்திடலாமில்லே."

"நீங்கள் போகத்தான் போறிங்களா?"

"ஆமா"

கடையில் சேர்ந்த காசையும்... மீண்டும் கொஞ்சம் கடன்வாங்கிக் கொண்டும் ஒரு ஐயாயிரம் சேர்த்துக்கொண்டு மண்டபத்திற்கு வந்து ஒரு சினேகிதனோட ராமேஸ்வரம் வந்து, 'ரோலரு'க்குப் போகிற வள்ளக்காரரை விசாரித்து, ஒருதரும் அவனை ஏற்றிக்கொண்டு போக மறுத்துவிட்டார்கள். பெரிய கஸ்ரப்பட்டு கெஞ்சி மன்றாடித்தான் ஒரு 'ரோலர்'காரன் இலங்கைக்கரை தெரியக் கொண்டுபோய் விடுறதுக்கு ஒத்துக்கொண்டான்.

மூவாயிரம் ரூபா காசு வாங்கி விடியற்காலையிலே அவனை வள்ளத்தில் ஏற்றி மறைத்து வைக்க யாரோ கஸ்ரம்ஸ்காரருக்குச் சொல்லிவிட்டார்கள் 'கஸ்டம்ஸ்' காரன்- வந்துவிட்டான். காசை கொடுத்து சமாளிக்கவும் காசு இல்லை. வள்ளக்காரனிடம் கொடுத்த மூவாயிரத்தையும் பறித்துவிட்டு அவனை விட்டுவிட்டான். 'கஸ்ரம்ஸ்' காரன். நாதனுக்குத் தெரியும் விசாரணை, விளக்கம் என்று தன்னைக் கொண்டு போகமாட்டான் என்று, அப்படிக் கொண்டுபோனால் வள்ளக்காரனிடம் வாங்கிய காசுப்பிரச்சினையும் வெளிவரும். தனக்கு வரும் காசை 'கஸ்டம்ஸ்'காரன் இழக்க விரும்பமாட்டான். தன்னிடமும் ஏதாவது லஞ்சம் வாங்கலாம் என்று எதிர்பார்ப்பான் என்று அவர்கள் தனியே நின்று மெதுவாய் பேசும்போதே புரிந்துவிட்டது நாதனுக்கு. 'கஸ்டம்ஸ்' கட்டிடத்துக்குக் கொண்டு போக முன்னமே தப்பிவிடவேணும். 'கஸ்டம்ஸ்' காரனிடம் சென்றான்.

"சார் ஒண்ணுக்குப் போகணும்" தப்பிவிட்டான்.

மேட்டுப்பாளையமோ, பவானிசாகரோ போகக்கூடாது. முகாமில் சொல்லமல் புறப்பட்டா கட்டாயம் தேடியிருப்பார்கள். அவர்களிடம் பிடிபட்டால் விசாரணை, விளக்கம் ஏச்சு பேச்சென்று... கடைசியில் இந்தப் பயணம் நின்றுபோய்விடும்.

சத்தியமங்கலத்திலிருந்து பதினைந்து கிலோமீற்றர் தூரமுள்ள பவானிசாகருக்கு நடந்தே போனான். ஒருமுறை கோயம்புத்தூர் 'ஜெயில்ல' அடைச்சு வச்சிருந்து ஓடிவந்த கோணேஸ்வரன். அவனின் சினேகிதப் பொடியன் எல்லாரையும் சீ.ஐ.டி எப்படிப் பிடிச்சவன் என்று தெரியும்.

இடையில் கொட்டம்பாளையத்தில் ஒரு இந்தியாக்காரப் பெடியனின்வீட்டில் நின்று கொண்டு மனைவியிடம் ஆளனுப்பினான். "எப்பிடியாவது சங்கிலியை வித்தாவது ஒரு ஐயாயிரம் அனுப்பு. அனுப்பினால் போகிறேன். இல்லாவிட்டால் திரும்பி வருகிறேன்" என்று, அவள் காசு அனுப்பினாள்.




இந்தமுறை நாதன் கவனமாயிருந்தான் 'ஆரையும் இனி நம்பிறதில்லை' என்று முடிவெடுத்தான். இரவிரவாக இராமேஸ்வரம் வந்தான். இரண்டு எண்ணைக் 'கான்' கள் வாங்கினான். இடைவிட்டு சிறுகயிற்றில் இரண்டையும் கட்டினான். இரண்டு 'பன்', ஒரு தீப்பெட்டி ஒரு சிறுகத்தி, வாங்கிக்கொண்டு இராமேஸ்வரம் கடற்கரைக்கு வந்தான். விடிவெள்ளி வரும்வரை இருட்டில் சிறிது நேரம் தூங்கினான்.

விடியும் நேரம் கொணர்ந்த பொருட்களை தலையில் தலைப்பாகையில் கட்டினான். கடலில் இறங்கி நீந்தத்


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



தொடங்கினான். அவனுக்கு இதைவிட வேறு வழி தெரியவில்லை. திரும்பவும் அகப்பட்டு பெண்சாதி பிள்ளைகளின் முகம் பார்க்கமுடியாமல் அடைபடுவதைவிட இப்படியே நீந்திப் போய்விடலாம். தன்னை இரையாக்கப்போகும் கடற்சுறாக்களையும் உடம்பையும் அரித்துச் சீரழிக்கப்போகும் கடற்சொறியையும், குளிர், பசி எல்லாவற்றையும் மறந்துவிட்டான். என்ன ஒரு பதினெட்டு மைல் தூரத்தில் ஊர். அல்லது சாவு. இரண்டில் ஒன்று. இந்தியாவிலே கிடந்து பிள்ளைகளையும் நல்ல முறையில் வளர்க்க முடியாமல், சீரழிந்து நொந்து நோய்வாய்ப்பட்டு சாவதைவிட கடலிலே காணாமல் போவது மேல். கரையை போயிட்டா.... என்ர சகோதரங்கள் அள்ளித்தந்த கடல்............ ஒருவருசம் மெத்த, என்ர பெண்சாதி பிள்ளையளை எடுத்திடுவன்.

சாதாரணமாக விடியற்காலையில் தொழிலுக்கு வரும் ரோலர்களை எதிர்பார்த்து நீந்திக்கொண்டிருந்தான் நாதன்.

விடிந்து சூரியன் சற்று மேலே வந்துவிட்டான். குளிர் குறைந்து விட்டது. தூரத்தில் இராமேஸ்வரம் கரையிலிருந்து ரோலர்கள் தொழிலுக்கு வரத் தொடங்கிவிட்டன. நாதன் இடுப்பில் கட்டியிருந்த மிதப்புக்கானோடு நீந்திக்கொண்டிருந்தான். கானுக்குக் கட்டியிருந்த கயிறு உடம்பைத் தேய்க்க உடம்பு எரியத் தொடங்கி விட்டது. அருகே வந்த ஒரு ரோலர்காரனுக்கு கைகாட்டினான். கிட்ட வந்த ரோலர்காரன் ஆச்சரியப்பட்டான். ஏன்யா என்னைக் கொண்டுபோய் இலங்கைக் கரைக்குப் பக்கமாய் விடுவியா? பணம் கொடுக்கிறேன்.

ரோலர்காரன் கொஞ்சநேரம் நியுட்டனில் நின்று நாதனையே பார்த்துக் கொண்டு நின்றான். அவனை இலங்கைக்காரன் என்று அடையாளம் கண்டுகொண்டான்.

"உங்க ஊருக்கு நீந்திப்போக முடியுமாப்பா உன்னால" ஆச்சரியமாகக் கேட்டான் அவன்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

"அதெல்லாம் வேணாப்பா உன்னால முடியுமோ முடியாதாய்யா" பேச்சைவெட்டினான் நாதன். ரோலர்காரன் ஏத்தவே மறுத்துவிட்டான்.

"நாம்புள்ளகுட்டிகாரன்யா, ஜெயிலெல்லாம் என்னால பாக்க முடியாதய்யா" எட்டிக் காலால் கியரைத் தள்ளினான் ரோலர்காரன் வள்ளம் ஓடத்தொடங்கியது. அடுத்த ரோலருக்காக நாதன் காத்திருக்க அதுவும் வந்தது. வந்தவனும் அவனை ஏற்ற மறுத்து போய்விட்டான். பின்னால் வந்தவன் ஏறச்சொன்னான். தம்பிக்காரன் ஏற்றவேண்டாம் என்று சொல்லியும் அவன் ஏற்றினான் நாதனை.

"உன்னைக் கொண்டுபோய் விட்டா எவ்வளவு பணம்பா கொடுப்பே" என்றான். "ஒரு மூவாயிரம் தர்றேன்" என்றான் நாதன்.

ரோலர் முதல்பாடு மடிவைக்க முன்னமே ரோலர்காரனும் நாதனும் சிநேகிதமாகிவிட்டனர்.

"ஏன்பா இப்படி நீந்தியே போக நினைச்சே. ரொம்பக் கஸ்ரமா" இடையிலே உனக்கேதும் ஆயுடுச்சென்றா என்ன செய்வே. எத்தனை புள்ளைகள்."

கேள்விமேல் கேள்வி கேட்டான் ரோலர்காரன். எல்லாவற்றிற்கும் பதில் சொன்னான் நாதன். ரோலர்காரனுக்கு அவனைப் பார்க்கப் பாவமாப்பட்டது. தனது நாட்டையும் நினைத்துத் துக்கப்பட்டான். முதல்பாடு மடியிழுக்க நாதனும் உதவிசெய்தான். முதல்பாடே பரவாயில்லை. அடுத்தபாடு வலைவைச்சு எழுப்ப மதியமாச்சு, பட்ட மீனில் பெரிய குவாப்பாரையாய் தெரிந்தெடுத்து சைலஞ்சரில் சுட்டு சோறும் கொடுத்தார்கள். நாதனும் சாப்பிட்டான். கொஞ்சநேரம் கழித்து நாதன் இறங்கி நீந்திப்போகக் கேட்டான். ரோலர்க்காரன் விடவில்லை.

"கொஞ்ச பொறுத்துக்கோ நாதண்ணை, நெடுந்தீவுப் பக்கம் உன்னால நீந்த முடியாது, நீர் அதிகம்"

மூன்றாம் பாடு தலைமன்னார் கரைபார்த்து மடியிறக்கி, பின்னேரம் தலைமன்னார் கரை தெரிய நாதனை இறக்கிவிட்டான். அவனுக்கும் கவலையாய் போச்சு. நாதனிடம் இருந்த சிறிய கான்களை வாங்கிக் கொண்டு இருப்பது லீற்றர் டீசல் கான் ஒன்றைக் கொடுத்தான். இது நாதனுக்கு வசதியாய்ப்போனது. காற்றோடும் நீரோடும் பேசாலையை நோக்கி நீந்தத் தொடங்கினான். இந்திய ரோலரும் கண்ணுக்கு மறைந்துகொண்டிருந்தது.

இருளிலே தலைமன்னார் பியர் வெளிச்சம் தாண்டி பேசாலைப் பக்கமாய் நீந்திக்கொண்டிருந்தான். அவனுடைய நல்லகாலம். சொறிக்கூட்டம் தண்ணீரில் தட்டுப்படவில்லை. சுறாவோ பெருமீனோ தட்டுப்படவில்லை. பேசாலைப் பக்கமிருந்து ரோந்து நேவிக்கப்பல்கள் தலைமன்னார் பக்கம் போய்க்கொண்டிருந்தன. நடுச்சாமமளவில் கரைபிடித்தான். கடற்கரையில் இருந்து சிறிது தூரத்தில் காட்டுப் பற்றைகளாயிருந்தன. "கடவுளே ஆமிக்காரனின் கண்ணில் தட்டுப்படவே கூடாது" கடவுளை ஒருமுறை வேண்டிக்கொண்டான். கொஞ்சநேரம் மணலில் படுத்து ஓய்வெடுத்தான். கொண்டுவந்த பன்னைச் சாப்பிட்டான். திரும்பவும் கடற்கரை மணலிலே பேசாலை நோக்கி நடக்கத் தொடங்கினான். விடிகிற நேரம் மீண்டும் கடலில் இறங்கினான். இன்னும் கொஞ்சத் தூரம் ஒரு பத்து மைல் இருக்கலாம் இந்தியக் கடற்கரையிலிருந்து இறங்கிய உற்சாகம். இன்னும் ஆபத்துக்களிலும் பிடிபாடுகளுக்குள்ளிருந்தும் வெளியேறவில்லை என்பது அவனுக்குத் தெரியும். என்னுடைய நாடுதான். எதிரியின் ஆக்கிரமிப்பில் அகப்பட்டு கிடக்கிற ஊர். கரையைவிடக் கடல் எவ்வளவு பாதுகாப்பு நீச்சல் அவனுக்கு தரையில் நடப்பது போல, நீந்தினான்.

விடிகிற நேரம் தண்ணீரோடு அது என்ன தொழில் செய்கிற படகா? இல்லை ரோந்துப்படகா? இல்லை புலிகளால் மூழ்கடிக்கப்பட்ட இலங்கையின் ரோந்துப்படகா? கிட்டவர அது நன்கு புலப்பட்டது. அது தண்ணீரில் தாண்டுபோய் கிடக்கும் ஒரு நேவிப்படகு. கொஞ்சநேரம் காலாற, கையாற, ஆசுவாசப்படுத்த ஒரு அருமையான இடம். பக்கத்தில் போய் அதில் தாவி ஏறினான். நன்றாக விடியம் வரை அதில் தண்ணீர் படாத மேல் தட்டில் படுத்துறங்கினான்.

விடியும் நேரம் படகொன்றின் இயந்திரச் சத்தம் அவனை எழுப்பி விட்டது. ஒளிந்திருந்து உன்னிப்பாய் பார்த்தான். அது தொழிலுக்குச் செல்லும் ஒரு வைபர்க்கிளாஸ் படகு. வெளியில் வந்து கையசைத்துக் கூப்பிட்டான். அவர்களும் அருகில் வந்தார்கள். தன்னுடைய கதை முழுவதையும் அவர்களுக்குச் சொன்னான். பரிதாபப்பட்டார்கள் அவர்கள்.

"அண்ணா நீங்கள் கரைக்குப் போகமுடியாது. ஆமிபிடிப்பான் ஆனா நாங்கள் இரணைதீவுக்கு கொஞ்சம் கிழக்காலதான் தொழிலுக்குப் போறம். புலிகளின் பக்கதிற்கு நாங்கள் போகமுடியாது. நீங்கள் விரும்பினால் இடையில் கொண்டு போய்விடுகிறம்"

ஒத்துக்கொண்டான் நாதன்.

"அண்ணா இடையில் நேவி வந்தால் தண்ணியில இறக்கிவிட்டிடுவம்" அதற்கும் ஒத்துக்கொண்டான் நாதன்.

அவனை அவர்கள் இடையில் இறக்கவில்லை. தொழில் செய்யும்வரை அவனையும் வைத்திருந்தார்கள். மதியமளவில் வலையிழுத்து வலைப்பாட்டை மதியம் வைத்து ஓடினார்கள். நாதனுக்கும் நல்ல காலம். கரை மண்ணீரில் ஆடும் தூரத்தில் நன்றிசொல்லி இறங்கினான். இன்னும் கொஞ்சதூரம் தன்னுடைய தேசத்துகென்று வேகமெடுத்தான்.

இவ்வளவு தூரம் நீந்திவந்து இந்தக் கொஞ்த் தூரத்தைக் கடக்க முடியாமல் போய்விடுவேனோ என்று கலங்கத் தொடங்கிவிட்டான். ஏனென்றால் கடல்முழுவதும் காக்கா சொறியோ? அல்லது நெருப்புச் சொறியோ? எதுவென்று தெரியவில்லை. எட்டி நீந்தும்போது முகத்தில் அடிக்கும் தண்ணீரோடு அதுவும் சேர்ந்து பட்டு கடிக்கத் தொடங்கி முகம் முழுவதும் நெருப்பாய்க் காந்தத் தொடங்கிவிட்டது. இது எவ்வளவு தூரக் கடல்வரை இருக்குமோ நனைந்தும் காய்ந்தும் உப்பேறிப்போன முகத்தில் நெருப்பு வெப்பம். வையைத் தூக்கி முகத்தை வழித்துவிட்டான்.

இன்னமும் எரியும், பகையாளிகளுக்குப் பயந்து பயந்து கடலில் பயணித்து அவனுக்குக் கிட்டக்கூட நேவியொன்றும் வரவில்லை. அதிஸ்டம் என்று நினைத்திருந்தவன். இப்போ இயற்கையால் இறப்பு அவனுக்கு அருகில் வந்து கொண்டிருந்தது. நன்றாக முழுமையாக கரை கண்ணுக்குத் தெரியும் தூரத்தில சாவும் கண்ணுக்குள் வருகிறது. நான் சாவதை விட இந்தியாவின் அரசியல் அடக்குமுறைக்கும், லஞ்சம், ஊழல், அடிமை வாழ்வு அதோடு இலங்கை அரசின் இன அழிப்புக்குள்ளும் அடங்கிப்போய் தோற்றிடுவேனோ என்ற பயம் தான் இன்னும் அதிகமாயிருந்தது அவனிடம். கொஞ்சத் தூரம் நீந்தியதும் தெரிந்தது அது நாவறகாய்ச்சொறி என்பது. அது கூட்டம் கூட்டமாய் வந்து அவனை நீந்தவிடாமல் இடித்துப்போனது. இப்பொழுதுதான் கடவுளை நினைக்கும் மனிதஇயல்பு அவனுக்கும் இருந்தது. மனைவி, பிள்ளைகள் கண்ணுக்குள் வந்து போனார்கள். தோற்றுவிட்டேன் என்றிருக்க அவனுக்கு முன்னால், அதை எப்படிக் காணாமல் போனேன். வலைப்பாட்டுக் கடலில் களங்கட்டி பாயவரும் ஒரு பாய்வள்ளம் தன் பெலம் முழுவதையும் சேர்த்துக் கத்தினான். அவர்கள் அதற்கு முன்னரே அவனைக் கண்டுவிட்டார்கள் போல, வள்ளம் அவனை நோக்கியே வந்து கொண்டிருந்தது.


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# நான் சொல்வது சரியா

த. டே. கிஸ்காட்

போர் ஓசையால் எம்
வானிலிருந்த தேவரும்
வாழ்விடத்திற்கு பிரியாவிடை
நிகழ்த்திய பின்
குருதியால் முலாமிடப்பட்டு
மண்ணில் ஏறிய சமாதானமே!
வருக.
உன் வரவிற்கான பிரார்த்தனையால்
வான்வெளி நிறைந்தது
வருக.
வரத்திற்காக அல்ல
வாழ்விற்காக உன்
வரவு பாதையை பார்த்து
காத்து கிடந்த
தவசிகள் நாங்கள்!

வருக
செந்நீரால்
துகள் அடக்கப்பட்ட
தேசத்தில் தேர் ஏறும்.

வெள்ளைக் கொடிகளின்
வருகையால்
கறுத்த கொடிகளால்
அலங்கரிக்கப்பட்ட தேசத்தின்
கடந்த காலத்தின்
சோக திரை சேரியை திறக்குக.
பொக்கிசங்கள் மீது
புழுக்கள் ஏறியிருந்து
புதுராகம் மீட்டுவதை
ரசிக்க முடியாத
புதுக் கவிதைகளின்
இதயக் கடலில் மூழ்க!
சமாதானமே
கனவில் வருவதைக் கூட
காண விரும்பாதவர் முன்
நீ நேரில் வந்தபோது
உன்னை
காட்சி பொம்மையாகத்தான்
காண முடிந்தது.
அன்று நாங்கள்
கைக்குலக்கிய பின் தான்
காலவோட்டத்தில்
காலூன்றி சமாதான
செங்கோலனாய்!


ஒன்று பட்டதால்
துண்டு பட்டுப் போன
தமிழர் வாழ்வின் தொடர்கதைகள்
தூக்கத்தில் விழித்துக் கொள்ளும்
மாத்திரை

அதனால்தான்
பகலின் எண்ணத்தில்
பார்வையை செலுத்துகின்ற
போதும்
இருளின் தாலாட்டில்
இதயம்
கனத்தழும் காவியமாய்
இன்றும்
விதைகளால்தான் அல்ல
வானத்தில்
அவன் கொற்றக் குடைக்கு
வீசி தெரிகின்றது
மூன்றாம் தரப்பு
புயலுக்கு முன்
மூட்டை அவிழ்க்கப்பட்டதால்
நம்பிக்கை நறுமணம்
எம்மில் எழுகிறது.


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# ஆபிரிக்கக் கவிதைகளை புரிந்துகொள்வதற்கான ஒரு அறிமுகம்



> **"கறுப்பின உணர்வு என்பது முதன்முதலில் 'நான் ஒரு கறுப்பன்' என்று மட்டுமல்லாமல் 'வெள்ளையனும் அல்ல' என்பதைக் கண்டுபிடிக்கும் பொழுது ஏற்படும் அதிர்ச்சியோடேயே தொடங்குகிறது"**



"கறுப்பின உணர்வு என்பது முதன்முதலில் "நான் ஒரு கறுப்பன்" என்று மட்டுமல்லாமல் "வெள்ளையனும் அல்ல" என்பதைக் கண்டுபிடிக்கும் பொழுது ஏற்படும் அதிர்ச்சியோடேயே தொடங்குகிறது" என்று ஒரு முறை தென்னாபிரிக்க இதழியலாளரான லூயி நோஸி (LEWIS NKOSI) ஒப்சேவர் பத்திரிகையில் எழுதினார். (இந்தக் கருத்தினுடைய அசைவு பல்திசைகளிலும் பரவிச்சென்றதோடு அதனுடைய விநோதமான எதிரொலிகள் பல்வேறு சூழ்நிலைகளிலும் எதிரொலித்துள்ளன. கறுப்பர்களான தென்னாபிரிக்கர்கள், வெள்ளையர்கள் மேலாண்மை கொண்டிருப்பதும் விரோத மனப்பான்மை கொண்டிருப்பதுமான சமூகம் ஒன்றினால் முழுமையாக நிராகரிக்கப்டுவதன் மூலமாக இதனைக் கண்டுகொண்டனர். இந்தக் கண்டுபிடிப்பானது முற்றிலும்

மூலம்:
**MODERN POETRY FOROM AFRICA**

என்ற நூலின் முன்னுரை
மொழிபெயர்ப்பு:
**வின்சென்ற் புளோறன்ஸ்**


வித்தியாசமான சூழ்நிலைகளிலும் ஏற்படக் கூடும். பிரெஞ்சு ஆதிக்கத்திற்கு உட்பட்ட ஆபிரிக்கர்கள் சில நிபந்தனைகளோடு கூடியதாக வெள்ளையர்கள் சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் மூலம் இதனைத் துல்லியமாகக் கண்டுகொண்டனர். ஒரு கறுப்பன் தன் நிறத்தை மேற்குலக நாகரீகத்தின் கலாச்சாரம், மதம், பழக்கவழக்கங்களால் மறைத்துக் கொண்டால் அவனது கறுப்பு நிறத்தை மன்னித்துவிட இந்தச் சமூகம் தயாராக இருந்தது. இந்த அணுகுமுறையின் விளைவாக இவ்வாறான சூழ்நிலைகளில் ஒரு "வெள்ளையன் அல்லாதவனாக"


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இருப்பதன் பொருள் என்ன? என்றவான ஒரு சுய மதிப்பீட்டார்வம் அவன்மீது திணிக்கப்பட்டு இருந்தது. அவனது நிறம் உண்மையிலே இதனைவிட அதிக முக்கியத்துவம் கொண்டதாக இல்லையா? சீரழிக்கப்பட்டதெனினும் வளம் கொண்ட தன் சொந்த மண்ணில் வாழும் ஒரு கறுப்பானக இருப்பதென்பது இன்னொருவன் மேல் துன்பங்களைச் சுமத்தும் "வெள்ளையன் அல்லாதவனாக" இருப்பதை விடச் சிறப்பானதல்லவா....? என்றவாறாக அவன் சிந்தித்தான். இவ் வாறான இனவுணர்வை ஒழித்துவிடும் (ASSINILION) இந்தக் கொள்கையானது ஒரு கறுப்பன் எந்தக் காரணியை மறக்கவேண்டும் என்று வெள்ளைக் குடியேற்றவாதிகள் நினைத்தார்களோ, அதே காரணிமீது அவனது கவனத்தை முனைப்பாகத் திருப்பிவிட்டது. அவனுடைய "கறுப்பு நிறம்தான்" அந்தக் காரணி. மேற்குலக நாகரீகம் உருவாக்கிய கலாச்சாரம் அவனை மூழ்கடிக்கும் விதத்தில் அணைத்துக்கொள்ள முயன்றபோது அவன் அதன் பிடியிலிருந்து தப்பி தனது சொந்தக் கலாச்சாரத்தைப் புதுக்கிளர்ச்சியூட்டும் கோணங்களிலும் புதிய புரிந்துணர்வோடும் ஆராயத் தொடங்கினான்.

எய்மே செசாயர் (AIME CESATRE) இன் வார்த்தைளில் சொல்வதானால் "கறுப்பு நிறம் என்பது இருப்பை இழப்பது அல்ல. அந்நியக் கலாச்சார மறுதலிப்பு ஆகும்" ஒரே நேரத்தில் கலாச்சார ஆக்கிரமிப்பை மறுதலிப்பதாகவும் சுதேசியக் கலாச்சாரத்தை வலியுறுத்துவதாகவும் அமைந்த இப்போக்கே நீக்றிரியூட் (NEGRI-TUDE) அகும். லியொபோல்ட செடார், செங்ஹொர், டேவிட் டியோப் பிறாகோ டியொப் கொங்கோலியக் கவிஞர்களான யுராமிலி மற்றும் போலாம்பா போன்றவர்களின் கவிதைகளில் இந்தப் போக்கு பெரிதும் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. அதனைப் புரிந்து கொள்ளாமல், ஆகக் குறைந்தது அதன் வரலாற்று ரீதியான முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளாமல் 1940 - 1960 காலப்பகுதிகளிலான இரு தசாப்தங்களில் உருவாகிய கவிதா நிகழ்வுகளை புரிந்து கொள்வது கடினமானதாகவிருக்கும்.



பிரெஞ்சு ஆதிக்கத்திற்குள் கடைசியாக வீழ்ந்த ஆபிரிக்க உலக நாடாக மடகஸ்கார் இருந்தது. இங்குதான் பிரான்ஸ் தனது 'இனவுணர்வை ஒழித்துக் கட்டும்' கொள்கையை முதலில் நடைமுறைப்படுத்தியது. 1896ல் தான் பிரெஞ்சுப் படைகளிடம் மடகஸ்கார் முழுமையாக வீழ்ச்சியடைந்தது. இங்குதான் ஓரளவு பயன்விளைவுள்ள முறையில் அக் கொள்கையை நடைமுறைப்படுத்த முடிந்தது. அங்கு உருவாகியிருந்த நூற்றுக்கணக்கான மிசன் பாடசாலைகளை மூடியதே பிரெஞ்சு அரசின் முதல் நடவடிக்கையாக இருந்தது. எனினும் இந்த நிலைப்பாடு பின்னர் கைவிடப்பட்டதோடு விரைவிலேயே அந்த நாட்டை நிர்வகிப்பதில் தமக்கு உதவக்கூடிய மலசாஸி புத்திஜீவிகளின் சிறிய குழுவொன்றை உருவாக்க பிரான்ஸ் ஆரம்பித்தது. 1920 அளவிலே மடகஸ்காரில் ஜீன் ஜோசப் றபியாறி வெலோ (JEAN JOSEPH RABIARI VELO ) என்ற அற்புதமான கவிஞர் உருவாகினார். இவர் பிரெஞ்சு மொழியிலேயே எழுதினார், சிந்தித்தார். பிரெஞ்சு இலக்கியம் மீதான இவரது வெறி எந்தளவிற்கு இருந்ததெனில் 1937 இல் பிரான்சுக்குப் போகும் தம் முயற்சியை உள்ளூர் அதிகாரிகள் பிடிவாதமாய்த் தடுத்த பொழுது தற்கொலை செய்யும் அளவிற்கு இருந்தது. அந்தளவிற்கு 'இன உணர்வழிப்பு' அவர்மீது ஆதிக்கம் கொண்டிருந்தது. இவரது கவிதைகளில் குறியீட்டு கவிஞர்களின் தாக்கம் இருக்கிறது. எனினும் கவிதைகள் தனித்தே நிற்கின்றன. அற்புதமான முறையில் படிமங்களை அவர் கையாளுவதானது உலர்வலய மண்ணின் மைந்தனாக அவரை எடுத்துக் காட்டுகிறது. அவர் வாசகனை தன் கவிதைக்குள் தன்னம்பிக்கையுடன் நடத்திச் செல்வதும் ஒரே படிமத்தை கவிதை முழுவதினுள்ளும் விரவச் செய்து விரிவாக்கி கையாளுவதானது, பிரெஞ்சு - ஆபிரிக்க கவிஞர்கள் றபியாறி வெலோவை வேறுபடுத்திக் காட்டுகிறது.

இவரதும், பிளேவியன் றனைவொ, ஜாக்குவில் றபேமனன்வா போன்ற ஏனைய கவிஞர்களதும் கவிதைகள் அந்தத்தீவின் மக்களால் விரும்பப்படும் கிராமிய மொழிவழக்கிலான பாடல்களை அடிப்படையாகக் கொண்ட பேச்சுவழக்கிலான கவிதைகளாகும். இவர்கள் மடகஸ்காருக்கென ஒரு கவிதை மரபை உருவாக்கித் தந்தார்கள்.

'இன உணர்வழிப்புக் கொள்கை' கைக்கொள்ளப்படுவதை கண்கூடாகக் கண்ட ஒரே ஆபிரிக்க நாடாக செனகல் இருக்கிறது. 1946 வரை வேறு இடங்களில் இக்கொள்கை நடைமுறைப்படுத்தவில்லை. எனினும் 10 வருடங்களின் பின்பு இக்கொள்கை பிரெஞ்சு அரசால் கைவிடப்பட்டது. போருக்கு முன் பிரெஞ்சுப் பல்கலைக்கழகங்களுக்குச் சென்ற சில செனகல் நாட்டவர்களில் லியோபொல்ட் செடார் செங்ஹொரும் ஒருவராவர். 1906ல் சிறிய போர்த்துக்கேய குடியேற்ற நகரான ஜோஆஸில் பிறந்த அவர் 1928ல் பாரிஸ் வந்தார். அங்கு வைத்து மாட்டிங்குவேயின் செசாயர் மற்றும் பிரெஞ்சு சினியாவின் லியோன் டமாஸ் முதலியோருடன் அறிமுகமாக நீக்றிரியூட் பாணியின் பக்தராக ஆனார். இந்த டமாஸ் என்பவரே பாரிசில் அஞ்ஞாத வாசம் செய்த நீர்ரோக்கள் தங்கள் கருத்தை வெளிப்படுத்தும் துணிவை உருவாக்கிக் கொடுத்தார். அவரது உணர்வுகள் பெரிதும் வெளிப்பட்ட PIIGM-SNTS என்ற தொகுதி 1937ல் வெளியிடப்பட்டு பின்னர் பிரெஞ்சு பொலிசாரால் முற்றாக அழிக்கப்பட்டது.

**அவர்கள் என் ஆபிரிக்காவை**
**கொள்ளையிடுகையில்**
**கறுப்பானக இருக்கத்**
**துடிக்கையில்**
**அவர்கள் எனக்குள் புகுத்த**
**முயன்ற**
**கலாச்சாரத்தின்**
**இடுக்குகளில்**
**வெற்றுப் பேச்சுக்களின்**
**இடுக்குகளில்**
**கோட்பாடுகளின் இடுக்குகளில்**
**என் வெறுப்பு வளர்ந்தது....**
என்று அவர் எழுதினார்.

இரண்டு வருடங்களின் பின்பு, இவரே 'நீக்றிரியூட்' என்ற பதத்தை உருவாக்கி அந்தப் பாணியில் எழுதும் பிரதான கவிஞருமானார். கிட்டத்தட்ட இதேகாலப்பகுதியில் எழுதத் தொடங்கிய செங்ஹொரின் கவிதைகளின் 'நீக்றிரியூட்' பாணியின் கருப்பொருட்கள் ஒவ்வொன்றாகத் தோன்றுகின்றன. இறந்தவர்களின் இயல்மீறிய பொருள்தரும் பிரசன்னம், வாழ்பவர்கள் மீது அவை கொண்டிருக்கும் பாதுகாக்கும் வகையினதாக வழிகாட்டும் விதத்திலானதான செல்வாக்கு, வெள்ளை ஐரோப்பாவால் புராதன ஆபிரிக்காவும் அதன் கலாச்சாரமும் படு நாசத்திற்கு உட்படுதல் (மென்பனியில் பாரிஸ்) மேற்குலகின் கொடூரமான நெகிழ்ச்சியற்ற தன்மையும் ஆபிரிக்காவின் குறைநிரப்பும் தன்மைகள் தேவையாகவிருக்கும் அதன் கையறுநிலையும் ஆபிரிக்கப் பெண்ணினுடைய கிளர்ச்சியூட்டும் வெற்றிகர அழகு முதலியவை அவர் கவிதைகளில் இழையோடுகின்றன. ஆனால் லக்சம்போர்க் 1939 போன்ற கவிதைகள் அவரது இன்னொரு பக்கத்தை எடுத்துக் காட்டுகின்றன. மேற்குலக சாதனைகளில் சிறந்தவை பற்றி அவர் கொண்டிருக்கும் விருப்பம் மற்றும் புரிந்துணர்வும், இரண்டு கலாச்சாரங்களில் வாழ வேண்டிய தேவை, கலப்பு கலாச்சாரக் காரனாக இருக்கவேண்டியிருத்தல், என்பன அவற்றில் வெளிப்படுகின்றன.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கொங்கோ நாட்டுக் கவிஞர்களான யுராம்சி மற்றும் போலாம்பா முதலியோரில் செசாயரின் நேரடிச் செல்வாக்குப் படிந்திருக்கின்றது. செய்ஹொரின் ஆர்ப்பரிக்கின்ற சந்தம் மாறாத கவிதைகளுக்குப் பதிலாக முனைப்பான படிமங்களின் தொடர்களை இவர்களது படைப்புகள் தருகின்றன. இந்த உத்தியானது ஒரே சீரான வெற்றியைப் பெறாவிட்டாலும் நினைவில் நிற்கக்கூடியவையும் அற்புதமான படிமங்களைக் கொண்டதுமான ஆக்கங்களை இவர்கள் தந்திருக்கிறார்கள்.

உதாரணமாக:-

**உருகிய வெண்கலத்தைக்**
**குடித்துப் பெற்ற சுவையை**
**என் இனம்**
**நினைவில் வைத்திருக்கிறது.**

பிரெஞ்சு ஆபிரிக்காவிலிருந்து நாம் ஆங்கிலேய ஆபிரிக்காவுக்கு நகரலாம். இவர்களுக்கு நீக்றியூட் பற்றி எதுவும் தெரியாது. அதுபற்றி அவர்களுக்குத் தெரிந்தவற்றையும் அவர்கள் வெறுத்தார்கள். " பல்லின மக்கள் வாழும் சதுக்கத்திலிருந்த எங்களுக்கு நீக்றிரியூட் என்பது புத்திஜீவிகள் கதைக்கும் விடயமாக. அவர்களுடைய ஒரு வெறியார்ந்த ஈடுபாடாக இருந்தது" என மப்கலெல் (maphalele) என்பவர் கூறியுள்ளார். நைஸீரியரான வோல் ஸோயிங்கா (wole soyinka) வின் கருத்தும் இதையொத்ததாகவே இருக்கிறது. ஒரு புலி, தான் ஒரு புலி என்று சொல்லிக் கொள்வதை ஒத்தது இது என்று இவர் ஏளனம் செய்திருக்கிறார்.

குடியேற்றவாத வல்லரசுகளின் அறிவாற்றல் சார்ந்த மனப்போக்கானது அவர்களது முன்னைய பிரசைகள் மேல் தீவிரமான தாக்கங்களை ஏற்படுத்தின என்பதில் எந்தக் கேள்விக்கும் இடமில்லை. பிரித்தானிய அரசானது கலாச்சார ரீதியான இன உணர்வழிப்பை ஒரு போதும் கைக்கொள்ளவில்லை.

உண்மையைச் சொல்லப் போனால் கலாச்சார ரீதியான ஒரு கொள்கையே அந் நாட்டுக்கே இருக்கவில்லை. எனவே இது விடயத்தில் போராடுவதற்கென்று இருந்தவை பிரெஞ்சு ஆபிரிக்காவில் இருந்தவற்றைவிட மிகக் குறைவானவையாகவே இருந்தன. ஆனால் ஆங்கிலேய ஆதிக்கத்திலிருந்த ஆபிரிக்காவில் உண்மையான தன்னம்பிக்கையுடனும் சரளமாகவும் ஆங்கிலத்தில் எழுதக்கூடிய தலைமுறையினர் தோன்றுவதற்கு நீண்ட காலம் எடுத்தது. செங்ஹொர் போன்றோர் பாரிஸ் சஞ்சிகைகளில் ஆக்கங்களை எழுதிக் கொண்டிருந்த பொழுது நைஜீரியாவிலும் கானாவிலும் இருந்தவர்களின், ஆக்கங்கள் மிகக்குறைவாகவே வெளிவந்தன. வெளிவந்த சில ஆக்கங்களும் மதப் போதகர்களின் பாடல்கள் மற்றும் சுலோகங்களால் செல்வாக்குச் செலுத்தப்பட்டவையாக இருந்தன. இவர்களில் பிரதிபலிக்கப்படும் மனப்போக்குகள் நீக்றிரியூட் கவிஞர்களை சீற்றம் கொள்ளச் செய்பவையாக இருந்தன. நைஜீரியரான டெனிஸ் ஒஸாடிபே(DENIS OSADEBAY) பின்வருமாறு எழுதியிருக்கிறார்.



**எனது எளிமையான முன்னோர்கள்**
**சிறுபிள்ளைத்தன நம்பிக்கையோடு**
**எல்லாவற்றையுமே நம்பினார்கள்.**
**அதிக இழப்புக்களை அது கொடுத்தது**
**அவர்களின் வாரிசுகள்**
**மிக அதிகமாய் இழந்து போனார்கள்**
**சூனியத்தின் பொய்மைப்பற்றி**
**அவர்கள் கேள்வியே எழுப்பவில்லை**
**போலி வழிபாட்டுப் பொருட்களிலும்**
**நம்பகத்தன்மை ஓரளவு தெரிந்தது**

இவ்வாறனான உணர்வுகள் நைஜீரியக் கவிதைகளில் ஆங்காங்கே பிரதிபலிப்பதைக் காணலாம். இது 'இன உணர்வு ஒழிக்காமை' எவ்வளவு முழுமையாகச் செயற்பட்டிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது. வெறுமனே சூரியோதயத்தைக் காணுவதால், தம் முன்னோர்கள் மூடநம்பிக்கை தந்த பயத்தின் காரணமாக எப்படி நடுங்கினார்கள் என்பதை நைஜீரிய மாணவர் ஒருவர் சில வருடங்களுக்கு முன் பின்வருமாறு கூறியுள்ளார்.

**மூதாதையர் நாட்களில் பயமூட்டியது**
**எனக்கு வீறார்ந்த தன்மை தருகிறது**
**கடந்த நாட்களிலே பேரச்சமாகியது**
**எனக்கோ பகட்டாரவாரமானது.**

ஆங்கிலம் பேசும் ஆபிரிக்காவின் மற்றைய முன்னோடிக் கவிஞர்களாக கானாவின் டெய் அனாங் (DEI ANANG) உம் லைபீரியாவின் எச் கறி தொமஸ் (H.CARRY THOMUS) உம் இருக்கிறார்கள். அவர்கள் சுதேசியக் கலாச்சாரத்திற்கு மற்றையவர்களைவிட அதிக மதிப்பு கொடுத்தாலும் பாடுபொருளை கையாண்டமுறை ஓரளவிற்கு மேலெழுந்த வாரியானதாகவே (SUPERFICIAL) இருக்கிறது. ஓசா டெபிக்கு நேரெதிரான அறமுறையை (MORAL) அவரைப் போலவே வெளிப்படையான மொழியில் தொமஸ்சும் சொல்கிறார்.

**எச்சரிக்கையாயிருங்கள்**
**அழுக்கான கால்களையுடைய**
**அந்த வெள்ளை முக அன்னியர்கள்**
**மரபுரிமையாய்**
**எம் மூதாதையர் தந்தவற்றை**
**நிந்திக்கிறார்கள்...** என அவர் எழுதினார்.

முன்னோடி வகைகள் என அடையாளம் காணப்படக்கூடிய இந்த வகைக்கவிதைகள் கிழக்காபிரிக்காவிலிருந்தும் தோன்றத் தொடங்கின. கிக்கியூவின் இளம்கவிஞரான ஜோஸ் முட்டிகா (JOSE MUTIGA) தனது புனித மண், புதிய பயிர்களைப் பயிரிடுவதால் எவ்வாறு புனிதம் கெட்டுப்போகிறது என்பதை பின்வருமாறு கூறுகின்றார்.

**புற்களின் மீது**
**நடனக்காரர் ஆடுகையில் நிகழ்வதுபோல்**
**எமது வழக்கங்கள் பிடுங்கி எறியப்படுகின்றன**
**நிலத்தை நோக்கிக் கண்கள் தாழ்ந்திருக்க**
**அவற்றைக் கடந்து செல்கின்றோம்...**
**எங்களுடையதைப் போல்**
**இடம்கொடுக்கின்றோம்...**
**விதேசியப் பயிர்களுக்கு**

இவரைப் போன்றவர்களின் கவிதைகள் அரசியல் - சமூக ரீதியான ஆர்வங்களை ஏற்படுத்துவதாயிருந்தாலும் ஆங்கிலம் மற்றும் பேச்சு வழக்கு கவிதைகளில் செழிப்பான பாரம் பரியங்களை ஊடுருவத் தவறிவிட்டதாவது அவர்களின் படைப்புகளில் தனித்துவமான பாணி எதுவும் இல்லாமலாக்கும் அளவிற்கு அவற்றைப் பாதித்துவிட்டிருக்கிறது.

ஆபிரிக்க தேசியவாத வரலாற்றிலே இவர்களது கவிதைகளின் தொகுப்பு ஒரு முக்கியமானதும் மன நெகிழ்ச்சி ஏற்படுத்துவதுமான ஆவணமாக இருக்கும். அவர்களுடைய கவிதைகள் மொழியைக் கையாளுவதில் புதிய முயற்சிகளைப் பிரதிபலிக்காத காரணத்தால் 'நவீன கவிதை'கள் என்று அவற்றை வகைப்படுத்தவும் முடியாது. அவற்றை நவீன கவிதைத் தொகுதிகளில் சேர்த்துக் கொள்ள முடியாத அவலமும் நிலவுகிறது.

கிட்டத்தட்ட 1958ம் ஆண்டு வாக்கிலே தங்களை வெளிக்காட்டிக் கொண்ட புதிய தலைமுறையில் கப்ரியேல் ஒக்காரவைத் தவிர ஏனையோர் அனைவருமே அபாடான் பல்கலைக்கழகத்தில் பயின்றவர்களாவர். இந்தக் காரணத்தினால் 1930 களிலும் 1940களிலும் பாரிசில் குழுமிய கறுப்பின எழுத்தாளர்களைப் போல் அந்நியப்படுத்தல் மற்றும் அஞ்ஞாதவாச உணர்வுகளால் பாதிக்கப்படாமல் இலக்கியக் கலாச்சாரம் ஒன்றைப் பெற்றுக் கொள்ளமுடிந்தது. முழுமையாக ஆபிரிக்கச் சூழலிலேயே


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

வளர்ந்து கல்விகற்ற இவர்களது படைப்புக்கள் சுலோகங்களிலிருந்தும் ஒரே மாதிரியான தன்மைகளிலிருந்தும் (STEREO TYPE) அசாதாரணமான முறையில் விடுபட்டனவாகக் காணப்படுகின்றன. அவர்கள் தங்கள் ஆதர்சங்களைத் தெரிந்து கொள்வதில் பன்முகக் கருத்துத் தேடல் உடையவர்களாகக் காணப்படுகின்றார்கள். டிலான் தொமஸ் (Delan Thomas) பவுண்ட் (Pound) கொப்கின்ஸ் (Hopkins) இலிருந்து சேக்ஸ்பியர் வரை இந்தத் தேடல் பரந்திருக்கிறது. எஸ்கிலஸ் (Apschylus) கூட இதற்குள் அடங்குகின்றார். ஆனால் இந்தப் புதிய தலைமுறைக் கவிஞர்கள் எல்லோருமே இந்தச் சொல் வாக்குகளுக்கூடாகத் தங்களுக்கென வலுவான பாணியொன்றை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

உதாரணமாக இங்கிலாந்து செல்லுமுன் இபாடன் பல்கலைக்கழகத்தில் பயின்றவரான வோல் ஸோயிங்கா (Wole Soyinka) தான், இற்றைவரையிலே இறுக்கமற்றதும் நடைமுறை சார்ந்ததுமான முரண் நகைச்சுவையை வெளிப்படுத்தும் ஒரே ஆபிரிக்க் கவிஞராக இருக்கிறார். (தொலைபேசி உரையாடல்)

'முன்ரு' (Muntu) இதழிலே ஆபிரிக்கக் கவிதைகளில் காணப்படும் தனிச் சிறப்புத்தன்மை பொதுமையானது என்று ஜாஹ்ன் (Jaghn) வாதிக்கிறார்.

'ஆபிரிக்கக் கவிதைகளிலே கருத்து வெளிப்பாடானது எப்போதும் உள்ளடக்கத்துக்குச் சேவை செய்வதாகவே இருக்கிறது. இதிலே தன்வயப்பட்ட வெளிப்பாடு என்பதற்கே இடமில்லை. ஏதோ ஒன்றைப் பற்றியதாகவே கருத்து வெளிப்பாடு இருக்கிறது... ஆபிரிக்கக் கவிதையானது எழுதுபவரின் அகவியல்புகளையோ அல்லது அவரது தனித்துவமான தன்மையையோ வெளிப்படுத்துவதாகவும் இல்லை' என்று அவர் எழுதியிருக்கிறார்.

ஆபிரிக்கக் கவிதைகளைப் பற்றிச்சொல்லப்பட்டிருக்கும் ஏனைய பல விடயங்களைப் போலவே இதுவும் விசேடமாக ஆபிரிக்கக் கவிதைகளுக்கு மட்டும் உண்மையாயிருப்பது போல் தெரியவில்லை. நல்ல கவிதைகள் எல்லாவற்றுக்குமே அது பொருத்தமாயிருக்கிறது. பொதுப்படையாகச் சொல்லப்போனால் ,இந்தக் கவிஞர்கள் எல்லோருமே ஒட்டுமொத்த ஆபிரிக்க ஆன்மாவை வெளிப்படுத்தும் எண்ணம்



கொண்டவர்களாகக் காணப்படவில்லை. கறுப்பனாக இருப்பது பற்றியும் அதனால் பொருமைகொள்வது பற்றியும் ஒவ் வொருவரியிலும் தம்பட்டம் அடிப்பவர்களாகவும் அவர்கள் இல்லை. அவர்களுடைய எழுத்துக்களில் காணப்படும் முதிர்ச்சியும் தன்நம்பிக்கையும் உற்சாகமூட்டும் அம்சங்களாக இருக்கின்றன.

கானாவின் ஜோர்ஜ் அவூனர் வில்லியம்ஸ் (Jeorge Awooner Williams) தென்னாபிரிக்காவின் மாஸிஸி குனெனெ (Masisi Kunene) ஆகிய ஆங்கிலம் பேசும் கவிஞர்கள் நடைமுறைப் பேச்சுவழக்குக் கவிதை முறையைப் பயன்படுத்தியிருப்பது ஆர்வமூட்டுவதாக இருக்கிறது. அவர்கள் இருவருமே பேச்சுவழக்கிலுள்ள பல படிமங்களின் ஐயப்பாடான தன்மைகளை அல்லது அவற்றின் மறைபொருளைத் தம்வயப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இது அவர்களது மொழி நடைக்குப் புதுமை குன்றாத தோற்றத்தையும் கனத்தையும் கொடுக்கிறது. இவர்கள் இருவருமே நுண்ணயம் வாய்ந்த நடைமுறைப் பேச்சு வழக்குக் கவிதைகள் ஏராளமாகச் சேகரிக்கப்பட்டிருக்கும் பிரதேசங்களான ஈல்லாண்ட் மற்றும் சூலூலாண்ட் ஆகியவற்றைச் சேர்ந்தவர்களாகும்.

போத்துக்கேயரிற்குக் கீழிருந்த ஆபிரிக்கப்பகுதிகளிலிருந்து வந்த கவிதைகள் வேதனையையும் இழப்பையும் பற்றிய ஓலங்களாகவே இருக்கின்றன. ஆபிரிக்காவின் அநேக பகுதிகள் பலவருடங்களுக்கு முன்பே மீண்டுவிட்ட அரசியல் மற்றும் சமூகரீதியான சூழ்நிலைகளிலேயே இன்னமும் இந்தப் பிரதேசங்கள் மூழ்கியிருக்கின்றன. அரச ஒடுக்குமுறையின் அலகாக ஒரு சிறிய குழுவினரான அஸிமிலாடோஸ் (Asimilados) கள் இருக்கின்றனர். (400 வருடகாலக் கரையோர ஆக்கிரமிப்பின் பின் அங்கோலாவில் இவ்வாறானவர்கள் 5000 பேர்களே இருந்தார்கள்) உதாரணமாக கலாநிதி அகஸ்ரின்ஹோ நேற்றோ (DR..ACCSTONEO NETO) இவர்கள் இரு வருடங்களுக்கு மேலாக போத்துக்கல்லில் சிறைபட்டுக்கிடந்தபின் அங்கிருந்து தப்பிவந்தார். இந்தக் கவிஞர்களில் சிலர் தங்களது உடனடி சோகங்களைப்பற்றி எழுதியிருக்கிறார்களெனில் அது அவர்களுடைய அசைக்கமுடியாத மனித நேயத்தின் ஆன்மாவையே எடுத்துக் காட்டுகிறது. இவர்களில் விதிவிலக்கானவராக வலன்ரே மலங்கரானா (VALENTE MALANGATANA) இருக்கிறார். இவர் புகழ்பெற்ற ஒரு ஓவியருமாவார். ஹைற்றியைச் சேர்ந்த ஓவியர் - கவிஞரான மக்ஸ் பிஞ்சனெற் (MAX FINCHINAT) இன் படிமங்கிலும்

உடனடித் தன்மை, பிரசன்னம் முதலியன காணப்படுகின்றன. இந்தப் பிரசன்னமானது கட்புலரீதியாக தெரிவதைவிட அதிகமானதாகும்.

ஆபிரிக்கக் கவிதைகளைப்பற்றி எழுதும் எழுத்தாளர்களில் சிலர் மட்டும் தாம் தவறிழைப்பதில்லை என்று சொல்லிக்கொள்ளும் உந்துதலை (PON-TIFICATION) எதிர்த்துப் போராடக்கூடியவர்களாக இருக்கிறார்கள். இந்தப் பொதுப்படையாக்கும் தன்மையை நவீன ஆபிரிக்கப் படைப்புக்களில் யதார்த்தத் தன்மையின் மூலம் எந்தளவிற்கு முறியடிக்க முடியும் என்பதை கண்கூடாகப் பார்ப்பது ஆர்வமூட்டுவதாக இருக்கிறது. ஒரு ஆரம்பத்திற்கு செடார்செங்ஹொரின் கூற்று ஒன்றைப் பார்ப்போம்.

***"கவிதையின் தொனியினுடைய சந்தம் மாறாத தன்மை (MONOTONY of TONE) தான் அதனை உரைநடையிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. நீக்றியூட்டின் முத்திரை அதுதான். அண்டவெளி விசைகள் என்ற அத்தியாவசியமான விடயங்களுக்கு வழியைத் திறந்துவிடும் உச்சாடனமும் அதுதான்" என்கிறார் அவர்.***

உண்மையைச் சொல்லப் போனால் வெங்ஹொரின் கவிதைகளில் மட்டுமே இவ் வாறான சந்தம் மாறாத் தன்மை காணப்படுகிறது. அவர் தன் கவிதைகளுக்கு வழங்கியுள்ள இசை யதார்த்த பண்பு விளைவுகளின் (MUSICALEFECT) காரணமாகவே அற்றைச் சகித்துக் கொள்ளக் கூடியதாக விருக்கிறது.

"நீக்ரோக் கவிதைகள் எமது காலத்தின் உண்மையான புரட்சிகர கவிதைகள் - நீக்றியூட் என்பது ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் காலத்தின் குரல். வெள்ளையர் ஆட்சிக்கெதிரான தம் புரட்சிக்கு கறுப்பினம் கொடுத்த மொழிவடிவம் இது" என்று ஜீன் போல் ஸாட்ரே (JEAN PAUL SAYTRE). கூறியதை மறுத்து "புதிய ஆபிரிக்கக் கவிதைகள் புரட்சிகரமானவையே அல்ல. அவற்றுக்கே உரித்தான மரபுக்கு அவை திரும்புகின்றன" என்று வாதிக்கும் ஜாஹ்ன்(JEAN)

"நீக்றியூட் என்பது எந்த ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியினதும் குரலாக இருப்பதிலிருந்து வெகு தூரத்திலிருக்கிறது. இனிமேல் ஆபிரிக்கக் கவிதைகள் எழுதப்படவேண்டிய பாணியாகவே அது இருக்கிறது" என்று வலியுறுத்துகிறார்.

"அது ஆபிரிக்காவின் மேல்விழுந்த கறையை ஒரேயடியாக நீக்கிவிட்டிருக்கிறது. ஆபிரிக்கப் பாணியிலும் ஆபிரிக்க மனப்போக்கிலுமிருந்து கவிதைகளும்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இலக்கியங்களும் தோன்றுவது சாத்தியமானதுதான் என்று அது எடுத்துக்காட்டுவது மட்டுமல்லாமல் இவ் வாறான கவிதை முறையே முறையானது என்றும் எடுத்துக் காட்டுகிறது" என்று அவர் மேலும் கூறியிருக்கிறார்.
ஐம்பதுகளின் முற்கூறுகளின் நீக்றிரியூட் பிரகாசிக்கவில்லை. கவிதை முயற்சிகளின் மையம் செனகல் - பாரிசிலிருந்து நைஜீரியாவுக்குள் நகர்கிறது. நைஜீரியாவின் இளம் கவிஞர்கள் நீக்றியூட் பற்றி விரோத மனப்பான்மை கொண்டவர்களாயிருந்தார்கள்.

புதிய ஆபிரிக்கக் கவிஞர்களுக்கு புறப்படு தளமொன்றைக் கொடுத்ததோடு நீக்றியூட் தன் பங்கை முடித்துக்கொண்டதாகவே தோன்றுகிறது. ஆபிரிக்கா சுதந்திரத்தை நோக்கி நகர்ந்த பொழுது நீக்றியூட்டின் மையத்திலிருந்த முரண்பாடுகள் வெளிப்படையாகத் தெரியத் தொடங்கின. நீக்றியூட் என்ற வார்த்தையே மேற்கிந்தியர் ஒருவரால் உருவாக்கப்பட்டதாகும். ஆபிரிக்கா திரும்பவும் ஆபிரிக்கர்கள் கைக்குள் வந்து கொண்டிருந்தபொழுது மேற்கிந்தியாவில் இருந்த கறுப்பர்களின் நிலையும் ஆபிரிக்கக் கண்டத்திலிருந்த கறுப்பர்களின் நிலையும் வேறுபட்டவையாகவே இருந்தன. ஹைற்றின், கியூபா, பியூட்டோறிக்கோ, மாட்டினிக்வே அல்லது ஜமேக்காவில் இருந்த கறுப்பர்கள் நிரந்தர அஞ்ஞாத வாசத்திற்கு உட்பட்டனர். அவனுக்கென்று பெயர் இருக்கவில்லை... அனுமதிக்கப்பட்ட மதம் இருக்கவில்லை. அவனுக்கென ஒரு கலாச்சாரம் இருக்கவில்லை. அவனது உழைப்பின்மீது கட்டியெழுப்பப்பட்ட கறுப்பினச் சமூகத்திலே அதிகாரமுள்ள அந்தஸ்தையோ செல்வாக்கையோ அவன் எதிர்பார்க்க முடியாதிருந்தது. தனது மூதாதையர்கள் ஆபிரிக்காவின் எந்தப் பகுதியிலிருந்து வந்தார்கள் என்பதை அறிந்து கொள்ளாமலே 'கினியா' பற்றிய இனிய கனவுகளை உருவாக்கப்படுத்திக் கொண்டிருக்க வேண்டியிருந்தது. நல்ல ஆபிரிக்கர்கள் போகும் சொர்க்கமாக அது கருதப்பட்டது.

"கினியாவுக்கான பாதை மிக நீளமானது. மரணம் நிலையானது தன்னை நிராகரிப்பவர்களிலிருந்து தன்னை வேறுபடுத்திப் பார்க்க தன் நிறம் மட்டுமே உன்னை அங்கு கொண்டு செல்லும்" என்று ஜாக்குவெஸ் றுமெய்ன் (JAQUES RUMAN) எழுதினார்.




அவனுடைய இந்த "இரண்டும் கெட்டான்" நிலையானது தன்னை நிராகரிப்பவர்களிலிருந்து தன்னை வேறுபடுத்திப் பார்க்கத் தன் நிறம் மட்டுமே இருக்கிறது என்பதையும், எனவே தனக்கு இந்த நிறத்தின் பொருள் பற்றி ஆராய்வது கடமையாகின்றது என்பதையும் புரிந்துகொண்டதானது கியூபா கவிஞரான நிக்கொலன் குய்லான்(NICHOLA GUILLEN) இன் கவிதையில் முழு நிறைவாக வெளிப்படுத்தப்படுகிறது.

**"என்னுடைய தோல் அனைத்தும்
உண்மையிலேயே
ஸ்பானிய மாபிள் சிலையிலிருந்து
வந்ததா?...
என்னுடைய பயங்கரமான குரல்
என் கொடைக் குழியிலிருந்து
வரும் அலறல்
எனது எலும்புகள்... எல்லாமே
அங்கிருந்துதான் வந்தனவா?
சீற்றத்தின் அறிகுறியோடு
நீ எழுதி முத்திரையிட்டதைத் தவிர
வேறு எதுவுமே இல்லையா?
என்கண்களில் தெரியும்
முரசங்களை நீ காணவில்லையா?
அந்த முரசங்களால்
உலர்ந்த கண்ணீர்த் துளிகளிரண்டை
வலிந்து வெளித் தள்ளுவதை
நீ காணவில்லையா?
சாட்டையால் எழுதப்பட்ட
ஒரு பெரிய அடையாளம்
(தோலைவிடக் கறுப்பான)
பெரும் கருமடையாளம் கொண்ட
மூதாதையரொருவர்
எனக்கு இல்லையா?...
மாண்டிங்கோ, கொங்கோ,
டஹோதியிலிருந்து
வந்த மூதாதையர் யாரும்
எனக்கு இல்லையா?"**

இவ்வாறு அந்நியப்படுத்தப்படல் மற்றும் மறுப்புத் தெரிவிக்கும் மனப் போக்குகள்தான் கியூபாவின் நீக்றிஞ்மோ என்ற இலக்கிய இயக்கத்தை இருபதுகளின் பின் கூறுகளில் எழுச்சி கொள்ள வைத்தன. கிட்டத்தட்ட இதே காலப் பகுதியில் இதையொத்த இயக்கமொன்று ஹைற்றியில் தோன்றியது. நீக்றிரியூட்டின் நேரடி முன்னோர்களான இந்தக் கரிபியன் பிராந்திய இயக்கங்கள் விளங்கின.

இன உணர்வழிப்புக் கொள்கையால் முழுமையாகப் பாதிக்கப்பட்டு தாமாகவே பாரிசில் அஞ்ஞாத வாசம் மேற்கொண்ட செனகல் கவிஞர்களின் உள்ளங்களின் செசாயறின் அருட்டல்கள் ஏற்படுத்திய தாக்கங்களைப்போல் குடியேற்றவாதம் உச்ச மட்டத்தில் செயற்பட்டுக்கொண்டிருந்தபோதும் இன உணர்வோடு செயற்பட ஆபிரிக்க சமூகத்தில் வளர்ந்த கவிஞர்களின் உள்ளங்களில் ஏற்படுத்த முடியவில்லை.

இதன் காரணமாகவே முன்ரு (MUNTU)



இதழில் ஜாஹ்ன் (JAHN) பின்வருமாறு சொல்வது போன்று இலக்கிய பாரம்பரியம் ஒன்றை வரையறுப்பது விமர்சகர்களுக்கு அபாயகரமானதாக இருக்கிறது.

***"ஒரு ஆக்ககர்த்தாவின் நிறம் எத்தகையதாக இருந்தாலும் அவரது படைப்பு மேற்குலக கலாச்சாரத்துக்கா சொந்தமானது அல்லது ஆபிரிக்கக் கலாச்சாரத்துக்கா சொந்தமானது என்பது ஏற்கனவே நாம் வரையறுத்துள்ளபடியான ஆபிரிக்கக் கலாச்சார நடைமுறைக்குள் அடங்குகின்றதா என்பதைப் பொறுத்திருக்கின்றது."***

இவ்வாறாக ஆபிரிக்கக் கவிதைகளுக்குள் இட்டுச் செல்லும் ஒடுக்கமான புகு வழியின் தலைவராக ஜாஹ்ன் தன்னைத் தானே வரித்துக்கொண்டுள்ளார். ஆனால் நற்பேறு வசமாக நவீன ஆபிரிக்கக் கவிதைகள் என்ற தொகுப்பில் உள்ள கவிதைகள் எடுத்துக்காட்டுவது போல் ஒரேயொரு பாதையைப் பின்பற்ற முடியாத அளவுக்கு செழிப்பானவையாகவும் ஒன்றுக்கொன்று வேறுபட்டவையாகவும் ஆபிரிக்கக் கவிதைகள் ஏற்கனவே ஆகிவிட்டிருக்கின்றன. ஆபிரிக்கக் கவிதைகளைப் பற்றிய ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்துக்கள் என்பதற்கு ஆகக் கிட்டியதாக செங்ஹொரின் பின்வரும் கூற்று அமைந்துள்ளது.

***"இதில் வார்த்தை என்பது படிமத்தைவிட அதிக முக்கியதுவம் பெறுகிறது. ஒத்திசைவான படிமமே அது. உருவகத்தினுடைய உதவியோ ஒப்பீட்டினுடைய உதவியோ அதற்குக் கிடையாது. ஒரு பொருளைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டாலே போதும். அப்படி செய்ததும் அது புலநுணர்வாகிவிடும்"***

இந்த நடைமுறையானது அடிப்படையில் வாய்மொழி மூலமான மாயா ஜாலாமாகவே இருக்கிறது. பொருளைச் சொல்வதன் மூலம் கவிஞன் இதைச் செய்துவிடுகிறான். இது எல்லாக் கவிதைகளினதும் ஆணிவேராக


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இருக்கிறது. வேறு இடங்களிலுள்ள கவிஞர்களின் மனங்களில் மேற்பரப்பிலிருந்து இது காணப்படுகிற ஆழத்தை விடக் குறைந்த ஆழத்தில் ஆபிரிக்காவில் உள்ள கவிஞர்களின் மனதில் இது காணப்படுகிறது.

கல்வியறிவு ஆபிரிக்காவிற்கு மிக அண்மைக்காலத்தில் வந்து சேர்ந்ததும் மரபுவழியாக கிரியைகள், நடனம், பாட்டு, கவிதை மற்றும் கதைகள் நிரம்பிவழியும் ஒரு சமூகத்தின் அங்கமாக அவன் இருப்பதும் இதற்குக் காரணமாகின்றன. அண்மையிலே வில்லியம் ஃபார் மற்றும் ஃபிராங் விலெற் ஆகியோர் எழுதிய கட்டுரை ஒன்றிலே ஆபிரிக்க சிற்பிகள் அழியக்கூடிய மூலப்பொருள்களில் வேலை செய்வதால் கடவுளுடனான தம் தொடர்பாடலைப் புதுப்பிக்கும் விதத்திலே தமது உற்பத்திகளையும் புதுப்பிக்க வேண்டியிருக்கிறது என எழுதியிருக்கிறார்கள்.

இதேபோன்றதொரு மனப்போக்கையே செங்ஹொரும் வெளிப்படுத்தியிருக்கிறார். தனது கவிதைகள் பிரதான மரபு நீரோட்டத்தினுள் செல்லும் விதத்திலே, தன் கவிதைகள் மரபு வழி முறையிலே இசையுடன் பாடப்படும் பொழுது பெரிதும் மகிழ்ச்சியடையும் செங்ஹெர் கவிதா மொழிநடை பற்றிக் கூறும் பொழுது,

***"ஒரு கவிதை என்பது ஜாஸ் இசைக் குறிப்பைப் போன்றது. இசைக் குறிப்பைப் போலவே அதனைச் சரியாக இசைப்பதும் முக்கியமானதாகும். ஒரு கவிதையானது இசையும் இணைந்ததாக பாடப்படாதவரை அது முழுமை பெறும் என்று நான் நினைக்கவில்லை" எனக் கூறியிருக்கிறார்.***

கொங்கோ என்ற கவிதையிலே அச்சுமையின் 'நிரந்தரதன்மை' யை சந்தத்தோடு இசைப்பதன் நிரந்தரத்தன்மையோடு ஒப்பிட்டு இவ்வாறு ஏளனமாகத் தெரிவிக்கிறார்.

ஓஹோ...! கொங்கோ ஓஹோ...!

நினைவுகள் என்ற நதிகளில்

உன் அற்புதமான பெயரை

ஒலிக்கச் செய்வதால்


கோறஸ் கெயாற்ரேயின் குரலை

இரவல் கொள்ளவா...?

எழுதுவோனின் மைக்கு

நினைவுகளில்லை.

■



முகிலிறங்கித் தவழும் முலையென
கிடக்கிறது மலை.
பனி விழுந்த பச்சை இலைகளின் மேல்
வெளிச்சம் தூவுறான் வெய்யோன்.
காலுக்கடியில் கலகலத்தவாறு
ஓடுகிறது நீரோடை.
தரையழகோடு கிடக்கும் மரங்கள் தழுவி
போகும் வழியில்
ஈர இதழ் கொண்டு என்னையும் உரசி
மன்மத தேசம் போகிறது மலைக்காற்று.
என்னூருக்கில்லாத எழில் கொண்டு
இலங்கிறது இவ்வூர்.
"காணக் கோடிவிழி காணாது" என
இங்கொருநாள் வாழ்ந்தவனே எழுதியிருப்பான்.
இத்தனை அழகும் எனக்குமுரியதென
எத்தனை கவிதை எழுதியிருப்பேன்.
பொய்யாகி
பொசுக்கெனத் தெறித்துப் போனது
அக்கவிதையை.
வாழ்வின் இறுதியிலாயினும்
இங்கு வாழ்ந்திறக்க அவாவுற்றேன்.
என் கனவில் கல்லெறிந்து கலைத்தனர்
பாவியர்.
மீண்டுமொருமுறை பார்க்கக் கிடைத்ததே
போதுமெனக்கு.
இனி என்னூரின் நாயுருவிப் பற்றையிடையே
இலந்தை மரத்தின் சிறுநிழலின் கீழே
படுத்தபடி உயிர் நீக்கும் பாக்கியம் தா.
நேற்றென் பூட்டனையும்,
பாட்டனையும்,
நாளை எந்தையையும் எரிக்கும் சுடலையில்
நானும் எரியும் வரம்வேண்டும்.
தருவாயா இறைவா?

மாலிகா

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தமிழர் விடுதலை வரலாற்றில் ஜூலை நினைவுக் குறிப்பு

பண்டா- செல்வா ஒப்பந்தம்:

26.07.1957 அன்று பண்டா- செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

துரோகி அல்பிரட் துரையப்பா சுட்டுக் கொலை:

தமிழினத் துரோகி அல்பிரட் துரையப்பா 27.07.1975 அன்று சுட்டுக் கொல்லப்பட்டார்.

1979.07.20 அன்று ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சிக் காலத்தில் தமிழருக்கெதிராக, மிகக் கொடூரமான பயங்கரவாதத் தடைச்சட்டம் அமுல்படுத்தப்பட்டது.



மூத்த தளபதி லெப்.சீலன் வீரச்சாவு:

ஆரம்பகாலந் தொட்டு இயக்க வளர்ச்சிக்காக தலைவருக்கு உறுதுணையாக இருந்த மூத்த தளபதி சீலன், புலிகளின் தாக்குதற் படையணியின் முதலாவது தளபதியாவார். மீசாலையில் சிங்களப்படையினரின் முற்றுகையில் காயப்பட்டு தப்பமுடியாத நிலையில் தன்னைச் சுட்டுவிட்டு ஆயுதத்தோடு தப்பும்படி சக தோழனுக்கு கட்டளையிட்டு, புலிகளின் வீரமரபு ஒன்றிற்கு வித்திட்டு 15.07.1983 அன்று வீரச்சாவடைந்தார்.

திருநெல்வேலிக் கண்ணிவெடித் தாக்குதல்:

1983.07.23 அன்று யாழ். திருநெல்வேலியில் வைத்து சிங்களப் படையினரின் இராணுவ வண்டி மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கண்ணிவெடித் தாக்குதலில் 13 படையினர் கொல்லப்பட்டனர். இவ்வரலாற்றுச் சிறப்புமிக்க தாக்குதலில் விடுதலைப் புலிகளின் தரப்பில் மூத்த தளபதி செல்லக்கிளி அவர்கள் வீரச்சாவடைந்தார்.



கறுப்பு யூலை:

ஜே.ஆர். ஜெயவர்த்தனா அவர்களது ஆட்சிக் காலத்தில், தமிழ் மக்களது வீடுகள், கடைகள், உடமைகள் என்பன பட்டியலிடப்பட்டு சிங்களக் காடையர்களால் எரியூட்டி அழிக்கப்பட்டன. 1983 யூலை 24ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட் இவ்வன்முறைகளால் 2000 வரையான தமிழர்கள் கொல்லப்பட்டனர். 5000 வரையான தமிழர்களது கடைகளும் 1800 வரையான வீடுகளும் அழிக்கப்பட்டன. சிறைகளில் இருந்த 53 தமிழ்க் கைதிகள் வெட்டிக் கொல்லப்பட்டனர். 600 வரையான தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்டனர். இவை தொடர்பான சரியான புள்ளிவிபரங்களை சிங்கள அரசு மூடிமறைத்து விட்டது.



விடுதலைப் புலிகளின் ஆயுதப்போராட்டத்தின் புதிய பரிமாணமாக முதன் முதலாக நெல்லியடியில் அமைந்திருந்த சிறீலங்கா படைமுகாம் மீது கரும்புலிதாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது. 05.07.1987இல் கரும்புலி கப்டன் மில்லர் இவ்வீரசாதனையைப் படைத்து காவியமானார்.

தமிழீழ விடுதலைப் போரட்டத்தை வேரோடு பிடுங்கி எறியும் நோக்கோடு 29.07.1987 அன்று ராஜீவ் காந்தியும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டனர். இவ்உடன்படிக்கையின் விளைவாக 8000 தமிழர்கள் வரை கொல்லப்பட்டனர்.

முதன்முதலாக தமிழீழக் கடற்பரப்பில் 10.07.1990 அன்று விடுதலைப் புலிகளால் ஓர் கடற்கரும்புலித்தாக்குதல் நடாத்தப்பட்டது. சிறீலங்காக் கடற்படையின் 'எடித்தாரா' கட்டளைக் கப்பலைத் தகர்க்கவென மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் கடற்கரும்புலிகளான மேஜர் காந்தரூபன், கப்டன் கொலின்ஸ், கப்டன் வினோத் ஆகிய போராளிகள் காவியமாகினர்.

சிறீலங்காவில் இரு தேசங்களுக்கிடையேயான யுத்தம் என உலகநாடுகளால் வர்ணிக்கப்பட்ட ஆகாய கடல் வெளிச்சமர் (ஆ.க.வெ) 1990.07.10இல் ஆரம்பமானது.

கிண்ணியடிப் படுகொலை:

தமது வீடுகளில் தங்கியிருந்த இளைஞர்களை சிறீலங்காவின் விசேட அதிரடிப்படையினர் கடத்திச் சென்று படுகொலை செய்தனர். ஆர். பிரேமதாசா அவர்களது ஆட்சிக்காலத்தில் 1991.07.12அன்று மேற்கொள்ளப்பட்ட இக்கொடூரச் செயலில் 12தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

வெற்றிலைக்கேணியில் இருந்து ஆனையிறவுவரை ஓர் இராணுவ வேலியை அமைக்கும் நோக்கோடு 'பலவேகய-2' என்னும் படை நடவடிக்கையில் சிறீலங்காப் படையினர் ஈடுபட்ட போது 05.07.1992 அன்று சிறீலங்கா விமானப்படையின் வை-8 ரக விமானம் ஒன்று விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

மண்கிண்டி மலை சிங்கள இராணுவ முகாம் அழிப்பு:

25.07.1993 அன்று இதய பூமி இராணுவ நடவடிக்கை என்று தலைவரால் பெயர் சூட்டப்பட்டு. மண்கிண்டிமலை இராணுவ முகாம்மீது தாக்குதல் நடாத்தப்பட்டது. இது மிகப் பெரிய வெற்றியை புலிகள் இயக்கத்திற்கு ஈட்டிக் கொடுத்தது. இம்முகாமின் வீழ்ச்சி மணலாறு மாவட்டத்தில் சிங்களக் குடியேற்றத்திற்கு ஒரு பலத்த அடியாக விழுந்தது.

இராசவீதிக் குண்டுவீச்சு:

டி.பி.விஜயதுங்கா அவர்களது ஆட்சிக்காலத்தில் 1993.07.27 அன்று வீதிவழியாகப் பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்த மாணவர்கள் மீது சிறீலங்காவின் விமானப்படையினர் மேற்கொண்ட குண்டுவீச்சுத் தாக்குதலில் 4பள்ளிச் சிறுவர்கள் உட்பட 6பேர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர்.

17-07-1995 அன்று விடுதலைப் புலிகளின் நீரடி நீச்சல் பிரிவுக் கரும்புலிகளால் காங்கேசன்துறை துறைமுகப் பகுதியில் வைத்துச் சிறீலங்காக் கடற்படையின் 'எடித்தாரா' என்னும் கட்டளைக் கப்பல் சிதறடிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் 'ஓயாதஅலைகள்-1' தாக்குதல் மூலம் முல்லை சிங்களப் படை முகாம் 18.07.1996 அன்று தாக்கி அழிக்கப்பட்டு முல்லைப் பிரதேசம் இராணுவ ஆக்கிரமிப்பற்ற பிரதேசமாக மாற்றப்பட்டது.



கட்டுநாயக்கா தாக்குதலில் 28 விமானங்கள் அழிந்தன:

கட்டுநாயக்கா விமானத்தளம் மற்றும் சர்வதேச விமான நிலையம் என்பவற்றின் மீது 24.07.2001 அன்று மேற்கொள்ளப்பட்ட அதிரடித்தாக்குதல் சிறீலங்கா அரசை இராணுவ மற்றும் பொருளாதர ரீதியில் ஆட்டம் காணச் செய்தது. பலமான பாதுகாப்பு வேலிகளையும், அரண்களையும் ஊடறுத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் சிறீலங்கா விமானப் படையின் 22 விமானங்களும், அரசின் ஏயர்லைன்ஸ் நிறுவனத்தின் 6விமானங்களுமாக மொத்தம் 28 விமானங்கள் அழிவையும், சேதத்தையும் சந்தித்தது. இத்துணிகரத்தாக்குதல் காரணமாக சிறீலங்கா அரசுக்கு 4000 கோடி ரூபாவுக்கு மேல் நட்டம் ஏற்பட்டது.


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# மீள்பார்வை மே

## 01.05.2003



01.05.2003 அன்று யாழ்ப்பாணத்தில் மிகப்பிரமாண்டமான முறையில் மேதினப்பேரணி நடைபெற்றது. பெருந்தொகையான மக்கள், சாரை சாரையாக அனைத்துப் பகுதிகளில் இருந்தும் வந்து கலந்துகொண்டனர் எனவும், பலபகுதிகளில் இருந்தும், ஊர்திப்பவனிகள் நல்லூரை வந்தடைந்தன எனவும், பின் அங்கிருந்து யாழ் மத்தியகல்லூரி மைதானத்தைச் சென்றடைந்தன எனவும் தெரிவிக்கப்படுகின்றது. அரசியல்கட்சிகள், பொது அமைப்புக்கள், சங்கங்கள், மாணவர் அமைப்புக்கள் என்பன ஒன்றாக இணைந்து நடத்திய மிகப் பிரமாண்டமான இந்த ஊர்வலத்தில், சமாதானத்தை வலியுறுத்தும் பதாகைகள் காவிச்செல்லப்பட்டன. சமாதானத்தை வலியுறுத்தியும், சமாதான விரோதிகளைச் சாடியும் கோசங்கள் எழுப்பப்பட்டன.

## 07.05.2003



யப்பானின் சிறப்புத் தூதுவர் திரு. யகுசி அகாசி அவர்கள் 07.05.2003 அன்று, வன்னி சென்று, தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். அன்று காலை, சிறீலங்கா விமானப்படையின் விசேட உலங்குவானூர்தியில், கிளிநொச்சி சென்றடைந்த யப்பானின் சிறப்புத் தூதுவர் யகுசி அகாசி அவர்களுடன், இலங்கைக்கான யப்பானியத் தூதுவர், மற்றும் தூதரக அதிகாரிகளும் உடன் சென்றிருந்தனர்.



## 12.05.2003

2000ம் ஆண்டு கொழும்பில், சிங்களப்பேரினவாதிகளால் திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்ட மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களின் துணைவியாரையும், அவர்களின் பிள்ளைகளையும் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் 12.05.2003 அன்று சந்தித்தார். மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களின் மாமனிதர் விருதினையும், அதற்கான ஆவணத்தையும் தேசியத் தலைவர் அவர்கள், மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் துணைவியாரிடம் கையளித்து, குடும்பத்தினரை கௌரவித்தார்.

## 19.05.2003

19.05.2003 அன்று இரத்தினபுரி, காலி, மாத்தறைப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள பெருவெள்ளம் மண்சரிவு காரணமாக, இருநூறு பேர் வரையில் இறந்துள்ளனர் எனவும், ஐநூறு பேர்வரையில் காணாமல் போயுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இரத்தினபுரியிலேயே வெள்ள அனர்த்தம் தீவிரமாக உள்ளது எனத் தெரிவிக்கும் செய்திகள், இரண்டாயிரம் வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன எனவும், ஐம்பதினாயிரம் குடும்பங்கள் வீடுகளைவிட்டு வெளியேறியுள்ளன எனவும் தெரிவிக்கின்றன.

## 15.05.2003



நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் திரு. ஜோன் பீற்றர்சன் அவர்கள் 15.05.2003 அன்று வன்னி சென்று, தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களைச் சந்தித்து நீண்ட நேரம் கலந்துரையாடியுள்ளார். மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளுமாறும், திரு. ஜோன் பீற்றர்சன் அவர்கள் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

## 23.05.2003

23.05.2003 அன்று தெற்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, விடுதலைப் புலிகள் நேரடியாகச் சென்று நிவாரண உதவிகளை வழங்கினர். தமிழீழத் தேசியத் தலைவரின் வேண்டுகோளின்பேரில், பொது ஸ்தாபனங்கள், பொதுமக்களால் வழங்கப்பட்ட நிவாரண உதவிகளைக் கொண்ட வாகன அணிகள், பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று, விநியோக நடவடிக்கைகளில் ஈடுபட்டது. இவ் விநியோக நடவடிக்கைகளில் விடுதலைப் புலிகள் நேரடியாக ஈடுபட்டனர்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



### வீதிமறியல் போராட்டம்:



வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில், சிங்களப்படையினர் புதிதாக இராணுவ முகாம் அமைத்துவருவதை கண்டித்து, 02.06.2003 அன்று பொதுமக்கள் வீதிமறியல் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர். மாணவர்கள், பொதுமக்கள், கடற்றொழிலாளர்கள் இணைந்து, இம்மறியல் போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

### நெதர்லாந்து, சுவிஸ், பிரித்தானியா ஆகிய நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்கள் வன்னியில்:

நெதர்லாந்து, சுவிஸ், பிரித்தானியா ஆகிய நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்கள் 04.06.2003 அன்று வன்னி சென்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். சமாதான முயற்சிக்கான தமது தீவிர ஆதரவைத் தெரிவித்ததுடன், சமாதானப் பேச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற தமது விருப்பத்தையும், ஆவலையும் மீண்டும் வலியுறுத்தினர்.

### தமிழீழ மாணவர் எழுச்சிநாள்:

06.06.2003 அன்று தமிழீழப் பகுதி எங்கும், தமிழீழ மாணவர் எழுச்சி நாள் நிகழ்வுகள் மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளன. யாழ் குடாநாட்டிலும், மாணவர் எழுச்சிப் பேரணிகள், பொதுக்கூட்டங்கள் என்பன நடைபெற்றுள்ளன. தமிழீழத் தேசியக் கொடியைப் பறக்கவிட்டு, மாணவர்கள் தமது எழுச்சி நிகழ்வுகளை மேற்கொண்டனர். சிங்கள இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதிகளிலும், தமிழீழ மாணவர்கள் தேசியக் கொடியான புலிக்கொடியைப் பறக்கவிட்டனர்.

### இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு ஆரம்பம்:

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இரண்டு நாள் மாநாடு, 09.06.2003 அன்று யப்பானில், விடுதலைப் புலிகள் கலந்துகொள்ளாமலேயே ஆரம்பமாகியது. மாநாட்டை தொடக்கிவைத்துப் பேசிய யப்பானியப் பிரதமர், அமைதி நடவடிக்கை குலையாமல் இருக்கும் பட்சத்திலேயே இலங்கைக்கான உதவி தொடர்ந்து கிடைக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

### சிறீலங்காப் பொலிஸார் இருவர் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்:

மட்டக்களப்பு செங்கலடியில், வாழைச்சேனை வீதியில், சிறீலங்காப் பொலிஸார் இருவர் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். அரசகட்டுப்பாட்டுப் பகுதியில் 10.06.2003 அன்று, வீதிக்கடமையில் இருந்தபோதே இவர்கள் இருவரும் கடத்தப்பட்டனர். விடுதலைப் புலிகளே இவர்கள் இருவரையும் கடத்திச்சென்றுள்ளனர் எனவும், இவர்களின் விடுதலைக்காக அண்மையில் சிறீலங்காப்படையினரால் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் புதுார் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளரின் விடுதலையை விடுதலைப் புலிகள் நிபந்தனையாக விதித்துள்ளனர் எனவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்திருந்தன.

### பூரண கதவடைப்பு, கடமை மறுப்புப் போராட்டம்:

12.06.2003 அன்று, மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில், தமிழ்ப் பகுதிகளில், மட்டக்களப்பு மக்கள் பெருமன்றத்தின் ஏற்பாட்டில், பூரண கதவடைப்பு கடமை மறுப்புப் போராட்டம் நடைபெற்றுள்ளது. பொது மக்களின் இப்போராட்டம் காரணமாக, இரண்டு மாவட்டங்களும் முற்றாக செயல் இழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. அரசியல் பணியில் ஈடுபடும் விடுதலைப் புலிகளை சிங்களப்படையினர் கைது செய்வதைக் கண்டித்தும், படையினரின் சோதனைக் கெடுபிடிகள் தீவிரமடைந்திருப்பதையும், கடத்தல் பாணியில் குடும்பத்தினருக்குத் தெரியாமல் பொதுமக்கள் வீதிகளில் வைத்து கைதுசெய்யப்பட்டு கொண்டு செல்லப்படுவதைக் கண்டித்தும் இப்போராட்டம் நடத்தப்பட்டுள்ளது. இரண்டு மாவட்டங்களிலும், அன்று, போக்குவரத்துக்கள் யாவும் முற்றாகச் செயலிழந்தன. பாடசாலைகள், அரச தனியார் அலுவலகங்கள் இயங்கவில்லை. வர்த்தக ஸ்தாபனங்கள் முற்றாக பூட்டப்பட்டுக்கிடந்தன. கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் இப் போராட்டத்தில் முன்னணிப் பங்கு வகித்தனர்.

### புலிகளின் சரக்குக்கப்பல் ஒன்று, சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து சிங்களக் கடற்படையினரால், தாக்கி மூழ்கடிக்கப் பட்டுள்ளது:

விடுதலைப் புலிகளின் சரக்குக்கப்பல் ஒன்று, சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து சிங்களக் கடற்படையினரால், 14.06.2003 அன்று காலை, தாக்கி மூழ்கடிக்கப்பட்டுள்ளது. சர்வதேசக் கடற்சட்டங்களையும் மீறி, விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசுக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் மீறி சிங்களக் கடற்படை மேற்கொண்ட தான்தோன்றித்தனமான, அடாத்தான இந்நடவடிக்கை, நெருக்கடி நிலைக்குள் சிக்குண்டுள்ள தற்போதைய சமாதான முயற்சியை மேலும் மோசமான கட்டத்திற்குள் கொண்டு சென்றுள்ளதென அவதானிகள் கருத்துத் தெரித்தனர். மீண்டும் போர் ஒன்றிற்கான வழியை, சிங்களக்கடற்படை வேண்டுமென்றே திறந்துவிட்டுள்ளதா என்ற கேள்வியை சமாதான ஆர்வலர்கள் எழுப்பினர். சர்வதேசக் கடலில், தமது கப்பல் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து, விடுதலைப் புலிகள் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர். தாக்கப்பட்ட சரக்குக் கப்பலில் இருந்த விடுதலைப் புலிகளின் பன்னிரண்டு மாலுமிகள், உயிர்காப்பு அங்கிகளை அணிந்தபடி, கடலில் குதித்தனர் எனவும், அவர்களைச் சிறீலங்காக் கடற்படையினர் கைதுசெய்துள்ளனர் எனவும் தெரிவிக்கும் விடுதலைப் புலிகள், இவர்கள், சிறீலங்காப் படையினரால் மோசமாக நடத்தப்படுவர் எனத் தெரிவித்ததுடன், இதுவிடயத்தில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு உடன் தலையிடவேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

### பயங்கரவாதத் தடுப்புப்பிரிவின் புலனாய்வுப் பிரிவின் தலைமையதிகாரியான இன்ஸ்பெக்டர் காலை சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்:

கொழும்பின் புறநகர்ப் பகுதியான தெகிவளையில், தெகிவளைப் பொலிஸ் நிலையத்தின் பயங்கரவாதத் தடுப்புப்பிரிவின் புலனாய்வுப் பிரிவின் தலைமையதிகாரியான இன்ஸ்பெக்டர் சுனில் தாப்புறா என்பவர் 23.06.2003 அன்று காலை சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இவரைச் சுட்டுக்கொன்ற இளைஞர், பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்ட நிலையில் சயனைட் உட்கொண்டார் எனவும், இவர் ஆபத்தான நிலையில் தெகிவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் . சுட்டுக்கொல்லப்பட்ட மேற்படி புலனாய்வுப் பிரிவு இன்ஸ்பெக்டருக்கும், அவரைச் சுட்டுக்கொன்ற இளைஞனுக்கும் நன்கு பழக்கம் இருந்துள்ளதெனவும், சில வருடங்களாக அவர்கள் நெருங்கிய தொடர்பை வைத்திருந்தனர் எனவும் சொல்லப்படுகின்றது.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு:











யாழ்ப்பாணத்தில், 27.06.2003 அன்று, பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்ச்சி, வரலாறு காணாத பெருந்திரளான மக்கள் கலந்துகொள்ள மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளது. குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் மக்கள் காலையில் இருந்து, யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட வளாகத்தை நோக்கி சாரைசாரையாக படையெடுக்க ஆரம்பித்தனர். தமிழீழத் தேசியத் தலைவரின் பெரியளவிலான உருவப்படத்தைத் தாங்கியபடி பேரணி களாகவும் மக்கள், மைதானத்தை நோக்கிச் சென்றனர். மைதானத்தில் அமைக்கப்பட்ட பிரமாண்டமான, மேடையில், இராணுவச் சீருடையில் தமிழீழத் தேசியத் தலைவர் தோன்றும் பெரியளவிலான உருவப்படம் நடுநாயகமாக விளங்கியது. சுமார் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் நிகழ்வில் கலந்துகொண்டனர் என மதிப்பிடப்பட் டுள்ளது. பொங்கு தமிழ் நிகழ்விற்கு அனைத்துத் தரப்பும் முழுமையான ஆதரவு வழங்கி, நிகழ்வு சிறப்பாக நடைபெற பெரும் துணையாக நின்றன.

எங்கள் நிலம் எமக்கு வேண்டும், என்ற தொனிப்பொருளில், நாங்கள் எங்கள் வீடுகளுக்குச் செல்ல இராணுவமே நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள் என்ற கோரிக்கையுடன் நடத்தப்பட்ட இப்பெருநிகழ்வின் இறுதியில், பொங்கு தமிழ் 2003க்கான பிரகடனம் வாசிக் கப்பட்டது.

www.tamileelamarchive.com

யப்பான் தூதுவர், அரசியல்துறைப் பொறுப்பாளர் சந்திப்பு:

இலங்கைக்கான யப்பான் தூதுவர் திரு. சிஇசிரோ ஒற்சுகா அவர்கள், 30.06.2003 அன்று கிளிநொச்சி சென்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

விடுதலைப் புலிகள் மீண்டும் பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டும் என்ற தமது விருப்பத்தை, யப்பானியத் தூதுவர், திரு. தமிழ்ச்செல்வனிடம் தெரிவித்தார். யப்பான் மாநாட்டு விடயங்கள் குறித்தும் அவர் திரு. தமிழ்ச்செல்வனிடம் எடுத்து விளக்கினார்.

கனடா நாட்டின் தூதுவர், அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் சந்திப்பு:

இலங்கைக்கான கனடா நாட்டின் தூதுவர் வலேரி றேமன் அம்மையார், 03.07.2003 அன்று கிளிநொச்சி சென்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். சந்திப்பு ஆக்கபூர்வமானதாகவும் நல்லமுறையிலும் அமைந்ததாக, கனேடியத் தூதுவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தையின் தற்போதைய நிலை குறித்து கேட்டறிந்து கொண்ட கனேடியத் தூதுவர், சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லவேண்டியதன் அவசியம் குறித்து, திரு.தமிழ்ச்செல்வனிடம் எடுத்துக்கூறினார்.

சமாதானப் பேச்சுவார்த்தை ஊடாக, இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் உறுதிப்பாட்டுடன் இருப்பதாக, கனேடிய தூதுவரிடம் எடுத்துக்கூறிய திரு. தமிழ்ச்செல்வன், சிறிலங்கா அரசு இடைக்கால நிர்வாகம் தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கும் பட்சத்தில், பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள விடுதலைப் புலிகள் தயாராகவே இருக்கின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.



## கரும்புலிகள் நாள்:






தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் காத்திரமான ஒவ்வொரு வளர்ச்சிப்படிநிலையையும் தம்மின்னுயிரை அர்ப்பணித்துப் படைத்த அதி உன்னத தியாகிகள் கரும்புலிகளை, எமது தேசம் 05.07.2003 அன்று வணங்கி நிற்கின்றது. 1987ம் ஆண்டு, நெல்லியடியில், ஆக்கிரமிப்புப் படைமுகாமை, சென்று தாக்கி நிர்மூலமாக்கிய கரும்புலி கப்டன் மில்லர் வீரச்சாவடைந்த நாளில், தேசத்தின் ஒவ்வொரு வெற்றியின் பின்னாலும், தமது உயிர் பாச்சி நிற்கின்ற கரும்புலிகள் அத்தனை பேரையும் எமது நாடு தலைசாய்த்து வணங்குகின்றது.

தமிழீழத்தின் அனைத்துப்பகுதிகளிலும், கரும்புலிகள் நாள் நிகழ்வுகள் மிகவும் உணர்வுபூர்வமாக நடைபெற்றன. நெல்லியடியில், கப்டன் மில்லர் வீரச்சாவடைந்த பகுதியில், சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்நிகழ்வில், ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர். இதுபோன்று அனைத்துப் பகுதிகளிலும், நினைவுநாள் நிகழ்வுகள் நடைபெற்றன.


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


**திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளிற்கும் சிறீலங்கா படையதிகாரிகளுக்கும் இடையே முக்கிய சந்திப்பு:**



திருகோணமலை மாவட்டத்தில், கட்டைபறிச்சான் சூனியப் பிரதேசத்தில், விடுதலைப் புலிகளிற்கும் சிறீலங்கா படையதிகாரிகளுக்கும் இடையே 09.07.2003 அன்று முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றது. கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் திரிக்கி தெல்வ்சன் தலைமையில் இச்சந்திப்பு இடம்பெற்றது. விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பதுமன் தலைமையில், மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக் உட்பட மேலும் இரு போராளிகள் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர். சிறீலங்காப்படை தரப்பில் பிரிகேடியர் சேனாதீர தலைமையில் இராணுவ அதிகாரிகள் கலந்துகொண்டனர். குரங்குபாஞ்சான் பகுதியில், இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகள் முகாம் அமைத்துள்ளனர் எனவும், அதனை அவர்கள் அகற்றவேண்டும் எனவும் சிறீலங்கா தரப்பில் முன்வைக்கப்பட்ட வாதத்தை விடுதலைப் புலிகள் இச்சந்திப்பில் முற்றாக நிராகரித்தனர். குரங்குபாஞ்சான் பகுதி, தமது கட்டுப்பாட்டுப்பகுதி என வாதிட்ட விடுதலைப் புலிகள், புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலப்பகுதியில், கண்காணிப்புக்குழுவிடம் தமது கட்டுப்பாட்டுப்பகுதிகள் என வரையறுக்கப்பட்டு, தம்மால் கையளிக்கப்பட்ட வரைபடத்தில், குரங்குபாஞ்சான் பகுதி, தமது பகுதியில் உள்ளடக்கப்பட்டிருப்பதை விடுதலைப் புலிகள் எடுத்துக்கூறினர். இப்பிரச்சினைக்கு தீர்வு ஏற்படாமலேயே கூட்டம் முடிவடைந்தது.

**வீரச்சாவடைந்த போராளி மாலுமிகளின் பெயர்விபரங்களை விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ளனர்:**

ஜூன் மாதம் 14ம் திகதி, அதிகாலை, சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து, விடுதலைப் புலிகளின் வணிகக்கப்பலை சிங்களக் கடற்படையினர் தாக்கி மூழ்கடித்த சம்பவத்தில் வீரச்சாவடைந்த போராளி மாலுமிகளின் பெயர்விபரங்களை விடுதலைப் புலிகள் 12.07.2003 அன்று வெளியிட்டுள்ளனர். லெப்டினன்ட் கேணல் அன்புக்குமரன் (வல்லிபுரம் சிவக்குமார், ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை), லெப்டினன்ட் கேணல் செந்தமிழ்(சின்னராசா சிவரூபன், வெற்றிலைக்கேணி), லெப்டினன்ட் கேணல் கதிர்(செல்வரட்னம் சசிதரன், சாவகச்சேரி), லெப்டினன்ட் கேணல் கஜேந்திரன்(நல்லையா கிறிஸ்ணன் கபில் தினேஸ், கிளிநொச்சி), மேஜர் நிர்மலன்(ரணராஜா ரகுநாத், நெடியகாடு, வல்வெட்டித்துறை), மேஜர் கன்னியநாடான்(பொன்னம்பலம் கிருபாகரன், பளை), மேஜர் வள்ளுவன்(துரைரட்னம் சைலீஸ்வரன், ஏழாலை), மேஜர் நிமால்(தங்கராஜா செல்வகுமார், பரந்தன்), மேஜர் மணியரசன் (முத்துலிங்கம் லவகுமார், முல்லைத்தீவு), மேஜர் வீரநாதன்(தங்கராஜா தயாநிதி, மாங்குளம்), கப்டன் செழியன் (சொக்கலிங்கம் ஜெகன், கிளிநொச்சி), மோகன் (முல்லைத்தீவு) ஆகியோரே இச்சம்பவத்தில் வீரச்சாவடைந்தவர்கள் என விடுதலைப் புலிகளின் செய்தியறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மூத்த தளபதி, மாவீரர் லெப்டினன்ட் சீலன் அவர்களின் இருபதாம் ஆண்டு நினைவெழுச்சி நாள்:**






விடுதலைப் புலிகளின் மூத்த தளபதியும், முதல் தாக்குதல் பிரிவுத் தளபதியுமான மாவீரர் லெப்டினன்ட் சீலன் அவர்களின் இருபதாம் ஆண்டு நினைவெழுச்சி நாள் நிகழ்வில், தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள், கலந்து கொண்டார். வன்னியில், பிரத்தியேகமான ஓர் இடத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட நினைவு நாள் நிகழ்வில் கலந்துகொண்ட தேசியத் தலைவர் அவர்கள், லெப்டினன்ட் சீலனின் பெரியளவிலான உருவப்படத்தை திரைநீக்கம் செய்து வைத்து, ஈகச்சுடரேற்றி தனது நினைவுவணக்கத்தைச் செலுத்தினார். மாவீரர் லெப்டினன்ட் சீலனின் தாயாரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டார்.
லெப்டினன்ட் சீலன், மற்றும் அவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட வீரவேங்கை ஆனந் ஆகியோரின் நினைவுத் தூபி, 15.07.2003 அன்று மீசாலையில் திறந்துவைக்கப்பட்டது. யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி நினைவுத் தூபியைத் திரைநீக்கம் செய்துவைத்தார்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டி 2003



## டென்மார்க்





மாலதி தமிழ்க் கலைக்கூடம் நாடத்தி வரும் மெய்வல்லுனர் போட்டிகளில் இந்த வருடத்திற்கான போட்டிகள் பியுன் மாநிலத்தில் 07-06-2003 அன்றும், யூலண்ட் மாநிலத்தில் 14-06-2003 அன்றும் சிறப்புறநடந்தேறியிருந்தது

இரு மாநிலங்களிலும் இடம்பெற்ற மெய்வல்லுனர் போட்டிகளில் மாணவர்கள் மிகவும் உற்சாகத்துடன் பங்கு பற்றிக்கொண்டதோடு, பெற்றோர்களும் ஆசிரியர்களும் மிகவும் ஆர்வத்துடன் செயலாற்றியும் இருந்தனர். போட்டிகளில் முடிவில் பங்கு பற்றிய மாணவர்களுக்கு பதக்கம் அணிவிக்கப்பட்டதோடு, வெற்றி பெற்ற முதல் மூன்று மாணவர்களுக்கு சான்றிதல்கள் வழங்கப்பட்டதோடு சிறந்த வீர, வீராங்கனைகளுக்கான வெற்றி கிண்ணங்களும் வழங்கி சிறப்பிக்கப்பட்டது, இறுதியாக தேசியக்கொடி இறக்கலுடன் யாவும் முடிவுக்கு வந்தன.





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




# எரிமலை

கலை பண்பாட்டு அரசியல் சமூக சஞ்சிகை

விடுதலை வேட்கை மிக்க
எழுச்சிப் படைப்புக்கள்,
ஒடுக்குமுறைக்கு
எதிரான ஆவேசக்குரல்,
போர்க்கால இலக்கியத்தின்
யதார்த்தப் பதிவு,
மண்ணின் மணத்தோடு
மன உணர்வுகளை
வெளிப்படுத்தும் உன்னத
இலக்கியமாக எரிமலை

www.erimalai.com
Fax: (33) 1 43 58 11 91
Email: erimalai@erimalai.com
ERIMALAI, C/O T.C.C France,
341, Rue Des Pyrenees, 75020 Paris, FRANCE.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




www.tamileelamarchive.com